


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

மாத இதழ்

*திருவள்ளுவராண்டு 2049*

*மலர் - 10 இதழ் - 1 - ஏப்ரல் - 2018*

கௌரவ ஆசிரியர்

முனைவர் **அ.அ.மணவாளன்**

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ்.சண்முகநாதன்*
*தி.ரெத்தினசபாபதி*
*அ.கணேசன்*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி.சரவணன்*

இதழ் வடிவமைப்பு

*ஞா.சரிதா*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00 அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
*என்ற பெயரில் அனுப்பலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600098.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## பொருளடக்கம்


படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன் - 5

சிதைந்தவை சிலைகள் மட்டுமா?
உதயை மு.வீரையன் - 13

இயங்கியல் கண்ணோட்டத்தில் இந்திய வரலாறு
சி.ஆர்.ரவீந்திரன் - 17

தேர்ந்த கலைஞனின் மாறுபட்ட பார்வை
உஷாதீபன் - 23

அரசு பற்றிய மார்க்ஸீயக் கொள்கை
நா.வானமாமலை - 27

பாவலரேறு பெருஞ்சித்திரனார் எனும் சொல்...!
ஜெ.மதிவேந்தன் - 31

குறிஞ்சிப்பாட்டில் மலர்களும் பயன்பாடும்
முனைவர் த.பரமேஸ்வரி - 45

மார்க்சியத் திறனாய்வும் தமிழ் இலக்கியமும்
பா.ஆனந்தகுமார் - 53

இந்துமத நூல்கள் பாடிய இசுலாமியப் புலவர்கள்
முனைவர் இரா.வெங்கடேசன் - 57

பளியர் வாழ்வும் சமூகக் கட்டமைப்புகளும்
முனைவர் கோ.ஜெயக்குமார் - 61

பழந்தமிழ் மக்களின் மனைகளும் வடிவமைப்பும்
பழனிக்குமார் - 67

லெனின் காலத்தில் அவர் பற்றிய படைப்புகள்
பெரணமல்லூர் சேகரன் - 71

சிலப்பதிகாரம் வழக்குரை காதை
பண்டைத் தமிழர் நீதிமுறை
அத்திவெட்டி வே.சிதம்பரம் - 74

# படித்துப் பாருங்களேன்...


ஆ. சிவசுப்பிரமணியன்

Prashant Jha (2017)
How the B.J.P. Wins

Juggernaut, Delhi



பிரசாந்த் ஜா




பிரசாந்த் ஜா (2017)
பா.ஜ.க. எவ்வாறு வெற்றி பெறுகிறது

**தே**சிய ஜனநாயகக் கூட்டணி (என்.டி.ஏ) என்ற அரசியல் கூட்டணியில் தலைமை வகிக்கும் பி.ஜே.பி. இன்று இந்தியாவை ஆளுகிறது. இக்கூட்டமைப்பு என்பது பெயரளவுக்குத்தான். உண்மையில் பி.ஜே.பி. என்ற கட்சியின் ஆட்சிதான் நடைபெறுகிறது.

2014-இல் நடைபெற்ற 16-ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் அது பெற்ற வெற்றி குறிப்பிடத்தக்க ஒன்றாகும். 1984-ஆவது ஆண்டிற்குப் பின் நடந்த பாராளுமன்றத் தேர்தல்களில் அறுதிப் பெரும்பான்மை பெற்ற கட்சியாக அது விளங்குகிறது. மொத்தம் உள்ள 543 பாராளுமன்றத் தொகுதிகளில் 428 தொகுதிகளில் போட்டியிட்டு 282 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. எஞ்சிய தொகுதிகளில் அது தலைமை வகிக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகள் போட்டியிட்டன. பி.ஜே.பி. போட்டியிட்ட தொகுதிகளில் மொத்தம் 31.1 விழுக்காடு வாக்குகளைப் பெற்றுள்ளது.

மொழி அடிப்படையில் நோக்கினால் இந்தி மொழி பேசும் இமாச்சலப்பிரதேசம், உத்திரகாண்ட், உத்திரப்பிரதேசம், பீகார் (பீகாரி + இந்தி), ஜார்கண்ட், சத்தீஸ்கர், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், அரியானா, டில்லி ஆகிய மாநிலங்களில் 225 தொகுதிகளில் போட்டியிட்டு 190 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. (இது ஒருவகையில், இந்தி பேசுவோருக்கும் இக்கட்சிக்கும் இடையிலான உறவை வெளிப்படுத்துகிறது எனலாம்)

இந்தி பேசப்படாத பகுதிகளில் 318 தொகுதிகளில் போட்டியிட்டு 92 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. இப்பகுதிகளில் இது பெற்ற வாக்குகள் 22 விழுக்காடாகும்.

•••

இக்கட்சி பொதுத்தேர்தல்களில் எவ்வாறு வெற்றி பெறுகிறது என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று. 'எதிரிகளிடம் இருந்தும் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்' என்ற மாக்சிம் கார்க்கியின் கூற்றிற்கேற்ப, பி.ஜே.பியின் தேர்தல் வெற்றிக்குப் பின்னால் உள்ள அதன் செயல்பாட்டை ஆராய்வது அவசியமான ஒன்று. இவ்வாறு ஆராய்வதென்பது அதன் கோட்பாடு களையோ, நடைமுறைகளையோ ஏற்றுக்கொள்வது ஆகாது.

## நூலின் நோக்கம்

தேர்தலில் வெறும் வாக்குகளின் எண்ணிக்கையே ஒரு கட்சியின் இருப்பைத் தீர்மானிக்கிறது என்ற மோசமான நடைமுறைக் கருத்து இன்று மேலோங்கி வருகிறது. இத்தகைய சமூகச் சூழலில் சென்ற ஆண்டு (2017) வெளியான இந்நூல் பின்வரும் வினாக்களை எழுப்பி விடைகாண முயல்கிறது:

- பிரதமர் நரேந்திர மோடியின் வெகுசனக் கவர்ச்சியின் இரகசியம் எது?
- பி.ஜே.பி. அறிமுகப்படுத்திய பணமதிப்புக் குறைப்பு 2017-இல் நடந்த உத்திரப் பிரதேச மாநிலச் சட்டமன்ற தேர்தலில் எவ்விதப் பாதிப் பையும் அக்கட்சிக்கு ஏற்படுத்தாதது ஏன்?
- தேர்தல்களில் ஆர்.எஸ்.எஸ்.சின் பங்களிப்பு என்ன?
- மதவாதத்தைத் தூண்டுவது வாக்குகளைப் பெற உதவுமா?
- பி.ஜே.பி. கட்சித்தலைவர் அமித்ஷாவின் தேர்தல் மேலாண்மை எத்தகையது?
- இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் பி.ஜே.பி.யின் வளர்ச்சி எவ்வாறு உள்ளது?

இவ்வினாக்களுக்கு விடைதேடலே இந்நூலின் முக்கிய நோக்கமாக அமைந்துள்ளது.

## நூலாசிரியர்

இந்நூலின் ஆசிரியரான பிரசாந்த் ஜா 'இந்துஸ்தான் டைம்ஸ்' இதழில், இதழியலாளராகப் பணிபுரிந்து வருகிறார். நேபாள நாட்டின் தற்போதைய அரசியல் வரலாறு குறித்து 'பேட்டில்ஸ் ஆஃப் தி நியூ ரிபப்ளிக்; ஏ காண்டம்பரரி ஹிஸ்டரி ஆஃப் நேபாள்' என்ற தலைப்பில் நூலொன்று எழுதியுள்ளார்.

மேற்கூறிய வினாக்களுக்கு விடைதேடும் முயற்சியில், பி.ஜே.பி மற்றும் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள், தேர்ந்த அரசியல் அவதானிப்பாளர்கள், வாக்காளர்கள் ஆகியோரைச் சந்தித்து உரையாடி யுள்ளார். பல்வேறு மாநிலங்களின் செய்தி அறிக்கை களையும் படித்தறிந்து பயன்படுத்தியுள்ளார்.

## நரேந்திர மோடி

இன்று பி.ஜே.பி கட்சியிலும், ஆட்சிப்பொறுப்பிலும் அதன் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ்சிலும் தலை வர்கள் பலர் இருந்தாலும், பொது மக்களின் ஈர்ப்பைப் பெற்ற ஒரே தலைவராக இந்தியப் பிரதமர் பதவி வகிக்கும் நரேந்திர மோடிதான் உள்ளார். அவரது முழுமையான பெயர்கூட உச்சரிக்கப்படுவதில்லை. அவரது பெயரின் பின்னொட்டான 'மோடி' என்ற பெயராலேயே அவர் அழைக்கப்படுகிறார். மோடி என்ற பின்னொட்டுடையோர் பலர் இருப்பினும் இன்று மோடி என்பது பிரதமர் நரேந்திரமோடியை மட்டுமே குறிக்கும் சொல்லாக விளங்குகிறது. அத்துடன் பா.ஜா.க.வின் தேர்தல் களத்தில் வாக்குகளை ஈர்க்கும் சொல்லாகவும் உள்ளது.

## மோடி அலை

1980-களிலும் 1990-களின் தொடக்கத்திலும் பா.ஜ.க. அமைப்பில் மிகுந்த செல்வாக்குடைய தலை வராக விளங்கியவர் கே.என். கோவிந்தாச்சாரியார், இந்திய அரசியல் குறித்துப் பின்வருமாறு அவர் குறிப் பிட்டார்:

- அரசியல் என்பது அதிகாரத்துக்கு இணையானது
- அதிகாரமானது தேர்தலில் முகிழ்க்கிறது.
- தேர்தல்கள்; பிம்பங்களின் போர்க்களம்
- ஆகையால் அரசியலானது பிம்பங்களைச் சுற்றியே சுழல்கிறது.

இவ்வகையில் பா.ஜ.க. தன் அரசியல் பிம்பமாக நரேந்திர மோடியைக் கொண்டுள்ளது. மேலும் ஒரு தலைவருக்கு, சிக்கலான காலகட்டங்களில் துணைநிற்க நிறுவனக் கட்டமைப்பும், பொருளியல் பின்புலமும், தொழில்நுட்பமும் தேவையென்று கோவிந்தாச்சாரியார் குறிப்பிடுவார்.

அதற்கேற்ப 'சங் பரிவாரம்' என்ற அமைப்பு மோடிக்குத் துணைநிற்கிறது. ஏராளமான பொருள்வளம் உள்ளது. தொழில்நுட்பம் கொண்டோரும் அவர்களிடம் மிகுந்துள்ளனர். இத்தொழில்நுட்பமானது தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், சமூக ஊடகங்கள் எனப் பரந்த அளவில் வெளிப்படுகிறது.

இம்மூன்றின் துணையுடன் பிரதமர் நரேந்திர மோடியின் பிம்பம் கட்டமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது. மோடியின் பிம்பமே மோடி அலையாக உருவெடுத்துள்ளது.

சங் அமைப்புகளுக்கு அவர் ஓர் 'இந்துத்' தலைவர். நகர்ப்புற மத்தியதர வர்க்கத்தினருக்கு, முன்னேற்றத்தையும், வேலைவாய்ப்பையும் தருபவர். தேசியவாதிகளுக்கு பாகிஸ்தானுக்குப் பாடம் கற்பிப்பவர். ஏழைகளுக்கு பணக்காரர்களிடம் இருந்து எடுத்துத் தருபவர். அத்துடன் ஏழைகளின் அன்றாடத் தேவைகள் குறித்து சிந்திப்பவர். அவரது 'மான்கிபாத்' நிகழ்ச்சியைப் பல்லாயிரக்கணக்கான இந்தியக் குடிமக்கள் மாதம் தோறும் தொலைக்காட்சியில் காண்கிறார்கள். அரசியலுக்கு அப்பாற்பட்டவராகவும், நல்லொழுக்க ஆசிரியராகவும், வாழ்க்கை வழிகாட்டியாகவும் காண்கிறார்கள். இதர பிற்படுத்தப்பட்ட சாதியினர் (ஓ.பி.சி.) தங்களுள் ஒருவராகவே அவரைக் கருதுகின்றனர். மேல்சாதிக்காரர்களோ, 'வலிமையான இந்தியா' என்ற தம் கனவை நிறைவேற்றுபவராகக் காண்கின்றனர்.

இவை அனைத்தும்தான் மோடியின் பிம்பமாக அமைந்து இந்தியாவின் பொதுத்தேர்தல்களில் மோடி அலையாக உருவெடுத்துள்ளன.

2017-இல் உத்திரப்பிரதேச மாநில சட்டப் பேரவைக்கு நடந்த பொதுத்தேர்தலில் முதல்அமைச்சர் வேட்பாளர் என்று யாரையும் அறிவிக்காமலேயே பா.ஜ.க. போட்டியிட்டது. இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன.

முதலாவது சமாஜ்வாதிக் கட்சியின் அபிலேஷ் யாதவ், பகுஜன் சமாஜ் கட்சியின் மாயாவதி போன்று உத்திரப்பிரதேசம் முழுவதும் செல்வாக்குள்ள ஒரு தலைவர் பா.ஜ.கவில் இல்லை.

இரண்டாவது, முதல்வர் பதவிக்கான வேட்பாளராக, ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவரை அறிவிக்கும் போது ஏனைய சாதியினரின் வெறுப்பை எதிர்கொள்ள நேரிடும்.

இச்சிக்கலை எதிர்கொள்ளும் வழிமுறையாக பிரதமர் மோடியை முன்னிறுத்தி தேர்தல் பரப்புரையை பா.ஜ.க. மேற்கொண்டது.

•••

2001-ஆம் ஆண்டின் இறுதியில் முதலமைச்சராக, குஜராத் சட்டமன்றத்தில் நுழைந்த மோடி 2014-இல் இந்தியப் பாராளுமன்றத்தில் பிரதமராக நுழைந்தார். ஒரு புதிய அரசியல் பிம்பமாகவும், இந்துக்களின் உள்ளங்களில் ஆட்சி செலுத்துபவராகவும் அடையாளம் காட்டப்பட்டார்.

இது குறித்து, அவரை ஆதரித்தோர் தெளிவான காரணம் எதையும் முன்வைக்கவில்லை என்று கூறும் நூலாசிரியர், அவர் மீதான அளவு மீறிய நம்பிக்கையும், தனிமனிதர் ஒருவர் மீதான கவர்ச்சியும் மேலோங்கி இருந்தன என்கிறார்.

இந்நம்பிக்கையானது மிகுந்த கவனத்துடன் கட்டமைக்கப்பட்ட ஒன்றாகும் என்றும் கூறுகிறார். 'இந்துக்களின் இதயத்தில் ஆட்சி புரிபவர்' என்ற பட்டமும் அவருக்கு இடப்பட்டது. 'வளர்ச்சி' என்ற சொல்லுடனும், 'குஜராத் முன்மாதிரி' என்ற சொல்லுடனும் இணைத்தே அவர் பேசப்படுகிறார். 'ஏழைகளின் தலைவர்' என்றும் கூட அவரைக் குறிப்பிடலாயினர். அவர் பதவிக்கு வருமுன் இருந்த, தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சூட்கேஸ் பண்பாட்டை ஒழித்தவர் என்ற புகழாரமும் உண்டு.

இந்தப் புகழாரங்கள்தான் 2017 உத்திரப்பிரதேச சட்டமன்றத் தேர்தலில் அவரைத் தேர்தலின் நாயகனாக நிலைநிறுத்தின.

**உ.பி. தேர்தல்**

உத்திரப்பிரதேச பா.ஜ.க.வின் முக்கிய போட்டியாளர்களாக 'காங்கிரஸ்', 'சமாஜ்வாதி', 'பகுஜன்' என்ற மூன்று கட்சிகள் விளங்கின. இம்மூன்று கட்சிகளையும் 'கசாப்' என்று பா.ஜ.க. குறிப்பிட்டது. KASAB என்ற சொல்லில் இடம்பெறும் KA என்ற இரண்டு எழுத்துக்கள் காங்கிரஸ் கட்சியையும், S.A. என்ற இரு எழுத்துக்கள் சமாஜ்வாதி கட்சியையும் குறித்தன. B என்ற எழுத்து பகுஜன் கட்சியைக் குறித்தது.

முஸ்லீம்களை, சந்தேகத்துக்குரியவர்களாகவும், பயங்கரவாதிகளாகவும் சித்தரித்த பா.ஜ.க. இப்படிப்பட்டவர்களை ஆதரிப்பவர்களே 'கசாப்கள்' என்றது. இஸ்லாமியர்களிடம் இருந்தும் பயங்கரவாதத்தில் இருந்தும் உ.பி.யைக் காப்பாற்ற இந்துக்கள் விழித்தெழுந்து பி.ஜே.பிக்கு வாக்களிக்க வேண்டும் என்றது.

தேர்தல் பணிக்கான நிதி ஆதாரத்தை பா.ஜ.க. எவ்வாறு திரட்டியது என்பது குறித்து அக்கட்சியின் மாவட்ட அளவிலான தலைவர் ஒருவர் வாயிலாக அறிந்த செய்தியை நூலாசிரியர் குறிப்பிடுவது வருமாறு:

ஒரு கட்சியின் வேட்பாளர் ஒருவர் தன் தேர்தல் செலவுக்கான நிதி ஆதாரமின்றி இருந்தால் அவர்



தேர்தலில் வெற்றி பெறுவது எளிதல்ல. சமாஜ்வாதி, பகுஜன் கட்சி வேட்பாளர்கள் தம் தேர்தல் செலவு களைத் தாமே பார்த்துக் கொள்வர். ஆனால் பா.ஜ.க. வேட்பாளர்களின் தேர்தல் செலவினை கட்சியே பார்த்துக் கொள்ளும். கட்சியின் ஊழியர்களுக்கோ, சங் பரிவாரத்தின் பிரச்சாரகர்களுக்கோ அனுதாபிகளுக்கோ, விமானப் பயணம் மேற்கொள்ளும் நட்சத்திரப் பேச்சாளர்களுக்கோ ஆகும் செலவை வேட்பாளர் செய்ய வேண்டியதில்லை. தேர்தல் பரப்புரை, விளம்பரம் தொடர்பான பொருட்கள் கட்சியிடம் இருந்தே வரும். இருப்பினும் தன் சொந்தப் பணத்தையும் அவர் செலவு செய்தாக வேண்டும்.

அரசு ஒப்பந்ததாரர்கள், கட்டிடம் கட்டுவோர் எதிர்காலத்தில் அரசு ஒப்பந்தங்கள், உரிமங்கள் பெற விழைவோர் நிதி வழங்குவர். பணமாக அன்றி பொருள் வடிவிலும் நன்கொடை கிட்டும். பெட்ரோல், டீசல் விற்பனையாளர்கள் எரிபொருள் வழங்குவர். போக்கு வரத்து நிறுவனம் நடத்துவோர் வாகனங்களைத் தந்துதவுவர். வணிகர்கள் ஹெலிகாப்டர்களை வாடகைக்கு எடுத்துத் தருவர். மத்திய அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர் களும் நிதிதிரட்டுதலில் முக்கியப் பங்கு வகித்தனர். பா.ஜ.க.வின் நிதி திரட்டும் முறை காங்கிரஸ் கட்சியின் நிதி திரட்டும் முறைக்கு மாறானது என்ற செய்தியையும் இந்த இடத்தில் நூலாசிரியர் பதிவு செய்துள்ளார்.

50 கோடி ரூபாய் தேவையென்று காங்கிரஸ் கட்சியின் தலைமை கருதினால் இச்செய்தியை முக்கிய பொறுப்பாளரிடம் கூறுவர். அவர் மூன்று அல்லது நான்கு முதல் அமைச்சர்களிடம் ஆளுக்கு 100 கோடி கேட்பார். அவர்கள் வணிகர்கள் ஒப்பந்ததாரர்கள் அதிகாரவர்க்கத்தினர் ஆகியோரிடம் நிதி ஏற்பாடு செய்யும்படிக் கூறுவர். மொத்தத்தில் 300 கோடி அளவு நன்கொடை பெறப்படும். இடையில் உள்ள பலர் ஆதாயம் பெற்றபின் தலைமை கேட்ட 50 கோடி சென்றடையும். நேரடியான தொடர்பில் இது நடை பெறாது என்பது பா.ஜ.க.வின் கருத்தாகும் என்கிறார் நூலாசிரியர்.

### உ.பி. தேர்தலும் மோடியும்

பணமதிப்புக் குறைப்புத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்ட பின்னரே உ.பியில் தேர்தல் நடந்தது. இத்தேர்தலை ஒட்டி முத்தாபாத் உட்பட ஆறு இடங்களில் நிகழ்ந்த பேரணிகளில் பிரதமர் மோடி கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார். இவ் உரைகளில் ‘வறுமை’, ‘ஏழை’ என்ற சொற்களைப் பலமுறை பயன்படுத்தியுள்ளார். பெருநகரங்களில் திரளாகக் கூடியிருந்த மக்களை ஈர்க்கும் வகையில் அவர் உரையாற்றியதை நூலாசிரியர் விவரித்துள்ளார்.

தன் உரையின் தொடக்கத்தில் உத்திரப்பிரதேச நாடாளுமன்றத் தொகுதியில் தான் ஏன் போட்டி யிட்டேன் என்பதை அவர் விளக்கினார். இந்தியாவில் வறுமையை ஒழிக்க விரும்பியதாகவும், அதன் முதல்படியாக உத்திரப்பிரதேசத்தின் வறுமையை ஒழிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அதன்பின் தன்னுடைய வழக்கமான பாணியில் கூட்டத்தைத் தன்பக்கம் ஈர்த்துக் கொண்டு “உங்கள் முஷ்டியை உயர்த்தி நேர்மையாகவும், உளப்பூர்வ மாகவும் தான் கேட்கும் கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும் என வேண்டினார். இவ்வேண்டுதலையடுத்து பின்வரும் வினாக்கள் அவரது உரையில் வெளிப்பட்டன.

- ஊழல், நாட்டை நாசமாக்கிவிட்டதா இல்லையா?

- இது கொள்ளைக்கு வழிவகுக்கவில்லையா?
- ஏழைகளுக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தி விட்டதல்லவா?
- ஏழைகளின் உரிமைகளைப் பறித்துவிட்ட தல்லவா?

மோடியின் இக்கேள்விகளுக்கு 'ஆம்' என்று மக்கள் திரள் கூவியது. மோடியின் கேள்விகள் மேலும் தொடர்ந்தன.

- இப்போது சொல்லுங்கள், ஊழல் இருக்க வேண்டுமா? வெளியேற வேண்டுமா?

  'போகவேண்டும்' என்று மக்கள்திரள் விடையளித்தது.
- அப்படியானால் சொல்லுங்கள். அது தானாக வெளியேறுமா? அல்லது மோடி நீங்கள் வந்து விட்டீர்கள். நான் பயந்துவிட்டேன். நான் போகிறேன் என்று சொல்லுமா?

  மக்கள்திரள் 'இல்லை' என்கிறது.
- அப்படி என்றால் ஊழலை விரட்ட கம்பெடுக்க வேண்டுமா இல்லையா?
- சட்டத்தைப் பயன்படுத்த வேண்டுமா இல்லையா?
- ஊழல்வாதிகளைத் தோற்கடிக்க வேண்டுமா இல்லையா?

  மக்கள் : ஆமாம்
- இந்த வேலையை நாம் மேற்கொள்ள வேண்டுமா இல்லையா?

  மக்கள் : ஆமாம்
- யாராவது இவ்வேலையைச் செய்தால் அது குற்றமா? அல்லது அவர் குற்றவாளியா?

  மக்கள் : இல்லை.
- எனக்கு வியப்பாய் உள்ளது. என்னுடைய சொந்த நாட்டிலேயே என்னைக் குற்றவாளி என்கிறார்கள்.
- ஊழலை எதிர்ப்பது என்னுடைய குற்றமா?
- ஏழைகளுக்காக நான் பாடுபடுவது குற்றமா?

  மக்கள் : இல்லை

  இதையடுத்து மற்றொரு அதிரடித்தனமான உரைக்கு மோடி போகிறார்.
- உங்களுக்காக ஒரு போரை நடத்துகிறேன்.
- இவர்கள் (எதிர்க்கட்சிகள்) என்னை என்ன செய்யமுடியும் சொல்லுங்கள்.


  ஓர் இடைவெளிக்குப் பின் அவர் பின்வருமாறு பதில் கூறுகிறார்.
- நான் ஒரு பக்கீர் என் மூட்டையைக் கட்டிக்கொண்டு போய்விடுவேன்.

  இதையடுத்து மக்கள் திரள் ஆரவாரம் செய்து 'மோடி' 'மோடி' என்று கூக்குரலிடுகிறது.
- இந்தப் பக்கிரித் தன்மைதான் ஏழைகளுக் காகப் போராடும் வலிமையைத் தந்துள்ளது. ஆனால் இத்துடன் இது முடிந்துவிடப் போவதில்லை.

பின்னர் 'ஜன்தன்' கணக்கை வங்கிகளில் தொடங்கும் படி தான் பரப்புரை செய்தபோது மக்கள் என்னை ஏளனம் செய்தார்கள் என்று கூறிவிட்டு:

ஆனால் இன்று பணக்காரர்கள் பழைய உறவு களைக் கூறிக்கொண்டு ஏழைகளின் வீடு தேடி வருகிறார்கள். ஏழைகளின் வங்கிக் கணக்கில் இரண்டு அல்லது மூன்று இலட்சம் ரூபாய்களை சேமிப்புத் தொகையாகச் செலுத்த அனுமதி கேட்கிறார்கள். ஏழைகளின் காலடியில் பணக்காரர்கள் மண்டியிடுவதை எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா? இன்று ஏழை களின் வீட்டு வாசலில் ஊழல்காரர்கள் வரிசையில் நிற்கிறார்கள். (இதையடுத்து வெளிப்படையான வேண்டுகோளை மக்கள் முன்வைக்கிறார்) 'யார் உங்களுக்குப் பணம் கொடுத்திருந்தாலும் ஒரு ரூபாய் கூடத் திருப்பித் தரவேண்டாம். நாள்தோறும் உங்கள் வீட்டிற்கு அவர்கள் வருவதை நீங்கள் பார்ப்பீர்கள்? நீங்கள் எதுவும் சொல்லாதீர்கள். கோபத்துடன் உங்களிடம் கத்த வேண்டாம் என்று கூறுங்கள். உங்களைப் பயமுறுத்தினால் மோடிக்கு எழுதி விடுவதாகக் கூறுங்கள். உங்களிடம் அவர்கள் பணம் கொடுத்ததற்கு சான்று எதுவும் உள்ளதா? என்று கேளுங்கள். உங்களிடம் வருவதை அவர்கள் நிறுத்தி விடுவார்கள். பணத்தை நீங்கள் வைத்திருங்கள். நான் ஒரு வழி காண்பேன். இதற்கான வழிகளை நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். சட்டவிரோதமாகப் பணத்தை உங்கள் கணக்கில் செலுத்தியவர்கள் சிறை செல்வார்கள். அந்தப்பணம் ஏழைகளிடம் தங்கிவிடும். (பின்னர் குறும்புச் சிரிப்புடன்) 'பணம்', 'பணம்' என்று நாள்முழுவதும் கூறுவதைப் பணக்காரர்கள் வழக்கமாகக் கொண்டிருப்பார்கள். தற்போது, 'மோடி', 'மோடி' என்றே அவர்கள் கூறுகிறார்கள். நோக்கம் (பணமதிப்புக் குறைப்பு) நல்லதென்றும் முயற்சி நேர்மையான தென்றும் இந்த நாட்டின் மக்கள் அறியும்போது அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுகிறது. (பக்கம். 23-24)

சில கிறித்தவ சபையினர் நடத்தும் நற்செய்திக் கூட்டத்தைப் போன்று பார்வையாளர்களுடன் தம்மை இணைத்துக்கொள்ளும் மோடியின் உரையைக் குறிப்பிடும் நூலாசிரியர் இவ்வுரையை மையமாகக் கொண்டு பின்வரும் கருத்துக்களை முன்வைக்கிறார்.




- பணமதிப்புக் குறைப்புடன் ஊழல்முடிந்து விட்டதா?
- கருப்புப் பணத்தில் ஒரு சிறுபகுதிதானே ரொக்கமாக உள்ளது?
- இச்செயல், சிக்கலான கொள்கை முடிவை தவறான முறையில் வெளிப்படுத்துவதாகாதா?
- மோடியை, கிரிமினல் என்று யார் கருது கிறார்கள்?
- தாமாகவே ஒப்பந்தம் ஒன்றை மற்றவர் களுடன் மேற்கொண்டவர்களை அதை மீறி, பணத்தைத் திருப்பித் தரவேண்டாம் என்று கூறுவது சரியா?

உ.பியில். அவர் கலந்துகொண்ட மற்றொரு தேர்தல் பரப்புரையில் மோடி ஆற்றிய உரையின் ஒரு பகுதியை நூலாசிரியர் மேற்கோளாகக் குறிப்பிட்டுள்ளது வருமாறு:

எல்லோருக்கும் நீதி கிடைக்க வேண்டும். உஜ்வாலா திட்டத்தின்படி நாங்கள் சமையல் எரிவாயு உருளை வழங்குகிறோம். மோடி வாரணாசி நாடாளு மன்ற உறுப்பினர் என்பதற்காக வாரணாசியில் வாழ் வோருக்கு மட்டுமே வழங்கப்படும் என்று நாங்கள் கூறவில்லை. உ.பி.யில் ஒவ்வொரு மூலையிலும் வாழ் வோருக்கு சம அளவில் வழங்கப்படுகிறது. இந்துக் களுக்குக் கிடையாது என்று கூறவில்லை. வரிசையில் நிற்கும் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுகிறது. இந்த சாதிக்குத்தான் உண்டு, இந்த சாதிக்குக் கிடையாது என்று கூறவில்லை.

பாகுபாடு காட்டுவதுதான் அநீதியின் வேராகும். உ.பியின். மிகப்பெரிய பிரச்சினை பாகுபாடு காட்டுவது தான். நீங்களே கூறுங்கள் பாகுபாடு காட்டுதல் உள்ளதா இல்லையா?

(கூட்டம், 'ஆம்' என்று கூவி ஆரவாரிக்கிறது) மோடி தொடர்கிறார்.

உ.பியில். தலித் ஒருவரிடம் கேட்டால் என்னுடைய பங்கை நான் பெறவில்லை. இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (ஓ.பி.சி.) எடுத்துக் கொண்டார்கள் என்பார். இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரோ நாங்கள் எங்கள் பங்கைப் பெறவில்லை. யாதவர்கள் எடுத்துக்கொண்டார்கள் என்பார்கள். யாதவர்களிடம் கேட்டால் சில குடும்பத்தினர் மட்டுமே எடுத்துக்கொண்டார்கள் எஞ்சியது முஸ்லீம்களிடம் போய்விட்டது. எங்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை என்பார்கள்.

இப்பாகுபாடு இனி நடவாது ஒவ்வொருவரும் அவர்களுக்கு உரியதைப் பெறுவார்கள்.

எனவேதான், ஒரு கிராமத்தில் கல்லறைத் தோட்டமோ கபுர்ஸதானோ (இஸ்லாமியரை அடக்கம் செய்யுமிடம்) உருவாக்கப்பட்டால் சுடுகாடும் உருவாக்கப்படும். ரம்ஜானின் போது மின்சாரம் வழங்கப்பட்டால் தீபாவளியின் போதும் அது வழங்கப்படும். ஹோலிப் பண்டிகையின் போது மின்சாரம் வழங்கப்பட்டால் அது ஈத் பண்டிகையின் போதும் வழங்கப்படும். எந்தப் பாகுபாடும் இராது. பாகுபாடில்லாத நிர்வாகத்தை வழங்குவதே அரசின் இலட்சியம். மதத்தின் அடிப்படையிலோ, சாதியின் அடிப்படையிலோ உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்பதன் அடிப்படையிலோ அநீதி எதுவும் இழைக்கப்படாது.

மோடியின் இவ்வுரையானது சாதி சமயம் சாராத ஒன்றாகும் என்று கூறும் நூலாசிரியர் தன் குடிமக்கள் அனைவரையும் சமத்துவமாக நடத்தும் அரசியல் அமைப்புக் கடமை சார்ந்தது என்கிறார். அதே நேரத்தில் 2002 குஜராத் கலவரத்தின்போது இக்கடமையை அவர் செய்யவில்லை என்ற விமர்சனம் உள்ளதையும் ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

**மதவாதம்**

அமித்ஷா மோடியைவிட வெளிப்படையாக இஸ்லாமியருக்கு எதிரான வெறுப்புணர்வை, தன் தேர்தல் பரப்புரையில் வெளிப்படுத்தியுள்ளதை அவரது உரைகளின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். அமெரிக்க

குடியரசுத் தலைவர் தேர்தலில் டிரம்ப் வெற்றி பெறுவதை வெள்ளையர்களே முடிவு செய்தார்கள். கருப்பர்களும், ஹிஸ்பானியர்களும், இஸ்லாமியர்களும் முடிவு செய்யவில்லை. அதுபோல் உ.பி.யிலும் இங்கு யார் ஆள்வது என்பதை இந்துக்களே முடிவு செய் வார்கள். இஸ்லாமியர் முடிவு செய்யப் போவதில்லை என்று தேர்தலின்போது குறிப்பிடப்பட்டது.

2012-ல் நிகழ்ந்த சட்டமன்றத் தேர்தலின் போது போட்டியிட்டு வென்ற இஸ்லாமிய சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 68 ஆகும். 2017-இல் 25 சட்டமன்ற உறுப்பினர்கள்தான் இஸ்லாமியர். இவர்களுள் ஒருவர் கூட ஆளும்கட்சியின் பா.ஜ.க.வை சேர்ந்தவர்கள் இல்லை.

உ.பி. தேர்தலில் இந்து முஸ்லீம் பிரச்சினை வெளிப்படையாக முன்வைக்கப்பட்டது போல் பீகார் தேர்தலில் முன்வைக்கப்படவில்லை. இந்து X முஸ்லீம் என்ற முரணைவிட முன்னேறிய சாதி X பிற்படுத்தப் பட்ட சாதி என்பதே மேலோங்கியிருந்தது என்றாலும், தேர்தல் பரப்புரையில் மத அடிப்படைவாதக் கருத்துக் களை பா.ஜ.க. முன்வைக்கத்தான் செய்தது. பீகாரில் பா.ஜ.க. தோல்வி அடைந்தால் தீபாவளியை பாகிஸ்தானில் கொண்டாட வேண்டும் என்று கூறினர். பா.ஜ.க.வின் தோல்வி பாகிஸ்தானில் கொண்டாடப் படும் என்பதே இதன் பொருள்.

பீகாரில் 1989-ஆம் ஆண்டு பகல்பூரில் நடந்த மதக்கலவரத்துக்குப்பின் பெரிய அளவிலான மதக் கலவரம் எதுவும் நிகழவில்லை. ஆனால் உ.பி.யில் அயோத்தி, காசி மதுரா என்ற நகரங்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமின்றி மத உணர்வைத் தூண்டும் தன்மையில் பயன்படும் இடங்களாகவும் மாற்றப்பட்டு உள்ளன.

### தேர்தல் அணிசேர்க்கை

உ.பி.யில் பா.ஜ.க., காங்கிரஸ், சமாஜ்வாதி என ஒவ்வொரு கட்சியும் தனக்கென வாக்களிக்கும் சமூகப் பிரிவுகளைக் கொண்டிருந்தன. இவற்றுள் மாற்றுக் கட்சி சார்ந்த சமூகப் பிரிவையும் எதிலும் சாராத சமூகப் பிரிவையும் தன்பக்கம் இழுப்பதில் பா.ஜ.க. தனிக் கவனம் செலுத்தியது.

உயர்சாதியினரின் கட்சி என்ற அடையாளம் பா.ஜ.க.வுக்கு இருந்தது. மண்டல் அறிக்கை நடை முறைப்படுத்தப்பட்டபின் இதர பிற்படுத்தப்பட்ட சாதியினர் ஓரணியாகத் திரளத் தொடங்கினர். விவசாயப் பின்னணி கொண்ட இம்மக்கள், எண்ணிக்கையில் மிகுந்தவர்களாக இருந்தனர். இவர்களை ஈர்க்கும் நடைமுறையை பா.ஜ.க. மேற்கொள்ளத் தொடங்கியது. உயர்சாதிப்பிரிவிடம் இருந்து ஓரளவுக்கு விலகி விட்டனர். இது ஒரு நடைமுறைத் தந்திரமே. மகாராஷ்டிராவிலும் ஹரியானாவிலும் அவர்கள் கையாளத் தொடங்கிய இம்முறையில் இதர பிற்படுத்தப் பட்ட சாதியினரின் வாக்குகளை குறிப்பிடத்தக்க விழுக்காட்டில் பெற்றனர்.

பீகார் சட்டமன்றத் தேர்தலுக்கு முன், ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன்பகவத் இட ஒதுக்கீடை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கூறியிருந்தார். லாலுப்பிரசாத் யாதவ் இக்கூற்றையும், கோல்வால்கார் எழுத்துக்களின் தொகுப்பில் இடம் பெற்றிருந்த கருத்துக்களையும் இணைத்து, இட ஒதுக்கீடுக்கு ஆர்.எஸ்.எஸ். எப்போதும் எதிரானது என்ற கருத்தைப் பரப்பினார். 2014 மக்களவைத் தேர்தலைப் போல் மோடி என்ற பெயருக்காக அனைத்து சாதியினரும் வாக்களிப்பர் என்ற பா.ஜ.க.வின் எதிர்பார்ப்பு பொய்த்துப் போனது.

தலித்துக்களின் கட்சியான பகுஜன் சமாஜ் கட்சியில் பல்வேறு தலித் உட்பிரிவுகள் இணைந் திருந்தன. இவற்றுள் வால்மீகி என்ற பிரிவு எண்ணிக் கையில் இரண்டாவது இடத்தில் இருந்தது. ஆனால் ‘ஜாதவாஸ்’ என்ற பிரிவினரே தலித் தொகுதிகளில் அதிக எண்ணிக்கையில் நிறுத்தப்பட்டனர். வால்மீகி பிரிவினரின் மனக்குமுறலை பா.ஜ.க. பயன்படுத்திக் கொண்டது. தலித்துக்களுக்கான தனித் தொகுதியில் பெரும்பாலான தொகுதிகளில் பா.ஜ.க. வெற்றி பெற்றது.

கீழ்நிலை மத்தியதர வர்க்கத்தின் எதிர்பார்ப்புகள் 5-4-3-2-1 என்று கணிதச் சமன்பாடு போல் குறிப்பிடப் பட்டது. 5 இலக்க ஊதியம், 4 சக்கர வாகனம், 3 படுக்கையறை கொண்ட பிளாட்கள், 2 குழந்தைகள், 1 மனைவி என்று இது விளக்கப்பட்டது. இது சாதிகளைக் கடந்த விருப்பமாக இருந்தது. இது நடைமுறைப் படுத்தக் கூடியதே என்ற நம்பிக்கை மோடியின் பெயரால் பரப்பப்பட்டது.

### ஆராயப்பட வேண்டியவை

தேர்தல்களில் பா.ஜ.க. எவ்வாறு வெற்றி பெறுகிறது என்பதையே இந்நூல் சித்தரிக்கிறது. தேர்தலில் வெற்றி பெற்ற பின் என்ன செய்கிறது என்பதை ஆராயவில்லை. இதனால் பா.ஜ.க. ஆட்சியில் நிகழும் பிரச்சினைக்குரிய நடவடிக்கைகளையோ, நிகழ்ச்சிகளையோ ஆராய்வதில் இருந்து இந்நூல் விலகியே நிற்கிறது என்று நூலின் தொடக்கத்திலேயே நூலாசிரியர் தம் நோக்கத்தை வரையறுத்துக் கொண்டுள்ளார். என்றாலும் மேலெழுந்தவாறு சில கருத்துக்களை நூலின் இறுதியில் (பக்கம்.224-228) அவர் விவரித்துள்ளார். இவை கவனத்துக்குரியன. ●





# சிதைந்தவை சிலைகள் மட்டுமா?

உதயை மு.வீரையன்

**ந**மது மக்கள் நன்றியுள்ளவர்கள் என்பதைக் காட்டுவதற்காகவே முன்னோரின் சிலைகள் பொது இடங்களில் வைக்கப்படுகின்றன. மனிதர்கள் நெறிதவறி நடக்கும்போது இந்தச் சிலைகள் அவர்களை எச்சரிக்கை செய்கின்றன. அவை மொழி, இனம், கட்சி, இயக்கம் அனைத்திற்கும் அப்பாற்பட்டவை; பொதுவானவை.

அவற்றைச் சிதைப்பது என்பது காட்டுமிராண்டித் தனமாகும். இந்தச் சிலைகளைப் பாதுகாப்பதன் மூலமாகவே நாம் நாகரிக மனிதர்கள் என்பதை நிலைநாட்ட வேண்டும். மௌனமாக நிற்கும் இந்தச் சிலைகளின் மீது வன்முறையை வாரியிறைப்பது பகுத்தறிவுக்கே புறம்பானது.

வடகிழக்கு மாநிலமான திரிபுராவில் கடந்த 25 ஆண்டுகளாக அமைதியான முறையில் ஆட்சி செய்து வந்த மாணிக் சர்க்கார் தலைமையிலான இடதுசாரி ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. பாஜக அங்கு ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

புதிய ஆட்சி பதவி ஏற்பதற்கு முன்பாகவே அந்த மாநிலத்தின் சில பகுதிகளில் வன்முறை வெடித்துள்ளது. இதில் தெற்கு திரிபுரா மாவட்டம் பெலோனியா நகரில் இருந்த முன்னாள் சோவியத் யூனியனின் முதல் அதிபர் லெனின் சிலையை பாஜக வின் வன்முறைக் கும்பல் இடித்துத் தள்ளியது.

இந்த நிகழ்வை மையமாக வைத்து பாஜகவின் தேசியச் செயலாளர் எச்.ராஜா தமது முகநூல் பக்கத்தில் ஒரு கருத்தினைப் பதிவு செய்தார். அவர் பதிவு செய்த கருத்து அரசியல் கட்சியினரையும், கட்சிக்கு அப்பாற்பட்ட அனைவரையும் திடுக்கிட வைத்தது.

'திரிபுராவில் லெனின் சிலைகள் அகற்றப் பட்டது போல தமிழ்நாட்டில் பெரியார் சிலை களும் அகற்றப்படும்' என்ற பதிவு அயர்ந்து கிடந்த தமிழ்நாட்டைத் தட்டி எழுப்பியது. நாடெங்கும் போராட்டம்: ஆர்ப்பாட்டம், எச்.ராஜாவின் உருவப்படங்கள் கொளுத்தப்பட்டன.

அனைத்துக் கட்சித் தலைவர்களும் கண்டனம் தெரிவித்தனர். 'மன்னிப்பு கேட்க வேண்டும்' என்று தமிழக முதல்வர் அறிவித்தார். எதிர்ப்புகள் வலுக்கவே பெரியார் பற்றித் தமது முகநூல் பக்கத்தில் வெளியான கருத்துக்கு பாஜகவின் தேசியச் செயலாளர் எச்.ராஜா வருத்தம் தெரிவித்தார்.

தன்னுடைய அனுமதியில்லாமல் இக்கருத்து வெளியிடப்பட்டதாக அவர் தெரிவித்தார். "தமிழ கத்தில் பெரியார் சிலைகள் அகற்றப்படும் என எனது முகநூல் பக்கத்தில் என்னுடைய அனுமதி யில்லாமல் வெளியாகியுள்ளது. அந்தப் பதிவை வெளியிட்ட முகநூல் அட்மினை பணியிலிருந்து நீக்கிவிட்டேன். என்னுடைய அட்மின் அதைப் பதிவு செய்திருந்தாலும் அதற்காக நான் இதய பூர்வமாக வருந்துகிறேன்" என்று அவர் செய்தி யாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே வேலூர் மாவட்டத்தில் பெரி யாரின் சிலை சில குண்டர்களால் சிதைக்கப் பட்டது. கோவை பாஜக அலுவலகம் மீது பெட் ரோல் குண்டு வீசப்பட்டது. திருவொற்றியூரில் அம்பேத்கர் சிலை மீது மை ஊற்றப்பட்டது. புதுக் கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் பெரியார் சிலையின் தலை துண்டிக்கப்பட்டது.

பெரியார் சிலை விவகாரம் தொடர்பாக தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்குப் பிரச்சினை ஏற்படாமல் அமைதி நிலவ தேவையான நடவடிக் கைகளை எடுக்க தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெரியார் சிலை தொடர்பாக பாஜக தேசியச் செயலர் எச்.ராஜா தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்தால் தமிழகத்தில் பதற்றமான சூழல் ஏற்பட்டு உள்ளது. இந்த விவகாரத்தால் ஏற்படும் பதற்ற நிலையைத் தணித்து அமைதியான சூழல் நிலவத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க காவல் துறை கோரப்பட்டிருந்தது.

திரிபுராவில் லெனின் சிலை தகர்க்கப்பட்ட நிகழ்வு நாடெங்கும் கொந்தளிப்பை ஏற்படுத்தி யுள்ளது. மேற்கு வங்கத் தலைநகர் கொல்கத்தாவில் ஜனசங்கம் நிறுவனர் ஷியாமா பிரசாத் முகர்ஜியின் சிலை உடைக்கப்பட்டுள்ளது. இதே போல் உத்தரப் பிரதேசத்தில் சட்டமேதை அம்பேத்கரின் சிலையை ஆளும் கட்சியின் குண்டர்கள் உடைத்து உள்ளனர்.

இவ்வளவும் நடைபெற்ற பிறகு, நாட்டில் சில பகுதிகளில் நடந்துவரும் சிலைகள் தகர்ப்பு சம்பவங் களுக்கு பிரதமர் மோடி தமது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார். இந்தச் செயல்களில் யாரேனும் ஈடுபட்டதாகத் தெரிந்தால் அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியுள்ளார்.

மேலும் சிலை தகர்ப்புச் சம்பவங்கள் நடை பெறாமல் தடுக்க வேண்டியது அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை கண்காணிப் பாளர்களின் கடமை என்று அனைத்து மாநில அரசுகளை அறிவுறுத்தி மத்திய உள்துறை அமைச்சகம் குறிப்பு ஒன்றையும் அனுப்பியுள்ளது.

நாடாளுமன்ற மாநிலங்கள் அவையிலும் இது எதிரொலித்தது. திரிபுராவில் லெனின் சிலை தகர்க்கப்பட்ட விவகாரம், தமிழகத்தில் பெரியார் சிலை சேதப்படுத்தப்பட்ட விவகாரம், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரும் விவகாரம் ஆகியவற்றை அதிமுக, திமுக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உறுப் பினர்கள் எழுப்பினர்.

திரிபுரா மாநிலத்தில் மாணிக் சர்க்கார் தலை மையில் இடதுசாரி முன்னணி 25 ஆண்டுகள் அமைதியாக ஆட்சி புரிந்தன. நடந்த தேர்தலில் பாஜக வெற்றி பெற்றதும் வன்முறை வீதிக்கு வந்து விட்டது. பிரதமர் மோடி தெரிவித்த 'சித்தாந்த வெற்றி' இதுதானா?

'ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசின் செயல்களை, அதே ஜனநாயக முறையில் தேர்வு செய்யப்பட்ட மற்றொரு அரசால் ரத்து செய்ய முடியும்' என்று திரிபுரா ஆளுநர் ததாகத் ராய் கருத்து தெரிவித்துள்ளார். காட்டுமிராண்டித் தனமான வன்முறைக்கு ஆளுநரே வக்காலத்து வாங்குகிறார்.

இந்த வன்முறைகள் இன்று, நேற்று திடீரென்று ஏற்பட்டதல்ல. தொடர்ந்துவரும் திட்டமிட்ட

தாக்குதல். 1992 திசம்பர் 6 அயோத்தியில் பாபர் மசூதி இடிப்பு முதல் இது தொடங்குகிறது.

25 ஆண்டுகள் அடங்கிக் கிடந்த பாஜகவினர் வெற்றி பெற்ற ஒரே நாளில் இடதுசாரிகளை ஒழித்துவிட களத்தில் இறங்கியுள்ளனர். கட்சி அலுவலகங்கள் தீயிட்டுக் கொளுத்தப்படுகின்றன. தோழர்கள் மீது கொலைவெறித் தாக்குதல் தொடர்கிறது. லெனின் சிலை மட்டுமல்ல, அம்பேத்கர் சிலையையும் தகர்த்துள்ளனர்.

'பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்' என்று மகாகவி பாரதி கூறியது இப்படிப்பட்டவர்களை எண்ணித்தானே? உலகம் எங்கும் பயங்கரவாதத்துக்கு எதிர்க்குரல் கொடுப்பவர்கள் உள்ளூரில் வன்முறையை ஊக்கப்படுத்துகிறார்கள்.

மக்களுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் எத்தகைய வன்முறையையும் எதிர்கொள்வர். பந்து அடிக்க அடிக்க எழுவது போல அவர்களும் எழுவார்கள்; எதிர்த்து நிற்பார்கள்.

தமிழர் வரலாற்றில் சிலைகள் வைக்கும் வழக்கம் பிற்காலத்தது என்றாலும் கல்வெட்டுகள் வைப்பதும், நடுகல் நாட்டுவதும் தொன்று தொட்டு தொடர்ந்துவரும் வழக்கமாகும். வீரத்தை மதிக்கும் சின்னமாகவும், வெற்றியைக் குறிக்கும் அடையாளமாகவும் இது இருந்து வந்துள்ளது.

ஆங்கிலேயர்களின் ஆட்சியில் சிலைகள் நாடெங்கும் வைக்கப்பட்டன. 'விடுதலையடைந்த நாட்டில் அவற்றை அனுமதிப்பதா? வேண்டாமா?' என்ற கேள்வி எழுந்தது. கொடுங்கோலர்களின் சிலைகள் அகற்றப்பட்டன. வரலாற்றின் அடையாளமாக இருப்பவை விட்டு வைக்கப்பட்டன.

தமிழ்நாட்டில் 1968இல் இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற போது சென்னைக் கடற்கரையில் 10 சிலைகள் வைக்கப்பட்டன. திருவள்ளுவர், ஔவையார், கம்பர், ஜி.யு.போப், கால்டுவெல், வீரமாமுனிவர், கண்ணகி, பாரதியார், பாரதிதாசன், வ.உ.சிதம்பரனார் ஆகியவர்கள் தமிழ்நாட்டின் அடையாளமாக நிறுத்தி வைக்கப்பட்டனர்.

மாநாட்டை நடத்திய முதலமைச்சர் அண்ணாவுக்கு 11ஆவது சிலையாக அண்ணா சாலையில் அமைக்கப்பட்டது. எம்.ஜி.ஆரால் அமைக்கப்பட்ட இந்தச் சிலை ஏ.இராமசாமி முதலியாரால் திறந்து வைக்கப்பட்டது.

1969இல் சென்னை தியாகராய நகரில் கலைவாணருக்கு சிலை திறந்து வைத்தார். அண்ணா அதுதான் அவர் பங்கேற்ற கடைசி பொது நிகழ்ச்சியாகும். பெரியார் கடைசியாகப் பேசியது தியாகராயநகர் அதனால் அங்கு அவருக்கு சிலை வைக்கப்பட்டது.

கிண்டி கத்திப்பாராவில் நேருவின் உருவச் சிலையை 1987 திசம்பர் 21 இல் பிரதமராக இருந்த ராஜீவ்காந்தி திறந்து வைத்தார். இதுதான் எம்ஜிஆர் கலந்து கொண்ட இறுதி நிகழ்ச்சியாக அமைந்தது.

இவ்வாறு ஆங்காங்கு சிலைகள் அமைக்கப்படுவது அவர்களுக்குச் செய்யப்படும் மரியாதையாகும். வழிபாடு செய்யவில்லை என்றாலும் வணக்கத்துக்குரியவர்கள். அடுத்தத் தலைமுறைக்கு அடையாளம் காட்டும் வரலாற்றுச் சின்னங்கள்.

அவற்றைச் சிதைப்பது அநாகரிகம் மட்டுமல்ல அறியாமை. இங்கே சிதைந்தவை சிலைகள் மட்டுமல்ல, மனிதநேயமும், நாகரிகமும், பண்பாடும். ●

## FORM - IV

Statement about ownership and other particulars about newspaper New Centuryin Ungal Noolagam to be published in the first issue every year after the last day March.

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | | : Chennai |
| 2. Periodicity of its Publication | | : Monthly |
| 3. Printer's Name | | : S.Sanmuganathan |
| | Nationality | : Indian |
| | Address | : Pavai Printers (P) Ltd., 16(142), Jani Jhan khan Road, Royapettah, Chennai - 14. |
| 4. Publisher's Name | | : Shanmugam Saravanan |
| | Nationality | : Indian |
| | Address | : New Century's Readers Sangam, 16 (142), Jani Jhan khan Road, Royapettah, Chennai - 14. |
| 5. Editor's Name | | : T.Stalin Gunasekaran |
| | Nationality | : Indian |
| | Address | : 16 (142), Jani Jhan khan Road, Royapettah, Chennai - 14. |

6. Names and addresses of individuals those who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.

I, Shanmugam Saravanan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Shanmugam Saravanan)

Signature of Publisher

# ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவையின் சார்பில்

## ‘தமிழக இளம் பேச்சாளர் மாநாடு’



மக்கள் சிந்தனைப் பேரவையின் சார்பில் ‘தமிழக இளம் பேச்சாளர் மாநாடு’ 11.03.2018 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரை ஈரோடு வேளாளர் மகளிர் கல்லூரியின் கஸ்தூரிபா அரங்கில் நடைபெற்றது.

மாநாட்டிற்கு மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர் த. ஸ்டாலின் குணசேகரன் தலைமையேற்றார்.

மாநாட்டின் தொடக்கமாக, தமிழகத்தின் தலைசிறந்த சொற்பொழிவாளர்களாகத் திகழ்ந்து மறைந்த 60 ஆளுமைகளின் திருவுருவப்படங்களை இலக்கியச் செல்வர் டாக்டர் குமரி அனந்தன் அவர்களும் பேராசிரியர் சோ. சத்தியசீலன் அவர்களும் மாநாட்டு மேடையில் திறந்து வைத்தனர்.

இம்மாநாட்டில், சொற்பொழிவுத் துறையில் தடம் பதித்த இலக்கியச் செல்வர் டாக்டர் குமரி அனந்தன் பேராசிரியர் சோ.சத்தியசீலன், டாக்டர் சரஸ்வதிராமநாதன் ஆகிய மூன்று பெருமக்களுக்கு ‘வாழ்நாள் சாதனையாளர் விருது’ வழங்கப்பட்டது.

இம்மாநாட்டின் சிறப்பு விருந்தினராகத் திகழ்ந்த ஜார்கண்ட் மாநில உயர்நீதி மன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி நீதியரசர் எம். கற்பகவிநாயகம் அவர்கள் விருதாளர்கள் மூவருக்கும் விருதினை வழங்கி மாநாட்டுச் சிறப்புரை நிகழ்த்தினார்.

விருதாளர்கள் மூவரும் சொற்பொழிவுக்கலை பற்றியும் அதில் தங்களது விதவிதமான அனுபவங்கள் குறித்தும் சிறப்புக் கருத்துரை வழங்கினர்.

மூத்த சொற்பொழிவாளர்களான விருதாளர்கள் மூவரும் சுடர்விட்டு எரிந்த ஜோதியை அடுத்த தலைமுறை இளம் பேச்சாளர்களிடம் வழங்கினர். தலா மூன்று இளம் பேச்சாளர்கள் வீதம் மொத்தம் 9 பேச்சாளர்களிடம் இச்சுடரை வழங்கினர்.

இம்மாநாட்டில் தமிழகத்தின் 32 மாவட்டங்களிலிருந்தும் 30 வயதிற்குட்பட்ட சுமார் 1,000 இளம் பேச்சாளர்கள் பிரதிநிதிகளாகப் பங்கேற்றனர். இதில் ஆடவர்-மகளிர் ஆகிய இருபாலரும் சம எண்ணிக்கையில் இருந்தனர்.

இம்மாநாட்டில் பங்கேற்ற 1000 பிரதிநிதிகளும் அவர்களின் விண்ணப்பப்படிவங்களையும் அவற்றுடன் இணைக்கப்பட்டிருந்த தகுதிச் சான்றிதழ்களையும் வைத்து ஐந்து பேர் கொண்ட தேர்வுக் குழுவால் தேர்வு செய்யப்பட்டவர்களாவர்.



# இயங்கியல் கண்ணோட்டத்தில் இந்திய வரலாறு

**சி.ஆர். ரவீந்திரன்**

**வி**ரிவான, நீண்ட நெடிய வரலாற்று வாழ்க்கையை உள்ளடக்கிய நாடு இந்தியா. இது பன்முகத் தன்மையில் ஒருமுகத் தன்மையை உள்ளடக்கியே வரலாற்றில் வாழ்ந்து வளர்கிறது, இதைக் கூர்ந்து நோக்கி ஆழமாகப் புரிந்து கொண்ட மகாகவி பாரதி, "பாரத பூமி பழம் பெரும் பூமி! நீரதன் புதல்வர்! இந்நினைவகற்றாதீர்!" என்று வியப்புடன் அறைகூவல் விடுத்தான்.

உலக வரலாற்று வளர்ச்சியில் இந்தியாவின் வாழ்க்கையை கி.மு. 1000 முதல் கி.பி. 1300 வரை சுமார் 2300 ஆண்டு அளவில் ஆய்வு செய்து அவற்றை ஒருங்கிணைத்து ஆவணப்படுத்தியிருக்கிறார் வரலாற்றாசிரியர் ரொமிலா தாப்பர். 'முற்கால இந்தியா' என்ற இந்த வரலாற்றை இவர், மீள் உருவாக்கம் செய்துள்ள முயற்சியையும் அதன் முக்கியத்துவத்தையும் தெளிவாகத் தொடக்கத்திலேயே குறிப்பிடுகிறார்: வரலாறு எழுதும் பணியைத் தொடங்கிய காலத்தில் உள்ளபடியே எழுதிய புத்தகத்தை, இப்போது வாழ்க்கையின் பிற்பகுதியில் திருத்தி எழுதும்போது தன் வரலாற்றுக் கூறுகளைப் பெற்று விடுகிறது. ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட நூலிற்குத் திரும்புதல், வரலாற்று வாசிப்பில் அடிப்படையான மாற்றங்கள் ஏற்பட்டுள்ள பழங்கால இந்தியா

என்னும் இல்லத்திற்கு என்னைக் கொண்டு வந்து சேர்த்துள்ளது. வரலாற்று வாசிப்பு மாற்றங்கள் சில புதிய தரவுகள் கிடைத்ததால் எழுந்தவை. இன்னும் பல ஏற்கனவே இருக்கின்ற தரவுகளைப் புதிதாகப் பொருள் கொண்டதால் எழுந்தவை. அந்த வாசிப்புக்கள் பற்றி நிறைய விவாதங்கள் நடந்துள்ளன. அவற்றில் நான் பங்கெடுத்துக் கொண்டதன் மூலம் அவ்விவாதங்கள் அக்கால கட்டத்தைப் பற்றிய என்னுடைய சொந்தப் புரிதல்களைச் செதுக்கின.

"என்னுடைய இந்த முயற்சி முற்றிலும் வேறொரு புத்தகத்தை எழுதாமல், தகவுடையது என நினைக்கும் வாசிப்புக்களை உள்ளே நுழைப்பது தான். ஆயினும் தவிர்க்கவியலாத வகையில் இப் புத்தகத்தில் நிறைய மாற்றங்கள் நேர்ந்துள்ளன." இதை நிறுவும் நோக்கத்தில் வியக்கத்தகுந்த விதத்தில் சாதனையாக்கியிருக்கிறார் வரலாற்றாசிரியர்.

காலந்தோறும் வரலாறு வாசிக்கப்படுகிறது. நிகழ்கால வெளிச்சத்தில் வரலாறு புதிய புதிய தோற்றங்களில் மிளிர்கின்றன. தொடர்ந்து வரலாறு புதிய உண்மைகளைப் புலப்படுத்துகின்றன.

ஒவ்வொருவருக்கும் அவரவர் அளவில் வரலாறு மதிப்பிற்குரியதாகவே தோன்றுகின்றன. மனிதனை அவனுடைய வரலாற்றுச் சூழலிலிருந்து பிரிக்க முடியாது அவன் தொடர்ந்து வரலாற்றில் இடைவிடாமல் இயங்கிக் கொண்டே இருக் கிறான். இதைப் புலப்படுத்துவதுதான் வரலாற்றின் தனிச்சிறப்பு. ஒவ்வொருவரும் தன்னிலிருந்தே தான் சார்ந்துள்ள புற உலகை உணர்ந்து அவனின் விருப்பு வெறுப்பு அடிப்படைகளிலான உறவை மையப்படுத்தித் தன்னுடைய வரலாறு பற்றிய கருத்தை வடிவமைத்துக் கொள்கிறான். இதனால், வரலாறு குறித்த கருத்துக்களும், மதிப்பீடுகளும் ஒன்றுக்கொன்று மாறுபட்டும், முரண்பட்டும் வாத விவாதங்களுக்கு உள்ளாகிறது. இது, அறிவியல் கண்ணோட்டத்திலிருந்து விலகி, கற்பனையான மதிப்பீடுகளுக்கு உள்ளாவதோடு தவறான ஊகங் களை வடிவமைக்கிறது.

இது தொடர்பாக, வரலாற்றாசிரியர் தன்னுடைய கருத்தை இப்படி முன்வைக்கிறார். "அந்த வரலாற்று ஆசிரியர்கள் யார், ஏன் அவர்கள் எழுதினார்கள். அவர்கள் எழுதிய வரலாறுகளை வடிவமைத்த அறிவுசார், கருத்து நிலைகள், செல் வாக்குகள் என்ன ஆகிய கேள்விகள் எழுப்பப் பட வேண்டும். இதுவே, இப்போது சுருக்கமாக வரலாற்றெழுதியல் என்று அழைக்கப்படுகிறது. வரலாறு என்பது தலைமுறை தலைமுறையாக மாற்றமில்லாமல் வந்து கொண்டிருக்கும் தகவல் அல்ல. வரலாற்றுச் சூழல்கள் விளக்கப்பட வேண்டி யவையாய் இருக்கின்றன. விளக்கங்கள் விவாத தருக்கத்திலிருந்து வெளிப்பட்ட பொதுமைகளை வழங்கும் சான்றுகளைப் பகுப்பாய்வு செய்வதி லிருந்து வருகின்றன. புதிய சான்றுகளால் அல்லது ஏற்கனவே இருக்கின்ற சான்றுகளுக்குப் புதிய பொருள்கள் கொடுப்பதால் பழமையைப் பற்றிய ஒரு புரிதலை நாம் அடையமுடியும்"

அறிவியல் கண்ணோட்டத்தின் அடிப்படையில் வரலாற்றின் வளர்ச்சியை விளக்க முன்வரும் வரலாற்றாசிரியர் மனித சமுதாய இயங்குதலை அதன் இயல்புகளோடு விளக்க முயற்சிக்கிறார். இந்த அடிப்படையிலேயே இவர் தமக்குக் கிடைத்த எல்லாவிதத் தகவல்களையும் ஒருங்கிணைத்து வரலாற்றை வடிவமைக்க முயற்சிக்கிறார். இந்த தனிப்பட்ட முயற்சியை 'முற்கால இந்தியா' ஆய்வு நூலில் முழுமையாகக் காணமுடியும்.

தன்னுடைய தெளிவான, உறுதியான கண் ணோட்டத்தின் வாயிலாக வரலாற்றை அறிவியலுக்கு நெருக்கமாகக் கொண்டு வருகிறார். "மனித அறிவியல்களில், வலியுறுத்தப்படுவது போன்று, யதார்த்தத்தை எண்ணிப்பார்த்தல் சமூக அளவிலும், பண்பாட்டு அளவிலும் கட்டுப்படுத்தப்படுகிறது என்றும் (மனிதச்) செயல்பாடுகள் பல்வேறு காரணி களைக் கொண்டுள்ளன என்றும் வாதிடப்படுவது மிக முக்கியமானது. அறிவு முன்னேற முன்னேற இந்த நோக்குகள் சில தவிர்க்கவியலாத வகையில் மாறும். நிகழ்காலத்தின் மீது கடந்த காலமும், கடந்த காலத்தின் மீது நிகழ்காலமும் எவ்வாறு மோதிக் கொள்கிறது என்ற விழிப்புணர்வை வரலாற்று விளக்கமே உருவாக்குகிறது.

மேலும், பழங்கால இந்திய வரலாறு, தொல்லியல் தரும் சான்றுகளைச் சார்ந்து, அதாவது மேற்பரப்பு ஆய்வின் வழியாகவும் அகழ்வாய்வின் வழியாகவும் கண்டுபிடிக்கப்பட்ட புழங்கு பொருள் எச்சங்கள் தொல்பொருள்கள் போன்ற பருப் பொருட் தன்மை உள்ள முப்பரிமாண ஆதாரங் களைச் சார்ந்து எழுதுவது அதிகரித்து வருகிறது.

தொல்லியல் தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதில் அறிவியல் துறைகளிலிருந்து பல்வேறு தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றால் அளிக்கப்படும் தகவலின் வளவாய்ப்பு, கால நிலை, சுற்றுச்சூழல், குடியிருப்பு அமைவு முறைகள், தொல் - நோய்க் கூறியல், தாவரங்கள் மற்றும் விலங்குகள் ஆகியவை பற்றிய தரவை உள்ளடக்கியதாக விரிந்து உள்ளது!


தொடர்ந்து, இவரே தொல்லியல் ஆய்வு முறைகளுக்கும், தொன்மங்களை ஆய்வு செய்யும் முறைகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை விளக்குகிறார். “மானிடவியலாளர்களால் தொன்மங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கும், இரத்த உறவு முறைகளை ஆய்வதற்கும் ஆதாரப் பொருள்களாகப் பயன்படுத்தப்படுகிற வாய்மொழி மரபுகள் பற்றிய ஆய்வுகள் - ஆய்வோடு தொடர்புடையது. தொன்மங்கள் பழைய காலத்திற்குப் பின்னோக்கிப் போகத் தேவைப்படுகின்ற ஒன்று மட்டுமல்ல, சில நேர்வுகளில் அவை பழைய கருத்துக்களைச் சுமந்து வருதல் கூடும். ஆனால், அவற்றினுடைய உறுதியற்ற கால வரிசையினாலும், அவை பொதுவாக நடந்த நிகழ்வுகளின் ஆவணங்கள் இல்லையென்ற உண்மையாலும், தொன்மங்களை வரையறுக்கப்பட்ட அளவில் மட்டுமே பயன்படுத்த முடியும். தொன்மமும், வரலாறும் ஒன்றுக்கொன்று எதிர்நிலையானவை, தொன்மம் மெய்யாக நடந்தவை பற்றியது அல்ல. ஆயினும் தொன்மத்தில் மறைந்து கிடக்கிற சமூக எதிர்பார்ப்புக்களை வெளிக்கொணருதல், சில வகையான வரலாறுகளை மீள் உருவாக்கம் செய்வது பயனுள்ளதாக அமையும். மிக எச்சரிக்கையுடன் கையாளாவிட்டால், தொன்மங்களைப் பொருள் கொள்ளுதல் அவற்றை எழுதியோரின் கற்பனை, ஆழ்மனநிலை, நம்பிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிக் கொண்டிருக்கும். அதன் விளைவாக, சமூக இணைப்பிலும் மோதலிலும் மறைந்திருக்கும் தொன்மத்தின் கட்டமைப்பு தொன்மமாகவே சமூகத்தில் தங்கிவிடும்”

இதுபோல, ஆழமாகவும், விரிவாகவும், துல்லியமாகவும், வரலாற்றைப் பதிவு செய்யும் வகையில் உள்ள நெருக்கடிகளையும், சிக்கல்களையும் இவர் புரிந்து கொண்டு ‘முற்கால இந்தியா’ என்ற வரலாற்றை இனம் காட்டுகிறார். வாய்மொழி மரபுகள் சார்ந்த தகவல்களைப் பற்றிய தனது மதிப்பீடுகளையும் இவர் சுட்டிக் காட்டுகிறார்:-

“இன்னொரு வகையாக மனப்பாடம் செய்தல் - மகாபாரதம் போன்ற இதிகாசப்பாடலை மனப்பாடம் செய்தல் இறுகிப் போய் விடுவதில்லை; மிகவும் இளகிய நிலையில் உள்ள ஒன்று. அதனால், மகாபாரத இதிகாசப் பாடல் தொகுப்பில் பல இடைச் செருகல்கள் தோன்றுவதும் சாத்தியமாயிற்று. இத்தகைய பனுவல்களை அணுகுவதற்கு வாய்மொழி மரபுகளில் தொழிற்படும் வழிமுறைகள் பல அணுகுமுறைகளை வழங்கியுள்ளது.”

இவர், குறிப்பிடுவதும் ஆய்வு செய்வதும். ஓலைச்சுவடிகள், மண்பானைப் பதிவுகள், தோல்கள், மரப்பட்டைகள், கண்டறியப்பட்டுப் பயன்படுத்தப்படாத காலத்தில் வாய்மொழி மரபுகள் எவ்வாறு மாற்றங்களுக்கும் திருத்தங்களுக்கும் உள்ளாகியிருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

மேலும், இவர், ஆஸ்ட்ரோ - ஆசியாடிக் மொழிகள் குழு, திராவிட மொழிகள் குழு ஆகியவை பற்றியும் விளக்குகிறார்: “ஆஸ்ட்ரோ - ஆசிய மற்றும் திராவிட மொழிக் குடும்பத்தின் சில கூறுகளை உள்வாங்கிக் கொண்டு ஆரிய இந்தோ - ஆரிய மொழிக்குடும்பம் படிப்படியாக வட இந்தியாவில் பரவியுள்ளது. இந்தோ - ஆரியர் உண்மையில், இந்தோ - ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த ஒரு மொழியைப் பேசிய ஒரு மொழிக்குழு. அது ஒரு இனத்தைக் குறிக்கும் சொல் அல்ல என்பதைத் திரும்பத் திரும்பக் கூற வேண்டியுள்ளது. ஆகவே, ஆரியர்களை ஓர் இனமாகக் குறிப்பிடுவது சரியானதல்ல. இந்தோ-ஆரிய மொழிகளைப் பேசியவர்களின் இன அடையாளங்கள் அறியப்படவில்லை.”


**முற்கால இந்தியா**
ரொமிலா தாப்பர்
தமிழில்: அ. முதுகுன்றன்
***வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,***
***41- பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்***
***அம்பத்தூர், சென்னை - 600 098.***
***தொலைபேசி எண்: 044 - 6359906***
***₹ 850/-***

“ஒவ்வொரு நாட்டின் தனித்தன்மைகளும் பலவகையான தொடர்புகளாலும், எதிர்ப்புக் களாலும் தொடர்ந்து மாறுதல்களுக்கு உள்ளா கின்றன. வரலாற்று வளர்ச்சி என்பது இது போன்ற தொடர்ச்சியான மாற்றங்களால் தான் நிகழ்ந்து வருகிறது. இந்த வகையில் தற்கால வரலாறுகள் எப்படிப் புதிய புரிதல்களுக்கு உள்ளாகின்றன என்பதையும் இவர் அடையாளப்படுத்துகிறார்: இந்திய வரலாற்றின் தொடக்கத்தோடு தொடர் புடைய இப்போதைய விவாதம் ஒன்றில் - மண்ணின் மைந்தர்களையும், அந்நியர்களையும் வேறுபடுத்திக் காணும் முயற்சியில் - தொல்லியலும், மொழி யியலும் ஈடுபட்டு உள்ளன. ஆனால், சமூகங் களும், அவற்றினுடைய அடையாளங்களும் நிரந்தர மானவையோ நிலைத்திருப்பவையோ அல்ல என்று வரலாறு காட்டுகிறது. ஒரு காலத்தில் ஒரு பகுதிக்குப் புதிய மக்கள் வருகையாலோ அல்லது வாய்ப்பான புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகம் செய்யப்படுகின்றதாலோ அல்லது நீண்ட காலம் பாதிப்பு ஏற்படுத்துகின்ற உள்ளூர் மாற்றங் களாலோ சமூகங்களுடைய கட்டுமானம் மாற்றம் அடைகின்றது. எல்லைப் புறங்கள், மலைக் கண வாய்கள், வளமான சமவெளி போன்றவற்றால் மாற்றம் அடைவதற்கு அதிக சாத்தியப்பாட்டைச் சில பகுதிகள் கொண்டுள்ளன.”

தன்னுடைய ‘முற்கால இந்தியா’ குறித்துத் தான் மேற்கொண்ட முயற்சிகளையும் நோக்கங் களையும் பற்றி வரலாற்றாசிரியர் இப்படிக் குறிப்பிடு கிறார்:-

“காலவரிசை எப்போதும் உறுதியற்றே உள்ளது என்றாலும், காலவரிசை நிலையை வழங்குகிற வரை கோடு சட்டகமாக அரசியல் வரலாற்றைப் பயன்படுத்துவதற்கு இந்தப் புத்தகத்தில் முயன்று உள்ளேன். பழங்கால இந்திய வரலாற்றின் நன்கு அறியப்பட்ட அம்சமாகச் சில ஆட்சியாளர்களின் பெயர்களையும் இப்புத்தகம் அறிமுகப்படுத்தி யுள்ளது. ஆயினும், எங்கே, ஏன் மாற்றங்கள் நிகழ்ந் திருக்கின்றன. அம்மாற்றங்கள் ஒவ்வொரு அம்சத் திலும் எப்படிப்பட்ட விளைவுகளை ஏற்படுத்தின என்பவற்றைக் காட்டும் நோக்கத்துடன், பரந்த அளவில் ஒன்று கலந்துள்ள அக்கால கட்ட அரசியல், பொருளாதார, சமூக, சமயக் கூறுகள் மீதே ஒவ்வொரு இயலின் முதன்மையான கவனக் குவிப்பும் செலுத்தப்பட்டு உள்ளது. தொடர்ச்சிகள் எல்லா இடங்களிலும் வெளிப்படையாக இருக்கும்.

இந்தியாவின் தனித்தன்மையை இனம் காட்டு வதன் வாயிலாக, ‘முற்கால இந்தியா’வை விசால மான அளவில் ஆய்வுகளை நிகழ்த்திக் கருத்துக் களை முன்வைப்பதன் விளைவாக இந்தியாவைப் புரிந்துகொள்ளப் போகிறது. இதை அவர் இப்படி விளக்குகிறார். “அரசு அதிகாரம் பெறுவதற்கு பொருளாதாரத்தைக் கைக் கொள்வதால், அரசு களின் வடிவங்களுக்கும் பொருளாதாரங்கள் பொருந்திப் போகின்றன. உயிர்ச்சூழல், பயிர் முறைகள், பாசன வசதிகளின் வேளாண் நிலங் களின் மீதான படிநிலையான உரிமைப்பாடுகள் ஆகியவற்றைப் பொறுத்து வேளாண் பொருளா தாரங்கள் வேறுபடுகின்றன. அதிகாரத்தின் மூல வளங்கள், பொருளாதாரங்களின் வள - ஆதாரங்கள், மனித உழைப்பைப் பெறுவதிலும், கட்டுப்படுத்து வதிலும் உள்ள பலவகையான முறைகள் ஆகிய வற்றைச் சார்ந்த (சமூக, பொருளாதார- பண் பாட்டு) வடிவங்கள் வளர்ந்துள்ளன. சில பகுதி களில் அதிக செயலூக்கம் மிக்க பொருளாதார நடவடிக்கையான வர்த்தகத்துடன் வளர்ச்சி பெற்ற நகரங்கள் வணிக மையங்கள் ஆகின. கடந்த காலத்தில் இந்தியா பற்றிய வரலாறுகள், கடல் வணிகத்தை முக்கியமற்ற நிலைக்குத் தள்ளிவிட்டு, அடிப்படையில் நிலத்தையே மையமாகக் கொண் டிருந்தன. இந்தியாவில் வணிகப் பொருளாதார வளர்ச்சி, வர்த்தகர்கள் நிலை வெறுத்தலுடன் தொடர்புடைய புதிய சமூக அடையாளங்களின் உருவாக்கம் ஆகியவற்றோடு கடல் வணிகத்திற்கும் உரிய கவனம் கொடுத்ததன் மூலம் இப்போது இது சரி செய்யப்பட்டுள்ளது.”

இவருடைய இந்த மதிப்பீடுகள் வெளிப்படை யானவை. இந்த அடிப்படையிலேயே இந்திய வாழ்க்கையை அதன் வரலாற்றை வகைப்படுத்தி, வரிசைப்படுத்தி இவர் வழங்கியுள்ளது ஒரு தெளி வான புரிதலுக்கு இட்டுச் செல்லுகிறது. இந்திய வரலாறு குறித்துக் கூடுதலான தகவல்களையும், தடயங்களையும், தரவுகளையும் முன்வைத்து ‘முற்கால இந்தியா’வை உணரவைக்கிறார்.

புவியியல் அடிப்படையில் ‘முற்கால இந்தியா’ வை வடக்கு தெற்கு என்று இரண்டு பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொன்றின் தனித்தன்மைகளையும், சிறப்புக்களையும் ஆழமாகவும் தெளிவாகவும் விளக்குகிறார்.

கி.மு. 1600- 1700 கால அளவில் தோன்றிய ஹராப்பா நகரமாதலிலிருந்து ‘முற்கால இந்தியா’ வின் வரலாற்றை இவர் தொடங்குகிறார். அதைத் தொடர்ந்து வந்த வேத காலம். இரும்பு கை வினைப் பொருட்கள் காலம் வரை தகவல் களையும் ஆய்வுகளையும் முன்வைக்கிறார்.

தொடர்ந்து, 6ம் நூற்றாண்டில் கங்கைச் சமவெளி நகர்மயமாவதைப் பதிவு செய்கிறார்.

மத எழுச்சிக் காலத்தில் மகாவீரர், புத்தர் போன்ற மாமனிதர்கள் தோன்றி சமணமத, புத்த மத எழுச்சிகளை உருவாக்கி உலக நன்மைக்காக வழங்கப்பட்ட முயற்சிகளைக் குறித்துப் பேசுகிறார்.

அதன்பிறகு, பாரசீக ஆக்கியாபெனிட் மா மன்னன் சைரஸ், அலெக்சாண்டர் படையெடுப்பு பற்றிய வரலாற்றும் பின்னணியைக் காட்சிப்படுத்து கிறார்.

உள்நாட்டிலும், அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்த சூழல்களையும் விளக்குகிறார்.

ஆகவே, உலக வளர்ச்சியின் விளைவாக நிகழ்ந்த நவீனமான மாற்றங்கள் இந்தியாவை எப்படியெல்லாம் மாற்றி அமைத்தன என்பதையும் விளக்குகிறார்.

அதைப் போலவே, கி.பி. 1300 வரை நிகழ்ந்த இந்திய வரலாற்று நிகழ்ச்சிகளையும், மாற்றங் களையும், விளைவுகளையும் இவர் ஆவணப்படுத்து கிறார்.

மௌரிய வம்சத்தின் தோற்றத்திற்குப் பிறகு, மன்னராட்சி முறை வலிமை பெற்றதும் அதன் விளைவாக இந்தியாவில் பேரரசுகள் விரிவடைந்த வளர்ச்சி முறைகளும் படிப்படியாகச் சித்திரித்துக் காட்டுகிறார்.

அசோகர் காலம் முதல் புத்தமதத்தில் ஏற்பட்ட வளர்ச்சியையும், அந்நிய நாடுகளில் அது நிலைபெற்று வளர்ந்த நிலைமைகளையும் இவர் விவரிக்கிறார்.

வேத, உபநிஷத், சமண, பௌத்த, சைவ, வைணவ மதங்களின் தோற்றங்களையும், அவை நிகழ்த்திய மாற்றங்களையும் விளக்குவதன் வாயிலாக இந்தியாவின் ஆன்மீக ஆளுமையை உணர்த்து கிறார். அதைத் தொடர்ந்து முகம்மதிய, கிறித்துவ மதங்களின் தாக்கங்களையும், இந்தியாவில் அவற்றின் வளர்ச்சியையும் விருப்பு வெறுப்பு இல்லாமல் வரலாற்றின் இயல்பான மாற்றங்கள் என்பதை இவர் அடையாளம் காண்கிறார்.

வரலாற்று வளர்ச்சிக்குக் காரணமாக இருந்த ஒவ்வொரு அம்சத்தையும் இனம் கண்டு சொல்லு கிறார். காலனி ஆதிக்கத்தின் விளைவாக மேற் கத்திய அறிவியலின் தாக்கங்களையும், மாற்றங் களையும் புலப்படுத்துகிறார்.

“முற்கால இந்தியா”வின் பன்முகத் தன்மைகள் விரிசல்கண்டும், ஒருங்கிணைந்தும் வரலாற்றில் இயங்கி வளர்ந்து கொண்டிருக்கும் போக்கை விளக்கி ஆன்மீக ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும் உலக நாடுகளுடன் ஒருங்கிணைந்து வளரும் முறைகளை அறிவியல் கண்ணோட்ட அடிப்படையில் ஆவணப் படுத்துகிறார்.

ஒவ்வொரு தனிமனிதனின் வரலாற்றையும் உலக வரலாற்றுடன் ஒருங்கிணையும் படி அறிவியல் கண்ணோட்ட அடிப்படையில் இந்திய வாழ்க் கையை அறிந்து கொள்ளச் செய்கிறார்.

நாடு, சாதி, மதம், இனம், மொழி, நிறம் போன்ற மனித இன அடையாளங்களை விருப்பு வெறுப்புக்கு உள்ளாகாமல் அறிவியல் அடிப் படையில் உணர்ந்து விளக்கிக் கூறி அடிப்படை வாதத்திற்கு எதிராக ரொமிலா தாப்பர். ‘முற்கால இந்தியா’வை வடிவமைத்திருக்கிறார் என்றே கருதலாம்.

“ஒரு துறையில் நுட்பமான சிறப்பறிவு இல்லாமல் ஒரு விடயப் பொருளைப் பற்றிய கூர்மையான ஆராய்ச்சிப் பார்வையைப் பெறுதல் சாத்தியமற்றது என்னும் நிலைமையை இருபதாம் நூற்றாண்டில் பொதுவாக எல்லா அறிவுத்துறை களிலும் சிறப்புப் புலமைத்துவத்திற்கு முன்னுரிமை கொடுக்கும் தன்மை உருவாகியுள்ளது. அத்தகைய நுட்பமான சிறப்பறிவு வல்லுநர் ஆய்வு செய்யப் படும் பொருளைப் புரிந்து கொள்ளுதல், அதனால் விளையும் உவகை ஆகிய இரண்டையும் பெருக்கு கின்றார்.

“இவையே வரலாற்றை உயர்ந்த புலமைத் துறையாக மாற்றியுள்ளன.”

“இவற்றின் விளைவாக வரலாற்றை எழுதும் கற்றுக் குட்டிகளுக்கும், தொழில்முறை வரலாற்றிய லாளருக்கும் இடையே ஒரு இடைவெளி ஏற்பட்டு உள்ளது. இத்தகைய வரலாற்றுச் செயல் நிலையே, வரலாற்று ஆய்வில் உயர்ந்த நாட்டமுடைய சில ஆர்வங்களைத் தோற்றுவிக்க வழிவகை செய்கின்றது.

இதுபோன்ற தெளிவான ஆழமான நுட்ப மான புரிதல்களோடு ஏராளமான தகவல்களையும், தரவுகளையும் அடிப்படையாக வைத்து ஆய்வுக் கண்ணோட்டத்தில் ஆணவப்படுத்தப்பட்டிருக் கிறது ‘முற்கால இந்தியா’


ஒவ்வொரு இந்தியனுக்குள்ளும் இருந்து வரும் இந்தியாவை முழுமையாகப் புரிந்து கொள்ள வழிவகுக்கும் இந்த அரிய ஆய்வு நூல் வரலாற்றுக் கண்ணோட்டத்தைத் தெளிவுபடுத்துகிறது. தமிழ்ச் சூழலுக்கு இது ஒரு புதுமை. ●



KAAVYA TAMIL (QUARTERLY) APRIL - JUNE 2018
Regd No : TN TAM 8012 / 43610
காவ்யா
பேரா சு.சண்முகசுந்தரத்தின்
சிறப்புத் தொகுப்புகள்
பாரதிதாசனின் 6 தொகுதிகள் ரூ.7000/- சலுகை விலை ரூ.5000/-
கவி காமு ஷெரீப் 3 தொகுதிகள்
ரூ. 2600/- சலுகை விலை ரூ. 1800/-
விந்தனின் 3 தொகுதிகள்
ரூ. 3000/- சலுகை விலை ரூ. 2000/-
வ.ரா.வின் 2 தொகுதிகள்
ரூ. 2100/- சலுகை விலை ரூ. 1500/-
ராமாமிர்தம் 2 தொகுதிகள்
ரூ. 2100/- சலுகை விலை ரூ. 1500/-
அ.ச.ஞா. 2 தொகுதிகள்
ரூ. 2300/- சலுகை விலை ரூ. 1700/-
தொடர்புக்கு : 044 – 23726882 / 98404 80232
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
26
சித்திரை
ஏப்ரல் - ஜூன் 2018
மலர் 7 இதழ் 2
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
விலை ₹100
காவ்யா
தமிழ்
கலை, இலக்கியம், பண்பாட்டு பன்னாட்டுக் காலாண்டிதழ்
அன்பின்
பெருவெளி
ஆண்டாள்
வெளி ரங்கராஜனின்
நாடகம்
தீப்பட்டு முளைத்து தளிர்த்த மலைத்தாவரம்
இரா. நரேந்திரகுமாரின் - ஆண்டாள் பற்றிய கட்டுரை
மந்திரவாதமும் போலித்தனங்களும் - உளவியல் பார்வை
பேரா.தே.ஞானசேகரனின் கட்டுரை
கரிகாலன் கவிதைகள்
விக்ரமாதித்யனின் விமர்சனம்
மற்றும் 16 ஆய்வுக் கட்டுரைகள்

# தேர்ந்த கலைஞனின் மாறுபட்ட பார்வை

உஷாதீபன்




படைப்பாளி நேர்கோட்டில் சிந்தித்தால் படைப்புக்கள் வராது. பரிமளிக்காது. மாறுபட்டு சிந்திக்க வேண்டும் என்பது கருத்தாக இருக்கிறது.

மாறுபட்டு சிந்திக்கிறேன் என்று வக்கிரமாகச் சிந்தித்து படைப்புக்களைக் கொடுப்பதும், படிப்பவர்களின் மனங்களைக் கெடுப்பதும், எதற்காக இதைப் படித்துத் தொலைத்தோம் என்று எண்ண வைப்பதும் நவீனத் தமிழ் இலக்கியப் படைப்புக்கள் வரிசையில் சிறுகதைகளின் பங்காக நிறைய இருந்து கொண்டிருக்கிறது.

மாறுபட்டுச் சிந்திக்க வேண்டும் என்றால் வக்கிரமாகத்தான் சிந்திக்க வேண்டுமா? நடைமுறை யதார்த்தத்திலிருந்து சற்றே விலகி வித்தியாசமாகச் சிந்தித்து, அந்த யதார்த்தத்தோடேயே இதனைக் கலந்து கலையழகு மிளிர, சுவைபட ஒரு படைப்பைக் கொடுக்க முடியாதா என்று யோசித்தோமானால் அப்படிக் கொடுக்கும் ஒரு சில படைப்பாளிகள் இருந்து கொண்டு தான் இருக்கிறார்கள் நம்மிடையே. தொடர்ந்து அவர்கள் தங்கள் படைப்பை அவ்வாறுதான் அளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. அவர்களின் படைப்புக்களைப் படித்தால் மனம் நோகுவதில்லை. கசடு விழுவதில்லை. அழுக்கு ஏறுவதில்லை. மாறாக இதமாக வருடிக்கொடுத்தது போன்ற உணர்வுதான் நமக்கு ஏற்படுகிறது. வாழ்க்கையின் மெல்லிய சோகங்களுக்கு அரு மருந்தாக அமைகின்றது.

இந்த மக்களின் வாழ்க்கையோடு கலந்ததுதான் இலக்கியம். மக்களின் வாழ்க்கைதான் இலக்கியம். அதிலிருக்கும் அவலங்களை, அதை மீறி எழும் எழுச்சிகளை மட்டும் சொன்னால்தான் இலக்கியமா? அந்த மக்களின், மனிதர்களின் மென்மையான உணர்வுகளை லேசாகத் தட்டிப் பார்ப்பதும், அந்த உணர்வுகளின் எழுச்சியில் அவன் கொள்ளும் ஆறுதல்களைக் கலையழகு மிளிர வடித்தெடுப்பதும் கூட சிறந்த இலக்கிய முயற்சிகளாகப் பல சமயங்களில் அமைந்துதான் விடுகின்றன.

தேவப்பிரகாஷ் என்ற அரசு ஊழியர் அப்படிப் பட்ட ஒரு மென்மையான மனிதராக இந்தக் கதை முழுவதும் இதமாக வலம் வருகிறார். பெயர் வைப்பது கூடத் தன்னின் பல கதைகளிலும், பிற படைப்பாளி களின் படைப்புக்களிலும் ஏற்கனவே சொல்லப் பட்டதாக, வந்ததாக இருக்கக் கூடாது என்பதில் மிகவும் கவனம் இந்தப் படைப்பாளிக்கு. ஒரு படைப்பாளியின் வெற்றியே இம்மாதிரியான முயற்சியில்தான் இருக்கிறது. தேர்ந்த இயக்குநர்கள் தன்னின் முன் படத்தில் இருந்த லொகேஷன்களை முற்றிலுமாகத் தவிர்த்து விடுவார்கள். சொல்லப் போகும் திரைக்கதைக்கான இடங்கள் பொருத்தமாக அமையும் வரை மனம் ஓயாது. ஒரு புதிய படத்தைக் கொடுப்பதற்கான அடையாளங்களில் அது முக்கிய இடம் வகிக்கிறது என்பதை அவர்கள் நன்கு உணர்ந்தவர்களாயிருப்பார்கள். அதுபோல்தான் இந்தப் படைப்பாளியின் படைப்புக்களும். ஏற்கனவே சொல்லப் பட்ட எந்தவொரு விஷயமும் மறந்தும் கூட, அவர்கள் அறியாமலே கூட, மற்ற படைப்புக்களில் தலைகாட்டி விடுவதில்லை. அதனால்தான் படிக்கும் வாசகன் புத்துணர்ச்சியடைகிறான். சே! எங்கிருந்தப்பா கிடைக்குது இந்த மனுஷனுக்கு இப்படியாப்பட்ட விஷயங்களெல்லாம்? என்று பிரமிக்கிறான். வளர்ந்து கொண்டிருக்கும் படைப்பாளி பொறாமையடைகிறான். அவரைப் போல் நாமும் எழுத வேண்டும் என்று உத்வேகமடைகிறான்.

இவர் ஒரு அரசு ஊழியர் இல்லை. வேறு எந்தப் பணிகளிலும் இல்லை. எழுத்தையே தவமாக, வாழ்க்கை யாகக் கொண்டு வெற்றி கண்டவர். எந்தவொரு பணி யிலுமே அர்ப்பணிப்பு ஒன்றுதான் ஒருவனை உச்சத்திற்குக் கொண்டு போகும் என்பது சர்வ நிச்சயம். வாழ்க் கையையே எழுத்துக்காக அர்ப்பணித்து, உச்சியில் சென்று ஜம்மென்று அமர்ந்து கொண்டவர் இவர். இப்பொழுது அங்கிருந்துதான் எல்லோரையும் பார்க்கிறார். மனதில் பொறாமை கொள்ளாத ஒருவன் இப்படித்தான் நினைக்க முடியும். நினைக்க வேண்டும். அதுதானே முறை. அது தானே அழகு. அதுதானே நிறைவு. வெற்றி கண்டவன் எங்கிருக்க வேண்டுமோ, அது தானே நிகழும். அதை யாரும் தடுப்பதற்கில்லை.

எல்லா மக்களின் வாழ்க்கை நிலைகளும் இவருக்கு அத்துபடியாகியிருக்கிறது. பார்க்கும் பார்வையிலேயே புரிந்து கொள்ள முடிகிறது. எழுத்துக்கென்றே தன் வாழ்க் கையை அர்ப்பணித்த அந்த ஒப்படைப்பு இவருக்கு அதை சாத்தியமாக்கியிருக்கிறது. அரசு ஊழியரைப்பற்றி எல்லாரும்தான் எழுதியிருக்கிறார்கள். எத்தனையோ விஷயங்களைச் சொல்லித்தான் இருக்கிறார்கள். அரசு அலுவலகங்களையும், அதன் சூழ்நிலைகளையும் வர்ணித்திருக்கிறார்கள். அதிலிருந்தெல்லாம் சொல்லப் படாத்து இந்த மனுஷனுக்கு எங்கிருந்து கிடைத்தது? நமக்குத் தோன்றும் விஷயங்களையே, யாருக்கும் தோன்றாதது போல் சொல்கிறாரே இவர்? அதனதன் இருப்பை அப்படி அப்படியே சொல்வதுதான் படைப்பா? இவர் சொல்வது போலல்லவா சொல்ல வேண்டும். ஒரு நல்ல படைப்பாளிக்கு அப்படியல்லவா சொல்லத் தெரிய வேண்டும். சொல்லப்படும் விஷயங்கள் எல்லோர் கண்ணிலும் இதுநாள்வரை பட்டதுதான் என்றாலும், தொடர்ந்து பட்டுக் கொண்டிருப்பவைதான் என்றாலும், அவைகளைச் சொல்ல வேண்டும் என்று ஏன் தோன்றவில்லை? சொன்னால் எப்படிச் சொல்வது என்று ஏன் தோன்ற வில்லை? இப்படிச் சொன்னால்தான் சுவையாக, வித்தியாசமாக இருக்கும் என்று இப்போது இவர் முன் வைக்கிறாரே அது ஏன் நமக்குத் தோன்றவில்லை? அதுதானய்யா ரசனை. ஆழ்ந்த ரசனை. ஒரு சாதாரணன் பார்க்கும் பார்வைக்கும், ஒரு முதிர்ந்த படைப்பாளியின் பார்வைக்கும் காணும் மாறுபாடு என்பது அதுதானே...!

மொத்தம் முப்பத்தியெட்டுப் படிகள் இருக்கின்றன அந்த அலுவலகத்தில். தேவபிரகாஷ் பலமுறை அப்படி களை எண்ணியிருக்கிறார். அலுவலகத்திற்கு வந்த புதிதில் அப்படி எண்ணுவது கிளர்ச்சியூட்டுவதாக இருந்தது. ஆனால் இப்போது படிகள் இருப்பதே கண்ணிற்குத் தெரிவதில்லை. கால்கள் தானாகவே ஏறிப் போய் விடுகின்றன. ஒரு வேளை தன்னைப்போல் புதிதாக வேலைக்குச் சேர்ந்த எவராவது படிகளை எண்ணக்கூடும்.

மோகன்குமார் உட்கார்ந்திருக்கும் இடத்தின் அருகில் உள்ள ஜன்னலை ஒட்டி ஒரு வாதாமரமிருக் கிறது. ஆனால் அதன் இலைகள் அசைவதேயில்லை. தூசி படிந்து வெளிறிப்போன நிலையில் ஒரு நோயாளியைப் போல் அந்த மரம் நின்று கொண்டிருக்கிறது.

அரசு அலுவலகத்தின் ஊடாக ஒரு மரமாக இருப்பது துரதிருஷ்டவசமானது. யாரும் தண்ணீர் ஊற்ற மாட்டார்கள். மரத்தின் மீது பாக்கு போட்டு கோழையுடன் வழியும் எச்சிலைத் துப்பியிருப்பார்கள். மூன்றாவது மாடியில் வேலை செய்பவர்கள் சாப்பிட்டு மிச்சமாகித் தூக்கி எறியப்பட்ட உணவுகள் யாவும் மரத்தின் மேலாகத்தான் விழுந்திருக்கின்றன.

மனதில் பொறாமையின்றி, ஆழ்ந்து, அமிழ்ந்து ரசிக்கப் பழகிக்கொள்ளுங்கள். எழுத்தின் அழகு நம்மை வசீகரிக்கும். ஓடிப்போய் அந்தப் படைப்பாளியை ஆவியைச் சேர்த்துக் கட்டிக் கொள்ளச் சொல்லும். அரசு அலுவலகமும், மாடிக் கட்டடங்களும் நாம் கண்டது தான். அந்தப் படிகளில் ஏறுவதும், இறங்குவதும் என்ன முக்கிய நிகழ்வா? என்று தோன்றும். தினம் தினம் ஏறி இறங்கியவர்களைக் கேளுங்கள். அவர்களில் ஒருவருக் காவது இவர் சொல்லும் அனுபவங்கள் நிச்சயம்

ஏற்பட்டிருக்கும். வாழ்க்கையில் எல்லா மனிதர்களுமா ஜடமாக இருக்கிறார்கள்? ரசனையும், உணர்ச்சியும், கொந்தளிப்பும், மகிழ்ச்சியும், வருத்தமும் இன்னும் பலவுமாக இருப்பவர்கள்தானே இந்த வாழ்க்கையை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் படிகளில் ஏறி இறங்குவது ஆரம்பத்தில் கிளர்ச்சியூட்டுவதாக இருக்கும் ஒருவருக்கு பின்னால் அது ஒன்றுமில்லாததாகிப் போகிறது. அதை எப்படிச் சொல்வது? படிகள் இருப்பதே கண்ணுக்குத் தெரியாமல் போன அவருக்கு, கால்கள் இப்போது தானாகவே ஏறிப் போய் விடு கின்றன. சொல்லும் முறையில் ஒருவனின் இயந்திரத் தனமான வழக்கமான வருகையும், பழக்கமும் மனதில் நின்று விடுகின்றது அங்கே. அரசு அலுவலக வளாகங் களில் நிற்கும் மரம் தூசி படிந்து, வெளிறிப்போய் ஒரு நோயாளியைப் போல் நின்று கொண்டிருந்தது என்பதைச் சொல்லும்போது நாம் காலம் காலமாய்ப் பார்த்த காட்சிகள் நம் கண் முன்னே விரிகிறது. அதிலும் அரசு அலுவலகத்தின் ஊடாக ஒரு மரமாக நிற்பது துரதிருஷ்டமானது எனும்பொழுது அந்த மரமே உயிர் பெற்று நம்மிடம் வாயிழந்து வருந்துவது போலிருக்கிறது. படைப்புக் கண் கொண்டு பார்க்கும் ஒரு படைப்பாளிக்கு அதை எப்படிச் சொல்லத் தோன்றுகிறது பார்த்தீர்களா? அந்த மரமும், அதன் மீது துப்பப்பட்டிருக்கும் பாக்குப் போட்டு மென்ற கோழையும், எச்சிலும், உணவுத் துகள்களும், ஏதோ வொரு வகையில் நம் மனதைச் சங்கடப்படுத்துகிறது தானே? அந்த வளாகத்தின் கவனிப்பாரற்றுப் போன இயற்கையின் சாட்சி, அதன் அவலக் காட்சி, சே...! என்ன மனிதர்கள்? என்ற வருத்தத்தை மனதில் ஏற்படுத்துகிறதுதானே? ஏற்படுத்த வேண்டும். இல்லை யென்றால் உங்களுக்கு ஆழ்ந்த ரசனை இல்லை என்று பொருள். கதை நிகழும் இடத்தின் சூழலை விவரிக்க முயலும்போது, தென்படும் யதார்த்தங்களை, இதற்கு முன் தன்னாலும், மற்றவர்களாலும் சொல்லப்படாத வகையில் எப்படிப் புதிதாக, அதேசமயம் யதார்த்தம் குன்றாமல் சொல்வது என்ற அந்த இடம்தான் படைப்பாளி நிற்கும் இடம்.

தேவப் பிரகாஷிற்கு உடனே ஒரு மானைப் பார்க்க வேண்டும் போலிருந்தது.

ஒரு சிறுகதையை எந்த இடத்தில் ஆரம்பிப்பது? எத்தனை முக்கியம் அது? ஒரு படைப்பாளி வெற்றி பெறும் இடம் அங்கிருந்துதானே? அலுவலகத்தில் பணி செய்யும் ஒருவன் திடீரென விபரீதமாக எதையாவது நினைத்துக் கொண்டால்? நகரில் எப்படி திடீரென்று மானைப் பார்ப்பது? மானைப் பார்க்க வேண்டும் என்று அர்த்தமில்லாமல் ஏன் நினைத்துக் கொள்கிறார்? இவருக்கென்ன கிறுக்கா? அதைப் பார்த்து என்ன செய்ய வேண்டும் இப்போது? அன்றாட சாதாரண சராசரி வாழ்க்கையில் இது ஏன் இவருக்குத் தோன்றியது?- என்னென்னவோ கேள்விகள் விழுகின்றன நம் மனதில். அதுதானே நோக்கம். அப்படி என்னதான் சொல்லப் போகிறார், அதையும்தான் பார்ப்போமே என்று கூடப் பயணிக்கத் தயாராகி விடுகிறோம். காட்டுக்குத்தான் புறப்பட்டுச் செல்ல வேண்டும். அல்லது இருக்கும் இடம் மாநகரமாய் இருந்தால் மிருகக்காட்சி சாலையை நோக்கிச் செல்ல வேண்டும். தேவப்பிரகாஷ் என்ன செய்கிறார் பார்ப்போமே என்று கண்களை ஓடவிட்டு வரிகளை நகர்த்துகிறோம்.

உடனே கிளம்பிப் போய் மானைக் காட்டி விட்டால் அப்புறம் கதை என்ன ஆவது?. அதிலென்ன சுவை? உள்ளே எப்படியெல்லாம் பயணம் நடை பெறுகிறது என்பதுதானே ஸ்வாரஸ்யம். ஒரு கதை சொல்லி தன் படைப்பை முழுமையான உள்ளடக்கமாக, சொல்ல வந்த விஷயத்தின் கட்டுக் கோப்பு குலையாத வகையில், அதே சமயம் படிக்கும் வாசகன் சிரமமின்றி உள்வாங்கும் விதமாய் அடுத்தடுத்ததான சம்பவக் கோர்வைகளை நெருக்கமாகக் கோர்த்துக் கொண்டே போனால்தானே கடைசிவரை கூடவே வருவான். இடையில் எதுவும் இளகிப் போனாலோ, நீர்த்துப் போனாலோ, ம்ம்ம்... சரி... ஒண்ணுமில்ல... என்று விட்டுவிட்டு அடுத்ததற்குத் தாவி விடும் வாய்ப்பு உள்ளதுதானே...! இங்கே அப்படியான பாதிப்பு எதுவும் நிகழாமல் உங்களைக் கை கோர்த்து உடன் அழைத்துச் செல்லும் மாயம்தான் நிகழ்கிறது.

முதலில் அவரைச் சொல்ல வேண்டும். பின் அவரிருக்கும் இடத்தை விவரிக்க வேண்டும். பிறகு மற்றவர்களைப் பற்றிச் சொல்லியாக வேண்டும். அதற்குப் பிறகு இந்த சம்பந்தங்களோடு கதையையும் விடாமல் கூட்டிச் சென்றாக வேண்டும். படைப் பாளியின் பொறுப்பு எத்தகையது?

நீங்கள் அரசு அலுவலகங்களை அன்றாடம் கண்ணுற்றிருக்கிறீர்களா? அதன் யதார்த்த நிலையை ஜீரணித்திருக்கிறீர்களா? ஜீரணிக்கவே முடியாத நிலையில் இருந்தால் நீங்கள் ஒரு அரசு அலுவலகத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர் அல்லது இருந்தவர் என்று பொருள். அதுதான் இது -

அந்த அலுவலகம் பரபரப்பாகச் செயல்பட்டு அவர் அறிந்ததேயில்லை. அதுபோலவே அலுவலகத்தில் வேலை செய்யும் அனைத்து ஊழியர்களும் ஒரு நாளும் முழுமையாக வந்ததேயில்லை. தினமும் நாலைந்து காலி இருக்கைகள் கண்ணில் படுகின்றன. அதிலும் சுந்தரவதனி என்ற பெண் கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக விடுப்பில் இருக்கிறாள். அவளது இருக்கை அப்படியே இருக்கிறது. அந்த மேஜை மீது கோப்புகள் தூசி படிந்து கிடக்கின்றன. சுந்தரவதனிக்கு என்ன

செய்கிறது, ஏன் ஒருவரும் அவள் வீடு தேடிப்போய் பார்த்து வந்ததேயில்லை.

“அலுவலகத்தில் சுந்தரவதனி எப்போதுமே தலைவலி தைலத்தை தேய்த்துக் கொண்டு கடுமையான முகத்தோடுதானிருப்பாள்.”

உடம்பு சரியில்லாத அவளை ஆப்பிள் பழங்களை வாங்கிக் கொண்டு போய்ப் பார்க்கிறார் தேவபிரகாஷ். அவரை எதிர்பார்க்காத அவள் ஏதாச்சும் கடன் கிடன் வேணுமா? என்று கேட்கிறாள். வேவு பார்க்க வந்திருக்கிறாரோ என்று சந்தேகப்பட்டு இனிமே வர்றதுன்னா முன்னதாக ஃபோன் பண்ணிட்டு வாங்க என்று முகத்திலடித்தாற்போல் சொல்லி, கொண்டு வந்த ஆப்பிளை எடுத்துப் போகச் சொல்கிறாள். மனம் சங்கடப்பட்டு வெளியேறும் இவர், ஆத்திரத்தில் வீட்டிற்கு வெளியே இருக்கும் குப்பைத் தொட்டியில் அந்தப் பழங்களை வீசுகிறார்.

மனித உறவுகள் அர்த்தமற்றுப் போய்விட்டதாக வருத்தமுறுகிறார். மேலே சொல்லப்பட்டதுபோல் இப்படியுமா மனிதர்கள் இருப்பார்கள்? என்று தோன்றக் கூடும். அரசு ஊழியர்களில் (அவர்களும் மனிதர்களா தானே) பலரை நீங்கள் இப்படிப் பார்க்கலாம். அந்தப் பலரில் ஒருவரை அடையாளம் கண்டு எழுதியிருப்பது தான் இங்கே அதிசயிக்கத்தக்கது.

அலுவலகத்தில் உள்ள யாருமே கண்டுகொள்ள வில்லையே என்று நினைத்து அதற்காக பிரயத் தனத்துடன் அலுவலரிடம் பொய் சொல்லிவிட்டுக் கிளம்பிச் சென்றவருக்குக் கிடைக்கும் வரவேற்பு விரக்தி கொள்ள வைக்கும்தானே?

காரணமில்லாமல் ஒருவர் மற்றவரைப் பார்ப்பது கூட ஏன் இயலாமல் போயிற்று? பணம் தவிர வேறு எதுவுமே உலகில் முக்கியமானதில்லையா? ஏன் இப்படி மனக்குரலின் பேச்சைக் கேட்டு நாம் அவமானப்பட்டுப் போகிறோம்? இது என்ன நோய்? ஏன் நம் இயல்பு வாழ்க்கை இப்படி அர்த்தமற்றுப் போய்க் கொண் டிருக்கிறது?


என்று நினைத்து வேதனை கொள்கிறார். நியாயம் தானே? ஒரு மனிதனின் உடம்போடு ஒட்டிய சுயமும், வயது ஆக ஆக அவனுக்கு ஏற்படும் மன மாற்றங்களும், விலகலான எண்ணங்களும் தேவப்பிரகாஷின் பாத்திர மாக இக்கதையில் சமைக்கப்பட்டிருப்பது படிப்பவர் மனங்களில் பரிதாபத்தையும், கருணையையும் ஏற்படுத்து கின்றன.


அலுவலகத்தில் அவருக்கு விருப்பமானவர்கள் என்றோ, நண்பர்கள் என்றோ யாருமேயில்லை. மதியச் சாப்பாட்டைக் கூட தனியாகத் தனது மேஜையில் வைத்தே சாப்பிட்டு முடித்து விடுவார். அலுவலகத்தில் மட்டுமில்லை. ஒரு கோடிப் பேருக்கும் மேலாக வசிக்கும் இந்த மாநகரில் கூட அவருக்கு நண்பர்கள் என்று எவருமில்லை. முகம் தெரிந்தவர்கள், தெரியாத வர்கள் என்று இரண்டே பிரிவுதான். ஐம்பதாவது வயதில் நுழையும்வரை அவருக்கு ஒரு நாளும் இப்படி யான உணர்வுகள் ஏற்பட்டதேயில்லை. இப்போதுதான் ஏதேதோ கொந்தளிப்புகள் மனதில் தோன்றுகின்றன. திடீரென ஒரு எண்ணம் அவரது மனதில் தோன்றத் துவங்கி முழுவதும் ஆக்ரமித்து விடுகிறது. வேறு எந்த வேலை செய்தாலும் மனது அடங்குவதில்லை. ஒரு குரல், அழுத்தமான ஒரு குரல் அந்த எண்ணத்தை நிறை வேற்றும்படி அவரை வலியுறுத்திக் கொண்டே யிருக்கிறது. அந்தக் குரலைக் கண்டு கொள்ளாமல் விடும்போது மனது வேறு எந்த வேலையிலும் கவனம் கொள்ள மறுப்பதோடு, உடலிலும் மெல்லிய பட படப்பு உருவாகிவிடுகிறது. இன்றைக்கும் அப்படியான ஒரு குழப்பமான எண்ணமாகவே மானைக் காண வேண்டும் என்று மனதில் உதயமானது.

திடீரென்று மானைப் பார்க்க வேண்டும் என்கிற விசித்திர எண்ணத்திற்கான உறுதி இங்கே ஸ்தாபிக்கப் படுகிறது.

உலகில் வேறு எந்த மனிதனும் இப்படித் தனது அலுவலகத்தைப் பாதியில் போட்டுவிட்டு மானைப் பார்க்கப் போக மாட்டான். தனக்கு ஏதோ நிகழ்ந்து விட்டது. தன்னை ஏதோ பிடித்து ஆட்டிக் கொண் டிருக்கிறது. என்றெல்லாம் நினைத்தவாறே கதையைப் பாங்காக நகர்த்திச் செல்கிறார் ஆசிரியர். கதை முழுக்கப் பொருத்தமான சம்பாஷனைகளோடும், மன வியாகூலங்களோடும் தேவப்பிரகாஷ் பாத்திரம் நகர்த்தப்பட்டிருக்கும் விதம் படிக்கும் வாசகனின் மனதைத் தொடர்ந்து நெருடிக் கொண்டேயிருக்கிறது. படித்து முடித்தபின்னரும் ஒரு சிறுகதைக்குள் இத்தனை விஷயங்களை உள்ளடக்க முடியுமா? என்று எண்ணி எண்ணி வியந்து தொடர்ச்சியாக அவைகளை ஞாபகத்திற்குக் கொண்டு வர முடியாமல் திரும்பத் திரும்பப் படிக்கத் தோன்றுகிறது.

தேவப்பிரகாஷ் கடைசியில் மானைப் பார்த்தாரா? அதைப் பார்ப்பது என்று கிளம்பி என்னென்ன வகையி லெல்லாம் அவர் மனதளவில் பாதிக்கப்பட்டார். அவரின் வருத்தமான மனநிலையின் அடியாழத்தில் மழைமான் ஒன்று பெரும் சிறகுகளுடன் பசுமையான வனத்தில் பறந்து கொண்டிருக்கும் காட்சி அவருக்குப் பெருத்த ஆறுதல் அளிப்பதுபோல் நீங்களும் மனதார உணர வேண்டுமானால் மழைமான் என்ற தலைப் பிலான திரு எஸ்.ராமகிருஷ்ணன் கதையைப் படியுங்கள். ●




# அரசு பற்றிய மார்க்ஸீயக் கொள்கை

**நா.வானமாமலை**

அரசு என்ற பிரச்சினையை மார்க்ஸீயக் கண்ணோட்டத்தில் புரிந்துகொள்வதற்கு எங்கெல்ஸ் எழுதிய 'குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்' என்ற நூலைப் படிக்க வேண்டும். அரசின் தோற்றத்தை, சமுதாய வளர்ச்சியின் வரலாற்றுப் போக்கில் எங்கெல்ஸ் விளக்குகிறார். அதன் பின்னர் வர்க்க சமுதாயங்கள் தோன்றி வளர்ந்த காலத்தில் அதன் அமைப்பையும், பாத்திரத்தையும் லெனின் தமது, 'அரசு', 'அரசும் புரட்சியும்' என்ற நூல்களில் விளக்குகிறார். இந்நூல்களின் கருத்தமைப்பை விளக்குவதே இப்பகுதியின் நோக்கமாகும்.

அரசு மனித இனம் தோன்றிய காலத்தில் இருந்து இருக்கிறது என்று சிலர் நம்புகிறார்கள். நமது புராணங்கள்கூட இக் கருத்தை ஒப்புக் கொள்ளுவதில்லை. இந்திய தர்ம சாஸ்திரங்களின் அரசும், அரசனது ஆட்சியும் எவ்வாறு ஏற்பட்டன என்பதை விளக்க சில கதைகளை கற்பித்திருக் கின்றன. "மக்கள் வாழ்க்கையில் பெருங்குழப்பங் களும், கலகங்களும் தோன்றி மனித இனம் அழிந்து விடும் நிலையில் இருந்தபோது, சில பெரியவர்கள் அறிவாற்றலும், உடல் வலிமையும், ஆயுதப் பயிற்சியும் உள்ள ஒரு இளைஞனை அணுகி, 'நீ ஒரு இளைஞர் கூட்டத்தைச் சேர்த்துக்கொண்டு எங்களிடையே ஒழுங்கை ஏற்படுத்து. அந்நியர் களின் தாக்குதலில் இருந்து காப்பாற்று. எங்களுக்கு சமுதாயப் பணிகளைப் பகிர்ந்துகொடு. நாங்கள் உழைத்து, தானியங்களையும், கனிகளையும் விளை வித்து உனக்கு ஒரு பங்கு தருகிறோம். அழகான பெண்களை உனக்குக் கொடுக்கிறோம். உன் ஆணைப்படி நாங்கள் நடக்கிறோம். நீ எங்களைப் பாதுகாத்துக்கொள்' என்று கூறினார்கள். அவனும் சம்மதித்தான். இதுபோலவே பல மக்கள் குழுக் களிலும் அரசன் ஆட்சி தோன்றியது."

பல நீதி நூல்கள், (வசிஷ்ட நீதி, மனுநீதி, காமண்டக நீதி, யாக்ஞ்ய வல்கீயம்) முதலிய நூல்கள் ஏறக்குறைய இத்தகைய முறையிலேயே அரசின் தோற்றம் பற்றிக் கூறுகின்றன.

அரசு ஒரு மனித சமுதாயத்தின் குழப்பமான காலத்தில் மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்டது என்ற உண்மையையே இக்கதைகளில் இருந்து நாம் அறிகிறோம். புராணம் வரலாறல்ல. சில உண்மை களின் அடிப்படையில், ஆயிரக்கணக்கான ஆண்டு களுக்குப் பின்னர் வாழ்ந்த மக்கன் பண்டைய நிகழ்ச்சிகளைப் பற்றிக் கொண்டிருந்த கற்பனை களே புராணங்கள்.

விஞ்ஞான ஆய்வுகளின் மூலம் அரசு தோன்றிய விதத்தை எங்கெல்ஸ் விளக்கினார். அவருடைய விளக்கத்தைச் சுருக்கமாக இங்கே தருவோம்.

"அரசு இல்லாதிருந்த காலம் ஒன்று மனித இனத்தின் வரலாற்றில் இருந்து, எங்கெங்கே எவ்வெப் பொழுது சமுதாயத்தில் வர்க்கப் பிரிவினை தோன்று கிறதோ, அங்கங்கே, அவ்வப்பொழுது அரசும் தோன்றுகிறது" - (எங்கெல்ஸ்).

வர்க்கப் பிரிவினை மனித வரலாற்றில் முதன் முதலில் தோன்றுவதற்கு முன்னர் தந்தை வழிக் குடும்பம் இருந்தது. இதனை குலவழிக் குடும்பம் என்றும் கூறுவதுண்டு. இத்தகைய குலவழிக் குடும்பங்கள், இன்றும் பல இனக்குழு மக்களுடைய சமுதாயங்களில் காணப்படுகிறது. பண்டைக் காலத்து குலவழிக் குடும்ப சமுதாயத்தில், உழைப் பவன், உழைக்காதவன், உடைமையாளன், உடைமை யற்றவன், ஆண்டான், அடிமையென்ற வர்க்க வேறு பாடுகள் இருந்ததில்லை. அக்காலத்தில் அரசு என்ற அமைப்பும் இருந்ததில்லை. முறையாக வன் முறையை பெரும் பகுதி மக்களின்மீது செலுத்தும் விசேஷக் கருவியான அரசு இருந்ததில்லை.

மக்கள் சிறு சிறு குலங்களாக வாழ்ந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கை காட்டுமிராண்டி வாழ்க்கை நிலையை ஒத்திருந்தது. அக்காலத்தில் அரசு என்ற அமைப்பு தோன்றவில்லை. அக்குலக் குழு சமுதாயங்களில் வழக்கம், மரபு இவற்றைப் பின்பற்றி மக்கள் ஒழுக்கங்களை அமைத்துக் கொண்டார்கள். பண்டைய ஒழுக்கங்களையும் வழக்கங்களையும் அறிந்திருந்த குலத் தலைவர்கள் செல்வாக்கும், மதிப்பும், அதிகாரமும் பெற்றிருந் தார்கள். இந்த அதிகாரம் சில சமுதாயங்களில் பெண்களுக்கும், வேறு சில சமுதாயங்களில் ஆண் களுக்கும் இருந்தது. மக்களின் ஒரு பிரிவினரை மற்றொரு பிரிவினர் அடக்கியாள்வதற்காக ஒரு வன்முறை யந்திரம் தோன்றவில்லை. ஒரு பிரிவினரின் நோக்கங்களை பலவந்தமாக நிறைவேற்றிக் கொள் வதற்குரிய சாதனங்களான ஆயுதம் தாங்கிய படைப் பிரிவுகள், சிறைச்சாலைகள் முதலியவை அக்காலத்தில் இருந்ததில்லை. அரசு என்ற யந்திரத்தின் இன்றைய உருவம் இவைதாம் என் பதை நாம் அறிவோம்.

மக்களில் ஒரு சிறு பிரிவினர் பெரும் பிரி வினரை அடக்கி ஆண்டு தமது லாபத்திற்காக உழைப்பதற்கு கட்டாயப்படுத்தும் நிலை ஒரு சமுதாயத்தில் தோன்றும்பொழுதுதான் சிறைச் சாலைகள், படைகள் முதலிய பலவந்த ஆயுதங்கள் கொண்ட அரசு தோன்றுகிறது. ஒரு வகுப்பினர் மற்றொரு வகுப்பினரின் உழைப்பை நிரந்தரமாக அபகரித்துக்கொள்ள முடிகிற நிலைமை ஒரு சமுதாயத்தில் தோன்றும்பொழுது அரசு என்பது மக்களை நிர்ப்பந்திக்கும் விசேஷ யந்திரமாகத் தோன்றியது. இந்த நிலைமை முதன் முதலில் அடிமைச் சமுதாயம் தோன்றுகிற பொழுது உண்டாகிறது. உலகத்தின் எல்லாப் பகுதிகளில் உள்ள மக்களும் இந்தக் கட்டத்தை தமது வரலாற்றில் கடந்து வந்திருக்கின்றனர்.

ஆண்டைகளும், அடிமைகளும் சமுதாய வரலாற்றில் முதன் முதலில் தோன்றிய வர்க்கங்கள் ஆவர். ஆண்டைகள் என்னும் பிரிவினர் நிலத் தையும், கருவிகளையும், அடிமைகளான மக்களையும்



நா.வானமாமலை

கூட தம் உடைமையாக்கிக் கொண்டார்கள். ஆண்டைகளின் லாபத்திற்காக உழைத்து உழைப்பை வழங்கியவர்களே அடிமைகள் எனப்பட்டனர். பெரும்பாலான நாடுகளில் அடிமை முறை தன் வளர்ச்சிப் போக்கில் பண்ணை அடிமை முறையாக வளர்ந்தது. இங்கே நிலப்பிரபுக்களும் பண்ணை அடிமைகளும் பிரதான வர்க்கங்களாக அமைந்தனர். மக்களுக்கிடையே நிலவிய உறவில் நிலைமை மாறியது. அடிமைச் சமுதாயத்தில் அடிமைகள் சட்ட பூர்வமாக ஆண்டைகளின் உடைமையாகவே கருதப்பட்டனர். நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் பண்ணைக் குடியானவர்கள் நிலப்பிரபுவின் உடைமையாகக் கருதப்படவில்லை. ஆயினும் அவர்கள் நில உடைமையாளர்களது ஒழுக்க முறைகளுக்கும், சட்டங்களுக்கும் உட்பட்டே இருந்தனர். நில உடைமை சமுதாயத்தில் வாணிபம் வளர்ச்சியுற்று, உலகச் சந்தை தோன்றியது. வாணிப வளர்ச்சியினால் ஒரு புது வர்க்கம் தோன்றியது. இதுதான் முதலாளித்துவ வர்க்கம். பண்ட உற்பத்தி முறையிலிருந்து, பண்ட மாற்றத்திலிருந்து பணத்தின் அதிகாரம் தோன்றியது. இதிலிருந்து மூலதனத்தின் ஆதிக்கம் வளர்ந்தது. இந்த வர்க்கம் தனது வளர்ச்சிக்குத் தடையாக இருந்த நிலப்பிரபுத்துவ முறையை எதிர்த்து புரட்சிகளை நடத்தியது. மேற்கு ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலும் நிலப்பிரபுத்துவ முறை அழிக்கப்பட்டது. முதலாளித்துவ வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றியது. வர்க்கப் பிரிவினை முதலாளி வர்க்கம், தொழிலாளி வர்க்கம் என்ற உருவத்திற்கு மாறியது. எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் மூலதன உடைமையாளர்கள் மக்களில் மிகச் சிறுபான்மையினராகவே இருக்கிறார்கள். நில உடைமையாளர்களும் அவ்வாறே, மக்களுடைய உழைப்பு முழுவதும் இவர்கள் வசத்தில் இருக்கிறது. உழைப்பாளி மக்களனைவரையும் இவர்கள் ஆதிக்கம் செலுத்துகின்றனர். இவர்கள் உழைக்கும் மக்களைச் சுரண்டுகிறார்கள். அவர்களை ஒடுக்கி வைக்க முயலுகிறார்கள்.

இந்த சமுதாய வளர்ச்சிப் போக்கின் பின்னணியில் அரசின் தோற்றத்தைக் காணவேண்டும். முதல் வர்க்க சமுதாயத்தின் தோற்றத்தோடு அதுவும் தோன்றி விடுகிறது. அது தோன்றிய காலத்திலிருந்தே சமுதாயத்திலிருந்து தனித்துப் பிரிந்து ஒரு வன்முறைக் கருவியாக இருந்து வந்திருக்கிறது. இவ்வரசின் அங்கமாக இருக்கும் ஊழியர்கள் அடக்கி ஆளுகிற பணியைத்தான் செய்கிறார்கள். ஆள்பவர்கள், ஆளப்படுபவர்கள் என்ற பிரிவினை வர்க்கப் பிரிவினைக்கு ஏற்றபடி தோன்றுகிறது. ஆளுபவர்கள், சமுதாயத்திற்கு மேற்பட்டவராகி அரசின் உறுப்புகளாக அமைகின்றனர். இந்த ஆளும் பிரிவினர் பலம் கொண்ட ஒரு கருவியை மக்களை ஒடுக்குவதற்காகப் படைத்துக் கொள்கின்றனர். ஒவ்வொரு சமுதாயத்தின் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கேற்றபடி வேல் ஏந்திய படையாகவோ, வாள் அல்லது வில் ஏந்திய படையாகவோ, எந்திரத் துப்பாக்கியும் அல்லது விமானங்களும் கொண்ட படையாகவோ இருக்கும். இப்பொழுது சமுதாயத்தின் அரசின் பாத்திரம் பற்றி தெளிவாகத் தெரிந்துகொண்டோம்.

அரசு என்பது ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தின் மீது தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்காக உள்ள ஒரு வன்முறைக் கருவி.

சமுதாயத்தில் வர்க்கங்களே இல்லாதபோது இந்த அமைப்பிற்குத் தேவையே இல்லை. அடிமை முறை தோன்றியபோது சமுதாயத்தில் தேவைக்கு எஞ்சிய உபரிப் பொருள் தோன்றவில்லை. அதன் வளர்ச்சிக் காலத்தில் தேவைக்குமேல் ஓரளவு உபரிப் பொருளை அடிமை வர்க்கம் உற்பத்தி செய்தது. அது ஆண்டைகளின் கையில் சேர்ந்தது. ஆண்டை வர்க்கத்தின் நிலை ஸ்திரமான போது தான் அதை மேலும் உறுதியாக்கிக் கொள்வதற்காக அரசு தோன்றவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அடிமை உடைமையாளர்களின் அரசு, அடிமைகள் தொடர்ந்து அடிமைகளாக இருக்குமாறு கட்டாயப்படுத்தியது. இந்த யந்திரமில்லாமல் மக்களின் ஒரு பகுதியை, பிறருக்காக உழைக்கும்படி செய்வது முடியாத காரியம். எனவே இந்தக் கருவி அவர்களுக்கு இன்றியமையாததாய் இருந்தது.

அரசின் வடிவங்கள் பல்வேறு வகைப்பட்டவையாக வரலாற்றில் இருந்திருக்கின்றன. அடிமை உடைமையாளர் அரசுகள்கூட கிரேக்க, ரோம நாடுகளில் வெவ்வேறு வடிவமுடையனவாக இருந்

திருக்கின்றன. முடியரசு, குடியரசு, உயர்குடியாட்சி என பல்வேறு வடிவங்களில் ஆண்டை வர்க்க ஆட்சி இருந்திருக்கிறது. முடியரசோ அல்லது குடியரசோ, அடிமைச் சமுதாயத்தால் ஏற்பட்ட ஆட்சிகள் ஆண்டைகளின் அதிகாரத்தை அடிமைகள் மீதும், மக்களின் மீதும் பிரயோகிக்கும் வன்முறைக் கருவி என்ற அளவில் வேறுபடவில்லை. அடிமைச் சமுதாய குடியரசில் ஆண்டைகளுக்கு மட்டும்தான் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையிருந்தது. இவ்வகை அரசுகளில், அடிமை மக்களுக்குப் பங்கில்லை. அவர்களை ஒடுக்கி வைப்பதே இவ்வரசின் நோக்கம்.

அடிமை முறை மாறி நிலப்பிரபுத்துவ முறை தோன்றியபொழுது, அடிமைமுறை அரசும், நிலப்பிரபுத்துவ அரசாக மாறியது. அடிமைச் சமுதாயத்தில் அடிமைக்கும் உழவுக் கருவிக்கும் வேறுபாடு இல்லை. அடிமையை அரிஸ்டாட்டில், "பேசும் கருவி" என்று அழைத்தார். மண் வெட்டிக்கு என்ன உரிமையிருந்ததோ, அதுதான் அடிமைக்கும் இருந்தது. ஆனால் நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் பண்ணையடிமை அல்லது குடியானவன் நிலத்தோடு பிணைக்கப்பட்டான். தனக்கு நிலவுடைமையாளரால் தரப்பட்ட ஒரு நிலப்பகுதியில் அவன் சிலசில நாட்கள் உழைத்து தனக்கென பயிர் செய்துகொள்ளலாம். மற்ற நாட்களில் அவன் நிலப்பிரபுவின் நிலத்தில், நிலப்பிரபுவின் லாபத்திற்காக உழைத்தான். நிலப்பிரபுத்துவ சமுதாயம் வர்க்க சமுதாயமே. ஆனால் வர்க்கங்களின் தன்மை வேறாயிருந்தது. நிலப்பிரபுத்துவம் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியில் நெருக்கடிக்கு உள்ளாகி வலுக்குன்றியபோது முதலாளித்துவ உற்பத்தி முறை நிலப்பிரபுத்துவ அமைப்பினுள் வளரத் தொடங்கியது. நிலப்பிரபுத்துவ அரசு முடியரசு, குடியரசு என்ற இரண்டு வடிவங்களில் இருந்தது. இரண்டிலும் நிலப் பிரபுக்களே ஆளுவோர். பண்ணையடிமைகள் எவ்வித அரசியல் உரிமையுமின்றி ஒடுக்கப்பட்டிருந்தனர். இது நிலப்பிரபுக்களின் ஆட்சியை நிலை நிறுத்த அவர்கள் படைத்துக் கொண்ட கருவி. சில வேளைகளில் அடிமை உடைமை அரசையே நிலப்பிரபுக்கள் கைப்பற்றி தங்கள் வர்க்க நலன்களைப் பாதுகாக்கும் அரசாக மாற்றியமைத்துக் கொண்டனர். முதலாளித்துவ உற்பத்தி முறை வளர்ச்சியில் நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் பொருளாதார வலிமை குறைந்தது. புதிய வர்க்கம் எல்லாக் குடிமக்களும் சமம் என்று பிரகடனம் செய்தது. சட்டத்தின்படி மக்களனைவரும் சரிநிகராக மதிக்கப்பட்டனர். உடைமை வேறுபாடு இருக்கும் வரை அரசும் சட்டமும் உடைமையாளர்களின் சொத்துக்களைத்தான் பாதுகாக்கிறது. நிலப்பிரபுத்துவ அரசினிடத்தில் முதலாளித்துவ அரசு நிலை பெற்றதும் எல்லா மக்களுக்கும் விடுதலை என்பது தன்னுடைய கோஷம் என்று கூறுகிறது. ஒரு வர்க்கச் சார்பான அரசு என்பதை மறுக்கிறது. அண்மையில் நில உடைமை முறை ஒழிக்கப்பட்டதால், முதலாளித்துவ வர்க்கத்திற்குத்தான் விடுதலை கிடைத்தது. நிலப்பிரபுத்துவம் ஒழிக்கப்பட்டதால் குடியானவர்கள் நிலத்தை விலை கொடுத்து மீட்டோ, பகுதி பகுதியாக தவணை முறைகளிலோ பணத்தைக் கட்டி, நிலத்தை மீட்டுக்கொள்ள வாய்ப்புக் கொடுத்தது. முதலாளித்துவ அரசு, சொத்து எவ்வழியாக வந்தாலும் அதனைப் பாதுகாத்தது. நாகரீக நாடுகள் அனைத்திலும், விவசாயிகள் தனி உடைமையாளராகி விட்டனர். தனி உடைமையை முழுமையாக பாதுகாப்பதாக முதலாளித்துவ அரசு பறை சாற்றியது. வணிகன், தொழில் முதலாளி, ஆலை உடைமையாளன், நில உடைமையாளன், கடைக்காரன் ஆகிய எல்லோருடைய தனிச் சொத்துரிமையை அது ஆதரித்தது. சொத்துடைமை உரியவர்கள் ஜனத்தொகையில் மிகச் சிறிய பகுதியினரே. உழைப்பை விற்றுப் பிழைக்கும் உழைப்பாளி மக்களே மிகப் பெரும்பான்மையினர். எனவே உழைக்கும் வர்க்கங்களை அடக்கி உபரி உழைப்பைப் பெறுவதில் இவ்வரசு அக்கறை கொண்டிருந்தது. முதலாளி வர்க்கம் உழைக்கும் வர்க்கங்களை ஒடுக்குவதற்கான ஒரு வன்முறை யந்திரமாக அது இருந்தது. ஆனால் வெளித் தோற்றத்தில் 'சுதந்திரமானதாக' தன்னைக் காட்டிக் கொண்டது. அனைத்து மக்கள் வாக்குரிமையை தான் அளித்த மாபெரும் நன்கொடையாக, தனது ஆதரவாளர் மூலம் பிரகடனப்படுத்தி தன்னை ஒரு மக்கள் அரசு என்று அறிவித்துக்கொண்டது. ஆயினும் தற்காலத்தில் மக்கள் போராட்டங்களின் எழுச்சி யால், முதலாளித்துவ அரசுகள் எந்த வர்க்கத்திற்காகப் பணிபுரிகின்றன என்பது, அதன் அடக்குமுறைச் சட்டங்களாலும், வன்முறைக் கொடுமைகளாலும் தெளிவாக வெளியாகிவிட்டது.

பாட்டாளி வர்க்கப் புரட்சியினால் பாட்டாளிகள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும்போது அப்பொழுது இருக்கும் அரசாங்க யந்திரத்தை என்ன செய்ய வேண்டும்? இவ்வினாவிற்குரிய விடையை லெனின் தமது "அரசும் புரட்சியும்" என்ற நூலில் தெளிவாகவே விளக்கியுள்ளார். ●



# பாவலரேறு பெருஞ்சித்திரனார் எனும் சொல்...!

ஜெ. மதிவேந்தன்

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

'தமிழ்த் தேசியத்தந்தை' என்று போற்றப்படும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் 20ஆம் நூற்றாண்டில் குறிப்பிடத்தக்கவர். கவிஞர், இதழாளர், இயக்கத் தலைவர், தமிழின உணர்வாளர், தமிழ் மக்களின் தொண்டர், தாய்மொழிப் பற்றாளர் எனப் பன்முகத் தன்மை கொண்டவராகத் திகழ்கின்றார். தம் நெறியி லிருந்து எக்காரணத்திற்கும் மாறாத நெஞ்சுரம் கொண்ட வராகவும் களப்போராளியாகவும் வாழ்ந்தவர். தமிழ் மக்களின் நலனிற்காக வெகுசிரத்தையுடன் செயல் பட்டுள்ளார். "பாவலரேறு" என்று தேவநேயப் பாவாணரால் அழைக்கப்பட்டவர். இத்தகையச் சிறப்பிற்குரிய பெருஞ்சித்திரனார் தமிழக வரலாற்றில் போற்றத்தகுந்த ஆளுமையாகத் திகழ்கிறார்.

சேலம் மாவட்டம் 'சமுத்திரம்' என்னும் சிற்றூரில் துரைசாமி, குஞ்சம்மாள் இணையருக்கு 10.03.1933ஆம் ஆண்டு பிறந்தார். இவரது இயற்பெயர் 'இராச மாணிக்கம்' என்பதாகும். பின்னர், இராச என்பதைத் துறந்து, தம் தந்தையின் பெயரினையும் இணைத்துத் 'துரைமாணிக்கம்' என்று வைத்துக்கொண்டார். இவருக்குப் பல்வேறு புனைபெயர்கள் உண்டு. அவை மெய்மைப்பித்தன், தாளாளன், அருணமணி, பாஉண் தும்பி, கௌனி ஆகியவையாகும். அவற்றுள் ஒன்றே 'பெருஞ்சித்திரன்' என்பதாகும். இப்பெயரே காலத்தால் நிலைத்துவிட்டது. இவருக்கு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர்களாகச் சேலம் நடேசனாரும் 'தமிழ் மறவர்' பொன்னம்பலனாரும் பாடம் கற்பித்துள்ளனர். கல்லூரியில் படிக்கும் காலத்தில் தேவநேயப் பாவாணரின் நட்பும் பழக்கமும் ஏற்பட்டுள்ளது. இத்தொடர்பு பெருஞ்சித்திரனாரைத் தனித்தமிழ் இயக்கத்தின் அனைத்துச் செயல்பாடுகளிலும் முழுமை யாக ஈடுபடுத்திக் கொள்ள உந்துதலாக அமைந்துள்ளது.

கல்லூரியில் படிக்கும் காலத்தில் 'குழந்தை', 'அருணமணி' என்னும் புனைப்பெயர்களில் மலர்க்காடு என்னும் கையெழுத்து இதழினை நடத்தியுள்ளார். அதோடு, பள்ளிப் பருவத்தில் மல்லிகை, பூக்காரி என்னும் காவியங்களைப் படைத்துள்ளார். இளம் பருவத்திலேயே பாரதிதாசன் மீதும் அவரின் கவிதைகள்/ படைப்புகள் மீதும் தீராக் காதல் கொண்டுள்ளார். இதற்குச் சான்றாக, "பள்ளிப் பருவத்தில் தாம் எழுதிய இரு காவியங்களை(மல்லிகை,பூக்காரி) எடுத்துக் கொண்டு பாரதிதாசனைச் சந்தித்து அச்சிட விரும்பி யுள்ளார். ஆனால், அப்போது அவரைச் சந்திக்க முடியாமல் போனதென்றும் பின்னர், சில காலங்கள் கழித்துக் 'கொய்யாக்கனி' எனும் அவர்தம் நூலைப் பாரதிதாசனே தமது அச்சகத்தில் அச்சிட்டு வெளி யிட்டார்." என்ற இச்செய்தியைப் பெருஞ்சித்திரனார் தம்முடைய 'கொய்யாக்கனி' நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

### தனித்தமிழ் இயக்க வரலாறு

தனித்தமிழ் இயக்கம் என்பது நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டதாகும். இவ்வியக்கம் மறைமலை யடிகள், தேவநேயப்பாவாணர், பரிதிமாற்கலைஞர், திரு.வி.கலியாணசுந்தரனார், உமா மகேஸ்வரனார், சோமசுந்தர பாரதி, பாவலரேறு பெருஞ்சித்திரனார், நீலாம்பிகை அம்மையார் போன்ற பல்வேறு ஆளுமை களைக் கொண்டதாகும். 1916இல் மறைமலையடிகள் தலைமையில் இவ்வியக்கம் உருவாகியுள்ளது. இதற்கு முதன்மைக் காரணமாக இருந்தவர் நீலாம்பிகை அம்மையார் (மறைமலையடிகளின் மகள்) ஆவார். இது வரலாற்றில் மறைக்கப்பட்ட உண்மையாகும். இவ் வியக்கம் சார்ந்தோர் அதன் கொள்கை, கோட்பாடு களைத் தீவிரமாகக் கடைபிடித்துள்ளனர். தமிழ் மக்களின் அறியாமை, மூடநம்பிக்கைகள் போன்ற வற்றை விமர்சித்து, அவை, தவறான செயல்பாடுகள் எனச் சுட்டிக்காட்டி விழிப்புணர்வை ஏற்படுத்தி யுள்ளனர். ஒவ்வொரு தமிழனும் இனம், மொழி, நாடு என்ற உணர்வுடனும் பற்றுடனும் இயங்க வேண்டு மென்று விரும்பியவர்களாகத் தனித்தமிழ் இயக்கத் தினரை இனங்காண முடிகிறது.

இந்தி எதிர்ப்பு, தமிழ்ப் பகைவர்களை எதிர்த்தல், சாதி, மத, மூடநம்பிக்கைகளை எதிர்த்தல் போன்ற வற்றினைத் தம் வாழ்வின் நெறிகளாகக் கொண்டிருந்தார் பாவலரேறு. தாய்மொழி வாயிலாகவே கல்வி கற்க வேண்டும். தூய தமிழ்ப் பெயர்களைச் சூட்டி மகிழ்தல் வேண்டும் என்ற கொள்கைகளுக்கு வலிமை சேர்த்த வராகப் பெருஞ்சித்திரனார் விளங்குகிறார்.

### இதழியல் பங்களிப்பு

தமிழ்ச்சமூகத்தில் இதழ்கள் என்பவை மாற்றத்திற்கு வழிவகுத்தன. கல்வி, வாசிப்பு போன்றவற்றினைப் உழைக்கும் மக்களிடத்தில் கொண்டு சேர்த்ததில் இதழ் களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். அந்த வகையில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் தம் வாழ் நாளில் மூன்று இதழ்களை நடத்தியுள்ளார். 1952இல் தென்மொழி - என்னும் தனித்தமிழ் திங்களிதழினையும்; 1965இல் தமிழ்ச்சிட்டு - சிறுவர்களுக்கானக் கலை இதழினையும்; 1982இல் தமிழ்நிலம் - உலகத் தமிழின முன்னேற்றக் கழக வார இதழினையும் வெளியிட்டு வந்துள்ளார். தனித்தமிழ் இயக்க இதழியல் வரலாற்றில் 'தென்மொழி' குறிப்பிடத்தக்கப் பங்களிப்பினைச் செய்துள்ளது. பெருஞ்சித்திரனார் தம் கருத்துக்களை இதழ்களின் வாயிலாகவே பெருமளவில் வெளிப்படுத்தி வந்துள்ளார். இந்தி எதிர்ப்புப் பேராட்டத்திற்குத் தம்முடைய 'தென்மொழி' இதழினை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். இவர் எழுதிய இந்தி எதிர்ப்புப் பாடல்கள் தமிழ் மக்களிடையே தமிழுணர்வைத் தூண்டி, கிளர்ச்சியை உண்டாக்கியது.

தமிழ்நாட்டு மாணவர்கள் பயன்பெறும் வகையில் 'தமிழ்ச்சிட்டு' எனும் சிறார் இதழினைத் தொடங்கி, அதில் பள்ளி மாணவர்களுக்கு ஏற்பப் பாடல்கள், கட்டுரைகள், பொதுஅறிவுச் செய்திகள் எனப் பல்வேறு செய்திகளை எழுதியும் வெளியிட்டும் வந்துள்ளார். தமிழுணர்வு, இந்தி எதிர்ப்பு, தமிழ்ப்பற்று, தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம் போன்றவற்றை எளிமையாக, மாணவர்கள் விளங்கிக்கொள்ளும் வகையில் படைத் துள்ளார். அதுபோன்றே, பிறரையும் எளிமையாக எழுதவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். இவ்வாறு, இளம் தலைமுறையினரிடம் தனித்தமிழ் உணர்வுகளை

வளர்த்திட 'தமிழ்ச்சிட்டு' இதழானது வித்தாக அமைந்துள்ளதைக் காணலாம்.

மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணரின் உலகத் தமிழ்க் கழகத்துடன் இணைந்து பெருஞ்சித்திரனார் செயல்பட்டுள்ளார். 1918ஆம் ஆண்டு பாவாணரின் மறைவுக்குப் பிறகு, உலகத் தமிழ்க்கழகம் என்பதினை 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்' என மாற்றிப் புதியதாக இயக்கத்தைத் தொடங்கினார். அதன் தொடர்ச்சியாக 1982ஆம் ஆண்டு 'தமிழ்நிலம்' என்ற இதழினைத் தொடங்கினார். இவ்விதழ் 'தமிழ் நாடு தனி நாடாக வேண்டும்' என்ற கொள்கையை முதன்மையாகக் கொண்டு செயல்பட்டுள்ளது. இதனால், இதழும் இதழாசிரியரும் பெரும் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர். தம்முடைய மூன்று இதழ்களின் (தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்) வாயிலாகத் தமிழ் உலகிற்கும் இதழியல் துறைக்கும் பெரும் பங்களிப்பினைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அளித்துள்ளார்.

### தமிழ்க்கவிதை வரலாறு

தமிழ்க்கவிதையின் வரலாறானது இரண்டாயிரம் ஆண்டுகள் தொடர்ச்சியினைக் கொண்டதாகும். சங்க காலம் தொட்டு இன்றுள்ள நவீனக்கவிதை வரை பல்வேறு வளர்ச்சி நிலைகளைக் கண்டுள்ளது. தமிழின் கலைகளுள் ஒன்றாகக் கருதப்படுவது கவிதைக்கலையாகும். இது மரபு, நவீனம் என்னும் இருவேறு தன்மைகளைக் கொண்டு இயங்குகிறது. இலக்கண வரம்பிற்கு உட்பட்டதை 'மரபுக்கவிதை' என்றும் இக்கட்டுபாடுகளை உடைத்தெறிந்து படைக்கப் பெற்றவை 'நவீனக் கவிதை' அல்லது 'புதுக்கவிதை' என்றும் அழைக்கப் படுகின்றன.

தமிழின் மரபுக்கவிதை, புதுக்கவிதை குறித்துப் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் கருத்தானது, " மரபு தழுவிய பாடல்கள், தாய்மையுணர்வு நிரம்பிய ஓரிளம் பெண் பெற்றெடுக்கும், நல்ல அழகிய அறிவறிந்த நிறை மாதக் குழந்தைகள் போன்றவை. சோம்பலாலும் அறிவுக் குறுக்கத்தாலும் மன இழிவாலும் பிதுக்கப் பெறும் இக்காலத்து மரபு நழுவிய பாடல்கள், தாய்மையுணர்வு நிரம்பாத பெண்ணுரு சான்ற ஒருத்தி, அரைகுறை முதிர்ச்சியோடு பெற்றெடுக்கும், உறுப்புகள் குறைவுற்று அழகும் அறிவும் குறைந்த, குறைமாதக் குழந்தைகள் போன்றவை" (கனிச்சாறு,முன்னுரை) மேற்சுட்டிய விளக்கமானது மரபுக்கவிதை, புதுக்கவிதை என்னும் இரண்டிற்குமான வேறுபாட்டினைப் பெருஞ்சித்திரனார் தம் கருத்துநிலை சார்ந்து எடுத்துரைக்கின்றார்.

தமிழின் கவிதைகள் பெரும்பான்மையாக இயற்கை, சமுதாயச் சிக்கல்கள், மனிதர்களின் அக உணர்வுகள் போன்றவற்றை முதன்மைப்படுத்தி அமைகின்றன. குறிப்பாக வறுமை, ஏழ்மை, அறியாமை, மூடநம்பிக்கை, சாதி,மத, இனப் பிரச்சனைகள் , வர்க்க முரண்பாடுகள், பாலியல் கொடுமைகள், ஆணாதிக்க மனோநிலை போன்றவற்றினைப் பாடுபொருளாகக் (கருவாகக்) கொண்டு கவிதைகள் படைக்கப்படுகின்றன.

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் கவிதைக்கானப் பாடுபொருள் என்பது சமுதாயச் சிக்கல்களை முன்னிலைப்படுத்தியே அமைந்துள்ளன. மொழி, இனம், நாடு, தாய்மொழிப்பற்று, தாய்மொழி வழிக்கல்வி, இந்தி எதிர்ப்பு, தமிழீழம், பாலின வேறுபாடு, சாதி, மத, மூடநம்பிக்கைகள், இயற்கை மற்றும் காதல் சார்ந்த உணர்வுகள் எனப் பல்வேறு விசயங்களை முதன்மைப் படுத்துவதாகக் கவிதைகள் அமைந்துள்ளன. மரபுக் கவிதைகளாக, தனித்தன்மையுடன் யாப்பியல் விதிகளுடனும் புதுமையாகவும் அமைந்து மிளிர்கின்றன. இவற்றில் பாரதிதாசனின் சாயல்களோடும் அவரையும் விஞ்சுகின்ற கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

### மொழிப்பற்று

உலக மொழிகளுள் தமிழின் நிலை தனித்துக் காணப்படுகிறது. தமிழ்மொழியின் பிறப்பு, அதன் வளமான இலக்கண, இலக்கியங்கள் மொழியமைப்பு போன்றவற்றை மையப்படுத்தியே தமது கவிதைகளைப் படைத்துள்ளார். தமிழின் பெருமைகளையும் சிறப்புகளையும் பல்வேறு தலைப்புகளின்கீழ் கவிதைகளாகப் புனைந்துள்ளார். அவற்றுள் சில "தமிழ்த்தாய் அறுபது, முத்தமிழ் முப்பது, தமிழில் கற்க முன்வருக, தமிழ் உழவு செய்க, தமிழ் படித்தால் அறம் பெருகும், தூயதமிழ் எழுதாத இதழ்களைப் பொசுக்குங்கள், பைந்தமிழில் படிப்பதுதானே முறை" (கனிச்சாறு தொகுதிகள்) என்பனவாகும்.

மொழி என்பது மனித இனத்தின் அடையாளம். மொழி அழிகிறது என்றால் அம்மொழி பேசும் மக்களும் அவர்களின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கங்கள் அழிகின்றன என்றே பொருளாகும். இதனைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தாய்மொழியினைச் சரியான முறையில் பயன்படுத்துதல் வேண்டும். அதுபோல், மற்ற மொழிகளைப் பழித்தல் கூடாது என்றும் கூறுகிறார். தம் தாய்மொழியினை இழிவு செய்தவர்களையும் கவிதைகளின் வழியாக கடுமையாகச் சாடி வந்துள்ளார்.

### தன்னலமற்ற தலைவர்களைப் பற்றிய பதிவுகள்

பெருஞ்சித்திரனார் பல்வேறு தனித்தமிழ் இயக்க அறிஞர்கள், அரசியல் தலைவர்கள், சமூகப் போராளிகள் எனப் பலரையும் குறித்துக் கவிதைகள் படைத்துள்ளார். அவற்றுள், தனித்தமிழ் இயக்க முன்னோடிகளான மறைமலையடிகள், தேவநேயப்பாவாணர் போன்றோரைப்

பற்றி பெருமளவு கவிதைகள் படைத்துள்ளார். உலகம் போற்றும் தலைவர்களையும் களப்போராளிகளையும் தம் கவிதைகளின் வழியாகப் போற்றியுள்ளார். காரல் மார்க்சு, நெல்சன் மண்டேலா போன்றோரைப் பற்றிய கவிதைகள் இரங்கற்பாக்களாக அமைந்துள்ளன. டாக்டர். அம்பேத்கர், காந்தி, பெரியார், அண்ணா, பிரபாகரன் போன்றோரின் சமூகப் பணிகளையும் பொதுவாழ்வில் செயல்பட்டுள்ள பாங்கினையும் எடுத்துரைக்கும் விதத்தில் கவிதைகள் படைத்துள்ளார்.

பெரியார், பாரதிதாசன் போன்றோரைப் பற்றிக் குறிப்பிடுகையில் "பெரியாரையும் பாவேந்தரையும் பட்டிமன்றத்திற்கும் பாட்டரங்கத்திற்கும் மட்டும்தான் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமா?" என ஆதங்கத்தோடு பதிவு செய்துள்ளார். அம்பேத்கர் பற்றி 'அம்பேத்கர் வாழ்க', 'அவர்தாம் பீமாராவ் அம்பேத்கர்' எனும் இருவேறு தலைப்புகளின்கீழ் கவிதைகள் படைத்துள்ளார். சான்றாக, பட்டங்கள் பல பெற்றார்/பல்கலை மிகக் கற்றார்!/சட்டங்கள் இந்தியர்க்குச் செய்தார் - அவர்/ சாதிகள்மேல் அம்புகளை எய்தார்! இக்கவிதைகளில் அம்பேத்கரின் அயராத உழைப்பு, போராட்டம், கல்வியின் வழிப் பெற்ற பட்டங்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடிய பாங்கு போன்றவற்றை விரிவாகப் பதிவு செய்துள்ளார்.

தமிழ்த் திரைப்படங்களில் நிகழும் கேடுகளையும் கொடுமைகளையும் வெகுவாகக் கண்டித்துக் கவிதைகள் படைத்துள்ளார். குறிப்பாக, பாடலாசிரியர்கள், பாடகர்கள், பாடல் பாடும் முறை, கதாநாயகிகளின் ஆடைகள் எனக் குறிப்பிடத்தக்க விசயங்களைக் கேள்விக்குள்ளாக்கி விமர்சனம் செய்துள்ளார். மொழிப் பற்று இல்லாது பாடல் எழுதியும் பாடியும் தமிழ் மொழியினைச் சிதைத்து வருகின்றனர் என்று கடிந் துள்ளார். தூயதமிழ்ச் சொற்களினால் பாடல்கள் எழுதாமல் பிறமொழிச் சொற்களைக் கலந்து 'தமிழ்க் கொலை' புரிவதனை விமர்சிக்கிறார். இரட்டைப் பொருள்படும் வசனங்கள், பெண்களை இழிவுபடுத்தும் காட்சியமைப்புகள் போன்றவற்றை வெகுவாகக் கடிந்துரைத்துள்ளார். பாவலரேறு பெருஞ்சித்திரனார் தம் கவிதைகளில் இந்து மதத்தினை வெகுவாகவே விமர்சித்துள்ளார். சாதி, மத, மூடநம்பிக்கைகளை வெறுத்து, அவை வெறும் பொய், புரட்டு என்றும் கடிந்துரைத்துள்ளார். இதனை, அவர்தம் கவிதைகளின் வழி அறியலாம்.

### எழுத்துச் சீர்த்திருத்த மறுப்பு

தமிழில் 'எழுத்துச் சீர்த்திருத்தம்' என்பது ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பல்வேறு நிலைகளில் நிகழ்ந்துள்ளது. தமிழின் எழுத்துச் சீர்த்திருத்த மரபில் குறிப்பிடத்தக்கவர்களாக வீரமாமுனிவர், அயோத்திதாச பண்டிதர், பெரியார், அண்ணா போன்றோரின் முயற்சி மொழியினை வேறு பரிணாமத்திற்கு இட்டுச் சென்றன. எனினும், இக்கருத்திற்குத் தனித்தமிழ் இயக்க ஆளுமைகள் எதிர்வினை செய்துள்ளனர். அதற்கு அவ்வாளுமைகள் காரணமாக முன்வைத்துள்ள கருத்து கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். அவை, "புதிய எழுத்துருக்கள் தோன்றி வருவதால் முன்னைய தொன்மையான இலக்கண, இலக்கியங்கள் படிக்க முடியாமல் போகும். சில இலக்கண விதிகள் பயனற்றுப் போகும். தமிழின் தொன்மையையும் அதன் காலத்தை நிலைநாட்டிடச் சான்றுகள் ஏதுமின்றிப் போகும்" எனப் பல்வேறு காரணங்களை முன்னிறுத்தி இவ்வியக்கத்தினர் எழுத்துச் சீர்த்திருத்தத்தை எதிர்த்து வந்துள்ளதை காணமுடிகிறது.

### இயற்கை, காதல், குழந்தைப் பாடல்கள்

காடு, மலை, கடல், ஆறு, அருவி, சூரியன், மலர், காற்று, நிலவு, புயல் என இவற்றின் இயற்கை சார்ந்த செயல்பாடுகளுடன் தமிழ்மொழியினையும் இணைத்து வெகுஇயல்பாகக் கவிதை படைத்துள்ளார். ஒவ்வொரு பொருண்மையின்கீழ் அமைந்த கவிதைகள் வெவ்வேறு வகைப்பட்ட பார்வையோடு படைத்துள்ளார். 'கடல்' பற்றி எழுதிய கவிதையானது அழகியலோடு கற்பனைத் திறத்தினை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. நிலமெனும் பெண்ணுக் கிந்த/நீள்கடல் நீல ஆடை/ இலமெனும் ஏழை யர்க்கே/இமிழ்கடல் கழனி ! இதுபோல் தமிழின் கற்பனை நயத்துடன் இயற்கை அழகினையும் வர்ணித்துக் கவிதைகள் படைத்துள்ளார்.

மொழி, இனம், நாடு என இவற்றினை மட்டும் சார்ந்து செயல்பட்டவராகக் கருதப்படும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அகஉணர்வுகள் சார்ந்த கவிதைகளை இயல்பாகப் படைத்துள்ளார். அதோடு, தனித்தமிழ் இயக்க உணர்வுகளையும் காதலோடு இரண்டறக் கலந்து அழகிய கவிதைளை ஆக்கியுள்ளார். அவற்றுள், கொத்தான மலரினைக்/குழலினில் வைத்தான்! - பின்/ குனிந்தென்னை முத்தமிட்டான்! - என்/அத்தானின் குறும்பிது தோழி!/ஆனாலுமவன் அன்பின் செயல் தானடி!/ஆண், பெண் சார்ந்த காதல் உணர்வினையும் காமத்தின் வெளிப்பாட்டினையும் நயமாகப் படைத் தளித்துள்ளார்.

பெருஞ்சித்திரனார் தம் கவிதைகளில் (கனிச்சாறு, தொகுதிகள்) குழந்தைகளுக்காகக் குஞ்சுகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழிமாலை என மூன்றாகப் பகுத்துப் பாடல்களைப் படைத்துள்ளார். எளிமையான சொற்களைக் கொண்டு இனிய நடையில் இலக்கிய நலன்கள் அமைய கருத்துச் செறிவுடன் பாடல்களை எழுதியுள்ளார். அதோடு இதனை 'தமிழ்ச்சிட்டு' இதழில் வெளியிட்டு வந்துள்ளார். அவற்றில் தமிழின் அகர வரிசை முறையினைக் கற்றுத் தருதல், உயிர்மெய்

எழுத்துக்களை அறிமுகப்படுத்துதல், தமிழ் எண்களை மனனம் செய்யுமாறு செய்தல் போன்றவற்றைத் தம் பாடல்களில் கையாண்டுள்ளார். கூன் விழுந்த பாட்டி/குட்டைக் காலை நீட்டிப்/பாலுஞ் சோறும் ஊட்டிப்/படுக்க வைப்பாள் ஆட்டி!/எதுகை, மோனை, இயைபுத் தொடை நலன்கள் மிளிரப் பாடல்கள் படைத்துள்ளார்.

**இளைய தலைமுறைக்கான வழிகாட்டல்**

இளைய தலைமுறைக்காகப் பல்வேறு வேண்டுகோள்களையும் அறிவுரைகளையும் முன்வைத்துள்ளார். இன்றைய வாழ்வியலுக்குப் பொருந்துவனவாக உள்ளன. இவற்றில் பொதுமை சார்ந்தும் இயக்கம் சார்ந்தும் தமிழ் உணர்வுடனும் கவிதைகள் படைத்துள்ளார். சுருட்டு, பீடி புகைத்தல், மது குடித்தல் போன்றவற்றைக் கண்டித்துள்ளார். அது உடல் நலத்தைப் பாதிப்புக்குள்ளாக்கும் என்று தம் கவிதைகள் வழி சுட்டிக்காட்டியுள்ளார். 'ஓ மாணவச் செல்வரே' என அழைத்து இந்தி எதிர்ப்பு, பிறமொழிக் கலப்பு, தாய்மொழிக்கு நிகழும் கேடுகள் போன்றவற்றைத் தம் கவிதைகள் மூலமாக விமர்சனம் செய்துள்ளார்.

**சமகாலப் படைப்பாளிகளின் கருத்துகள்**

தமிழ்ப்படைப்பாளிகள்/ஆளுமைகளின் பார்வையில் பாவலேரேறு பெருஞ்சித்திரனார் என்னும் ஆளுமை ஓர் உச்ச ஒளி விளக்காகத் திகழ்கிறார். தனித்தமிழ் இயக்கம், அதன் இதழியல் வரலாறு, சமூக நிகழ்வுகளில் வீறுடன் செயல்பட்ட பாங்கு, அரசியல் தளத்தில் நின்ற துணிவு போன்றவை பலரையும் வியப்பிற்குள் ஆழ்த்தியுள்ளன என்பதை அறியமுடிகிறது. திரு. கலைஞர்.கருணாநிதி, திரு. தொல். திருமாவளவன், திரு.மணியரசன், தமிழ்க்கவிஞர்களான ஈரோடு தமிழன்பன், இன்குலாப், காசி ஆனந்தன், கவிப்பேரரசு வைரமுத்து எனப் பல்வேறு படைப்பாளிகளும் பெருஞ்சித்திரனாரை விரும்பியவர்களாக, அவரது கொள்கை, கோட்பாடுகளில் ஈடுபாடு கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் என்னும் ஆளுமைத் தனித்தமிழ் இயக்க வரலாறு, தமிழ் இதழியல் வரலாறு, தமிழ்க்கவிதை வரலாறு எனப் பல்வேறு தளங்களில் குறிப்பிடத்தக்கவராகக் காணப்படுகிறார். தமிழினம், தமிழ்மொழி, தமிழ்நாடு என மூன்றினையும் தம் உயிர்மூச்சாகக் கொண்டு செயல்பட்டுள்ளார். இந்தி எதிர்ப்பு, ஈழம் சார்ந்த கருத்தாக்கம், சாதி, மத, எதிர்ப்பு, சமூக நிகழ்வுகள் சார்ந்த தன்முனைப்பு, தமிழக அரசியல் செயல்பாடுகள் எனப் பலவற்றையும் உள்வாங்கிக் கொண்டு செயல்பட்டுள்ளார். எந்த நிலையிலும் யாருக்காகவும் எதற்காகவும் உடன்பாடு செய்து கொள்ளாதவராக, இருபதாம் நூற்றாண்டுத் தமிழக வரலாற்றில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் திகழ்கிறார். ●




14-03-2018 அன்று
மதுரை மணியம்மை பள்ளியில்
மு.இராமசுவாமியின்
'மொழி-நாடக மொழி-திரை மொழி'
நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.



விழாவில் நூலாசிரியர் மு.இராமசுவாமி,
பி.வரதராசன், பேராசிரியர் அ.சீனிவாசன்,
பேராசிரியர் மீனா செயக்குமார், வி.ராமர்,
என்.சி.பி.எச். மேலாண்மை இயக்குநர்
சண்முகம் சரவணன்,
இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்தத் தலைவர்
ஆர்.நல்லகண்ணு, ஆவணப்பட இயக்குநர் திவ்யா,
பிரியா பாபு மற்றும் என்.சி.பி.எச்.
மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி
ஆகியோர் கலந்துகொண்டனர்.

## 29-03-2018 அன்று மன்னார்குடியில் நடைபெறும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநில மாநாட்டில் வெளியாக உள்ள என்.சி.பி.எச்.சின் புதிய வெளியீடுகள்




தனிமனித நம்பிக்கைப்படி அகவாழ்க்கையை மத சம்பிரதாயப்படி வெறுப்பை வளர்க்காத முறையில் கடைப்பிடியுங்கள். பொதுவான கடமைகளை நிறைவேற்றி வறுமையை ஒழித்து ஊழலற்ற ஆட்சியை ஏற்படுத்தி மூடப்பழக்க வழக்கங்களுக்கு இடம் கொடாமல் குறிப்பாக நம் முன்னோர்கள் படைத்த உன்னதக் கலைப் படைப்பான கோயில் களையும் விலை மதிப்பற்ற கலைநுட்பம் நிறைந்த சாமி சிலைகளையும் பாதுகாப்பதோடு அதன் புனிதத் தன்மை கெடாமல் பக்தர்கட்கும் வாழ்வில் செழுமை சேர்க்க மதச்சார்பற்ற நல் அரசை அமைக்க முன் வாருங்கள் என அழைக்கிறோம்.

புதியதோர் உலகு செய்வோம் - கெட்ட போரிடும் உலகினை வேருடன் சாய்ப்போம் பொதுவுடைமைக் கொள்கை திசை எட்டும் சேர்ப்போம்.

**மதமா? அரசியலா?**

தா.பாண்டியன்

**₹ 45.00**

ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தின் வீரம் செறிந்த விவசாயத் தொழிலாளர்களின் எழுச்சிமிக்க போராட்டக் களத்தை, ஒன்றுபட்ட போராட்டத்தால் விவசாயத் தொழிலாளர்கள் பெற்ற பலன்களை யெல்லாம் வரலாற்று ஆவணமாக, எழுதி பதிவு செய்துள்ளவைகளே புத்தகமாக தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது.

சவுக்கால் அடித்து சாணிப்பால் ஊற்றிய கொடு மையை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றோம். அப்போது நாடு விடுதலை பெறவில்லை. பிரிட்டிஷ் ஆட்சி நடந்தது. சட்டப் பாதுகாப்பு இல்லாத நேரத்தில் செங்கொடி ஏந்தி போராட்டம் நடத்தி வெற்றி கண்ட வரலாறு இந்நூலில் குறிப்பிடப் பட்டுள்ளது.

**தியாக பூமியில் மாநில மாநாடு**

தொகுப்பு: இரா.முத்தரசன்

**₹ 100/-**

**தியாக பூமியில் மாநில மாநாடு**

தொகுப்பு: இரா.முத்தரசன்

**₹ 100/-**



# குறிஞ்சிப்பாட்டில் மலர்களும் பயன்பாடும்

முனைவர் த.பரமேஸ்வரி

**ச**ங்க இலக்கியங்கள் பழந்தமிழர்களின் வாழ்க்கை நிலை, பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைப் பறைசாற்றும் பெட்டகங்கள். சங்கப் புலவர்கள் புலம் தோய்ந்தவர்களாக இருந்தாலும், இயற்கையோடு அகவாழ்க்கையை மேற்கொண்டவர்கள். அதனால் தான் பா புனைய இயற்கையைப் பின்புலமாக வைத்துக் கொண்டு, கருத்துக்களை அதன்வழி புலப் படுத்தினார்கள். இதற்குக் கபிலரையே முதன்மையாகச் சுட்டமுடியும். ‘குறிஞ்சிக்குக் கபிலர்’ எனச் சிறப்பிப்பர்; இதை உறுதிப்படுத்தும் வண்ணமாக ‘குறிஞ்சிப்பாட்டு’ விளங்குகிறது; இதில் கூறப்பட்டிருக்கும் மலர்க் கழனியில் பயன்பாட்டுப் பின்புலப் பயிரை அறுவடை செய்யும் முயற்சியாக இவ்வாய்வுக் கட்டுரையானது அமைகிறது.

## குறிஞ்சிப்பாட்டு - கருத்துச் சுருக்கம்

*தலைவன் மீது கொண்ட அன்பினால் (பிரிவால்) தலைவியின் குணநலன்கள் மாறுபட்டுக் காணப் படுவதைக் கண்ட செவிலி, வெறியாட்டு நிகழ்த்த ஆயத்தமாகின்ற நிலையில், தோழி அதற்கான காரணங்களை எடுத்துரைக்கின்றாள்; தினைப்புனம் காக்கச் சென்ற பொழுது நாய்களிடமிருந்து காப்பாற்றி உயிர்காக்கச் செய்த தலைவனின் மீது கொண்ட அன்பினால் (காதல் பிரிவால்) இவ்வாறு காணப் படுகிறாள்; ஒரு தலைவனுக்குத் தேவையான அனைத்துப் பண்புகளும் ஒருங்கே அமையப் பெற்றவன் என்பதால், அவனுக்கே மணம் செய்விக்கலாம் என்றாள் தோழி. இதைத்தான் 'அறத்தொடு நிற்றல்' என்பர். தினைப்புனம் காக்கச் சென்ற இடத்தில் அருவி நீராடி விட்டு அங்கிருக்கும் மலர்கள் மற்றும் தளிர்களைப் பறித்து வந்து தொடுத்து சூடிக்கொள்வதாகக் கூறும்பொழுது, மலையும் மலை சார்ந்த இடங்களில் இருக்கும் மலர்களையும், தழைகளையும் கபிலர் கூறியிருக்கும் பாங்கைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம். அவை யாவன:*

> *கீழ்வரும் பகுதியை, (பூக்களின் பெயர்கள் / [சோம. சுந்தரனார்; புலவர் மாணிக்கனார்; டாக்டர் கதிர்முருகு] உரையாசிரியர்கள் உரைக்கும் பொருள் / அகராதிகள் கூறும் பொருள்) என்ற வடிவத்தில் வாசிக்கவும்.*

*1. வள்இதழ் ஒண் செங்காந்தள் (பூ) / பெரிய இதழ்களையுடைய ஒள்ளிய சிவந்த கோடற்பூபூ / செந்நிறமுடைய படர்கொடி வகை.*

*2. ஆம்பல் (பூ) / ஆம்பற்பூ / அல்லி : நெல்லி மரம்: மூங்கில் / குமுதக்கொடி.*

*3. அனிச்சம் (பூ) / அனிச்சம் பூ / முகந்தாலே வாடும் மென்மையான மலர்.*

*4. தண்கயக்குவளை (பூ) / குளிர்ந்த குளத்தில் மலர்ந்த செங்கழுநீர்ப்பூ / செங்கழுநீர்ப்பூ: கருங்குவளை: இமை: ஒரு நீர்ப்புக்கொடி:கண்: கண்ணிற கோளை செங்கழுநீர் - செங்குவளை*

*5. குறிஞ்சிப்(பூ) / குறிஞ்சிப்பூ / மலையும் மலை சார்ந்த இடமும்: குறிஞ்சிப்பூ: குறிஞ்சிப்பண்: மருதோன்றி: ஈந்து மரம்: பேரிச்சமரம்: சிற்றீச்சமரம், குறிஞ்சி மரம்.*

*6. வெட்சிப் (பூ) / வெட்சிப்பூ / ஒரு செடி: பசுநிரை கவர்தல்*

*7. செங்கோடு வேரி / செங்கோடு வேரிப்பூ (செங்குத்தான மலை) / வேரி - கள்: தேன்: வாசைன*

*8. தேமா / தேமாம்பூ / மாமர சகை*

*9. மணிச்சிகை / செம்மை நிறமுடைய செம்மணிப்பூ / குன்றிமணி (குன்றிக்கொடியின் சிவப்பு விதை) அதிமதுரம்.*

*10. உரிது நாறு அவிழ் தொத்து உந்தூழ் (பூ) / தனக்கு உரித்தாக நாளும் விரிந்த கொத்தினையுடைய பெருமூங்கில் பூ பெருமூங்கில் : மலைமூங்கில்*

*11. கூவிளம் / வில்வப்பூ / வில்வம்*

*12. எரிபுரை எறுழும் (பூ) / நெருப்பை ஒத்த எறுழம்பூ / எறுழ் மரம் (செந்நிறப் பூவையுடைய குறிஞ்சி நிலத்து மரம்) எறுழம் பூ*

*13. சுள்ளி (பூ) / மராமரப்பூ (அரசமரம்): ஆச்சா மரம்: வெண்கடம்பு (மரா): மராமர மலர் / அனிச்சமரம் : ஞாழல்: மாமரம்: மல்லிகை: ஆச்சா மரம்: நாகமல்லி*

*14. கூவிரம் (பூ) கூவிரம் பூ வில்வ மரம்; மலை மரவகை.*

*15. வடவனம் / வடவனம் பூ*

*16. வாகை வாகைப்பூ / ஒரு மரம்; மரவகை (உண்மை, வெற்றி)*

*17. வான்பூங்குடசம் / வெள்ளிய பூவினையுடைய வெட்பாலைப்பூ / வான் - பெருமை, வலிமை; குடசம் - மலை மல்லிகை; வெட்பாலை (ஒரு மரம்): வலிமையான பெருமை மிகுந்த வெட்பாலை மரப்பூ*

*18. எருவை / பஞ்சாய்க்கோரை / கொறுக்கச்சி: நாணல்: பஞ்சாய்க் கோரை, கோரைக்கிழங்கு*

*19. செருவிளை / வெண்காக்கணம்பூ / வெண்காக்கணம் / பூ; தக்காளிகுறிஞ்சி யாழ்த்திறத்தூள் ஒன்று*

*20. மணிப்பூங் கருவிளை / நீலமணி போன்ற பூக்களையுடைய கருவிளம் / கன்னி; கருடக்கொவ்வை; கருடத்தொண்டை; காக்கணம்; கிகனி (உயவை); காக்கணஞ் செடி; காக்கணங்கொடி.*

*21. பயினி / பயினிப்பூ / மரவகை*

*22. வானி / வானிப்பூ / ஓமம் மரவகை*

*23. பல்லிணர்க்குரவம் / பல இதழ்களையுடைய குரவம் ஒருமரம்; குரா (குரவு மரம்) குறிஞ்சா (ஒரு கொடி), பேரிச்சை மரம்*

*24. பசும்பிடி / பச்சிலைப்பூ / பச்சிலை (பச்சையிலை, பச்சிலை மரம், மரவகை)*

*25. வகுளம் / மகிழம்பூ / முரவகை; மகிழமரம்*

*26. பல்லிணர் காயா / காயாம்பூ / குலீசாமரம் காசா (காயாச் செடி; நாணல் அஞ்சனி (காயா, நானற்புல்) அல்லி; காசை (காயா, நாணற்புல்: புற்பற்றை, பன்காலி (காயாமரம்): பூவை (காயாமரம்)*

*27.* விரிமலர் / ஆவரை / ஆவிரம்பூ சேடிவகை; ஒரு செடி; ஒரு மரம்

*28.* வேரல் சிறுமூங்கில் / பூ / மூங்கிலரசி; மூங்கில்

*29.* சூரல் / சூரைப்பூ / ஒரு செடி; ஒரு பயிர்; தூதுவளை; நெற்றிப்புல்

*30.* குரிஇப்பூளை / சிறுபூளை / இலவ மரம்; செடி வகை; இலவம் பஞ்சு; வெற்றிப்பூ

*31.* குறுநறுங்கண்ணி / குன்றிப்பூ / குன்றிப்பூ

*32.* குருகிலை / முருக்கிலை / மரவகைகளுள் ஒன்று

*33.* மருதம் (பூ) / மருதம்பூ / மருதமரம்; வயல்

*34.* விரி பூ கோங்கம் (பூ) / விரிந்த பூக்களை யுடைய கோங்கம் பூ / ஒரு புட்பம்; ஒரு மரம்; நெல்லி மரம்

*35.* போங்கம் (பூ) / மஞ்சாடிப்பூ மஞ்சாடி மரம்

*36.* திலகம் (பூ) / திலகப்பூ, மஞ்சாடிப்பூ / மஞ்சாடிமரம், மஞ்சாடிப்பூ

*37.* தேன்கமழ் பாதிரி (பூ) / பாதிரிப்பூ / பாதிரி மரம்; மூங்கில் சிவப்பூ

*38.* செருந்தி (கோரை) / செருந்திப்பூ / கோரை வகை; மரவகை; மணத்தக்காள் வாட்கோரை

*39.* அதிரல் / புனலிப்பூ / காட்டு மல்லிகை; புனலிக்கொடி; மோசி மல்லிகை; புனலி - மோசிமல்லிகை (காட்டு மல்லிகை, ஊசி மல்லிகை)

*40.* பெருந்தண் சண்பகம் / பெரிய குளிர்ந்த சண்பகப்பூ / ஒரு பூ; மரவகை

*41.* கரந்தை (இலை) / நாறு கரந்தை / ஒருவகை மூலிகைச் செடி; ஒரு பூண்டு; நாறுகரந்தை (ஒரு வகைப்பூண்டு; திருநீற்றுப்பச்சை; கொட்டை கரந்தை (ஒரு வகை கரந்தை) பச்சை (பசுரமயான இலை)

*42.* குளவி (பூ) / காட்டு மல்லிகைப்பூ / காட்டு மல்லிகை; மரவகை; மலை மல்லிகை; (செடி); மலைப்பச்சை

*43.* கடிகமல் கலிமா (பூ) / மனங்கமழும் தழைத்த மாம்பூ / கலி - தழை; மா - மரம்

*44.* தில்லை / தில்லைப்பூ / ஒரு மரம்; தில்லைப்பூ; நெல்வகை

*45.* பாலை / பாலைப்பூ / ஒரு கொடி; ஒரு மரம்; / பாலைப்பூ

*46.* கல்லிவர் முல்லை / கல்லிலே படர்ந்த முல்லைப்பூ / மல்லிகை வகை; வனமல்லிகை

*47.* குல்லை / கஞ்சங்குல்லைப்பூ / கஞ்சர் துளசி; வெட்சி; புனத்துளசி; கஞ்சாங்கோரை ஒரு பூச்செடி; துளசிச்செடி

*48.* பிடவம் / பிடவம் பூ / முரவகை, மரக்கிளை

*49.* சிறு மாரோடம் / செங்கருங்காலிப்பூ / செங்கருங்காலிப்பூ,மரவகை

*50.* வாழை / வாழைப்பூ / கதலி,(தேற்றா மரம்), மரவகை

*51.* வள்ளி / வள்ளிப்பூ / ஒரு கொடி

*52.* நீள் நறுநெய்தல் / நீண்ட நறிய நெய்தற்பூ / ஆம்பல், கருங்குவளை, மற்றொரு அகராதியில் ஆம்பல் என்று உள்ளது.

*53.* தாழை / தென்னம்பாளை / -

*54.* தளவம் / செம்முல்லைப்பூ / முல்லைக்கொடி, முல்லை, முல்லைக்கொடி: செம்முல்லை

*55.* முட்டாள் தாமரை / முள்ளையுடைய நாளம் பொருந்திய தாமரைப்பூ / கமலம், கொடி வகை, பதும வியூகம், தாமரைக் கொடி, மலர்

*56.* ஞாழல் (பூ) / ஞாழற்பூ / ஆண்மரம், மரவயிரம், மல்லிகை வகை, மரவகை, குங்கும மரம்;, கோங்கு மரம், குங்குமம், சங்கு, புட்பம், புலிநகக் கொன்றை

*57.* மௌவல் / மௌவல் பூ / முல்லை: காட்டு மல்லிகை: தாமரை: வள மல்லிகை

*58.* நறுந்தன் கொகுடி / நறிய குளிர்ந்த கொகுடிப்பூ / முல்லைக் கொடி வகை

*59.* சேடல் / பவழக்கால் / மல்லிகைப்பூ / பவழக்கால் மல்லிகை, உச்சிச் செலுந்தில் என்னும் மரம்.

*60.* செம்மல் / சாதிப்பூ / சாதிப்பூ, சாதிபத்திரி, முல்லைப்பூ வகை; வாடாமல்லிப்பூ

*61.* சிறுசெங்குரலி / கருந்தாமக் கொடிப்பூ / -

*62.* கோடல் / வெண்கோடற்பூ / வெண்காந்தள், காந்தள், செங்காந்தள்

*63.* கைதை / தாழம்பூ / தாழை, வயல், மரம்

*64.* கோங்கு முதிர் வாழை / தாது முதிர்ந்த நறிய சுரபுன்னைப்பூ / சுரபுன்னை, புன்னை மரம்

*65.* காஞ்சி / காஞ்சிப்பூ / ஆற்றுப்பூவரசு

*66.* மணிக்குலைக் கட்கமழ்நெய்தல் / நீலமணி போலும் கொத்துக்களையுடைய தேனாறும் கருங்கு வளைப்பூ / ஆம்பல், கருங்குவளை

*67.* பாங்கர் / பாங்கர்ப்பூ / இடம், தோழர், பக்கம், உகாமரம்

*68.* மராஅம் / மரவம் - பூவும் / கடம்பு - வெண்கடம்பு

*69.* பல்பூந்தணக்கம் / பல பூக்களையுடைய தணக்கம் பூ / தணக்கு - நுணாமரம், வால், கோங்கிலவு மரம், தணக்க மரம். தணக்கம் - தணக்கம் பூ. நுணா - தணக்கமரம்

*70.* ஈங்கை / இண்டம்பூ / இண்டங்கொடி. இண்டம் பூ

*71.* இலவம் / இலவம் பூ / இலவமரம்

*72.* தூங்கிணர்க் கொன்றை / தூங்குகின்ற பூங்கொத்துக் களையுடைய கொன்றைப்பூ / சரக் கொன்றை, செங்கொன்றை வகை, கடுக்கை மரம்

*73.* அடும்பு / அடும்பம் பூ / அடம்பு: ஒரு பு, அடப்பங்கொடி, ஒரு வகை மலர்

*74.* அமர் ஆத்தி / பொருந்திய அத்திப்பூ / ஒரு மரவகை

*75.* நெடுங்கொடி அவரை / நெடிய கொடியை யுடைய அவரைப்பூ / ஒரு கொடி, அவரைக்கொடி

*76.* பகன்றை / பகன்றைப்பூ / கிலுகிலுப்பை, சிவதை, சீந்தில், சீந்தில் கொடி, கிலுகிலுப்பைச் செடி

*77.* பலாசம் / பலாசம் பூ / இலை, பச்சை நிறம, பயிர், பலாமரம், முறுக்கு, பசுமை, ஈரப்பலாசு, புரசை மரம,; ஈரப்பலா - புனமுருக்கமரம், அசினிப்பலா, ஆவழாழ மரவகை, ஒரு மரம் , பலாசம்

*78.* பல்பூம்பிண்டி / பல பூக்களையுடைய அசோகம்பூ / அசோக மரம்

*79.* வஞ்சி / வஞ்சிப்பூ / வஞ்சிக்கொடி, சீந்திற்கொடி, ஆற்றிலுப்பை, ஆற்றுப்பாலை

*80.* பித்திகம் / பிச்சிப்பூ / பிச்சி - ஒரு கொடி, ஒரு பெண்; சண்பகம், பித்திகை - சிறு சண்பகம், சாதி மல்லிகை

*81.* சிந்துவாரம் / கருகொச்சப்பூ / நொச்சி மரம், வெண்ணொச்சி

*82.* தும்பை / தும்பைப்பூ / செடிவகை

*83.* துழாய் / திருத்துழாய்ப்பூ / துளசி

*84.* சுடர்ப்பூ தோன்றி / விளக்குப்போலும் பூவினை யுடைய தோன்றிப்பூ / ஒரு மலை மல்லி, காந்தள், செங்காந்தள், இரத்தம்

*85.* நந்தியா / நந்தியா வட்டப்பூ / நந்தியாவட்டைச் செடி

*86.* நறவம் / நறைக் கொடியும் / ஞாழல், குங்கும மரம், அனிச்சமரம், மயிற்கொன்றை, (ஒரு வகை மரம்), அரத்தை (ஒருவகை மருந்து) நாறைக் கொடி.

*87.* நறு புன்னாகம் / நறிய புன்னாகப்பூ / கோழக்கீரை, புன்னை, மஞ்சணரி, ஒரு மருந்துப்பூடு, புன்னை மரம்

*88.* பாரம் / பருத்திப்பூ / பருத்திப்பூ

*89.* பீரம் / பீர்க்கம்பூ / பீர்க்கு (படர் கொடி, பீர்க்கங்காய், பூவரச மரம்; வாகை மரம்

*90.* பைங்குருக்கத்தி / பசிய குருகத்திப்பூ / ஒரு மரம், மாதவிக்கொடி, நாகரி, வாசந்தி, மாதவி (வசந்த கால மல்லிகை) செடி வகை

*91.* ஆரம் / சந்தனப்பூ / சந்தன மரம், கடம்ப மரம்

*92.* காழ்வை / அகிற்பூவும் / அகில், அகிற்பூ

*93.* கடியிரும்புன்னை / மணமுடைய பெரிய புன்னைப்பூ / புன்னை மரம்

*94.* நரந்தம் / நாரத்தம்பூ / நாரத்தை, நரந்தை, (ஒரு வகை மருந்துக் கொடி) மணப்புல் வகை

*95.* நாகம் / நாகப்பூ / நாவல் மரம், புன்னை, ஓர் மருந்து மரம், ஞாழல், புன்னை மரம், ஓர் துளசி

*96.* நள்ளிருநரி / இருள்வாசிப்பூ / இருவாட்சிப்பூ

*97.* மாயிருங்குருந்தும் / கரிய பெரிய குரந்தம் பூ / காட்டு நாரத்தை, காட்டு எலுமிச்சை, ஒரு வகைச் சிறுமரம், குருகத்தி, குருந்த மரம், மாதவிக்கொடி, குருந்தம்

*98.* வேங்கையும் / வேங்கைப்பூ / ஒரு மரம்

*99.* அரக்குவிர்த்தன்ன பரேரம் புழகு / சாதிலிங்கத்தைப் பரப்பினாற் போன்ற பரிய அழகுடைய புழகுப்பூ / மலையெருக்கு

**1. ஒண் செங்காந்தள் (மலைபடுகடாம் - கானவர் குடியின் இயல்பு)**

**"தீயின் அன்ன ஒண் செங்காந்தள்**
**தூவல் கலித்த புதுமுகை ஊன் செத்து**
**அறியாது எடுத்து புன்புறச் சேவல் ......"** (145 - 148)

*(நெருப்பை ஒத்த செங்காந்தள் முகைகள் வீழ்ந்து கிடந்ததை தசைகள் என நினைத்து பருந்துகள் எடுத்தன. தசையில்லாமையால் தின்னாமல் கீழே வீழ்த்தியது. காந்தளின் இதழ்கள் பாறைகள் தோறும் கிடந்தது வெறியாட்டுக் களம் போல காட்சியளித்தது.)*

**2. சுடர்பூந்தோன்றி**

சுடர்ப்பூந்தோன்றி என்பதற்கு குறிஞ்சிப்பாட்டு உரையாசிரியர்கள் 'விளக்கு போலும் பூவினையுடைய தோன்றி' என்றும், கலித்தொகை *(102 - 3)* காந்தள், ஐங்குறுநூறு *(440 - 3)* செங்காந்தள், பரிபாடல் *(12 - 80)* ஒருவகை மலர் எனப் பொருள் கூறுகின்றன. அகராதியும் அவ்வாறே கூறுவதிலிருந்து 'தோன்றியும்' செங்காந்தளே எனத் தெளிவாகிறது உரையாசிரியர்கள் ஏன்? தோன்றி என்றே குறிப்பிட்டார்கள். இதை உற்று நோக்கினால், செங்காந்தளுக்கு இரு பெயர்கள் இருக்கின்றன என்று கூறலாம்.

### 3. கோடல்

நெடுநல்வாடை (1 - 5), குறுந்தொகை (62 - 1), அகநானூறு (23 - 6) ஆகிய இலக்கியங்களில் 'கோடல்' என்பதற்கு 'காந்தள்' என்றும் 'வெண்கோடல்' (அகநானூறு) என்றும் பொருளுரைப்பதிலிருந்து வெண்காந்தளையே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள் என்பதை அறியமுடிகின்றது.

### 4. தன்கயக்குவளை

அகநானூறு (19 - 10); குறுந்தொகை (13 - 5) மதுரைக்காஞ்சி (566) ஆகிய நூல்கள் 'குவளை' என்பதற்கு 'கரிய குவளைப்பூ' என்றும், இது பெண் களின் கண்களுக்கு உவமையாகவும் கூறப்பட்டுள்ளது.

### 5. நீள்நறு நெய்தல்

அகநானூறு (10 - 5) - நெய்தற் பூவை ஒத்த மையுண்ட கண்கள்; வயல்களில் கரிய நீரில் பசிய இலைகளையுடைய தழைத்தத் திரண்ட தண்டினை யுடைய நெய்தற்பூக்களை (70 - 12). குறுந்தொகை (9 - 4). பசிய இலைகளுக்கு மேலே உயர்ந்து நின்ற திரண்ட தாளையுடைய நெய்தல், ஐங்குறுநூறு (2 - 4). பல் இதழ்கள் பொருந்திய நீலத்தோடு (கருங்குவளை) நெய்தலும்...... என்றவாறு கூறப்பட்டுள்ளன. (நெய்தல் என்பதற்கு நெய்தல் நிலத்திற்குரிய சிறப்பான நீர்ப்பூ என உரையாசிரியர் முனைவர் அ. தட்சிணா மூர்த்தி குறிப்பிடுகிறார்).

### 6. மணிக்குலைக்கட் கமழ்நெய்தல்

'நீலமணிபோலும் கொத்துக்களையுடைய தேனாறும் கருங்குவளைப்பூ' என்று உரையாசிரியர்கள் பொருள் கூறுகின்றனர். இவ்வடிகளானது 'குறிஞ்சிப் பாட்டுத் தவிர' வேறு சங்க இலக்கியங்களில் இடம் பெறவில்லை என 'சங்க இலக்கியச் சொல்லடைவு' எனும் நூலில் இடம்பெற்றுள்ளது.

மேற்கண்ட விளக்கங்களை உற்றுநோக்கும் பொழுது ஒரே பூவை இரண்டு இடங்களில் கபிலர் பயன் படுத்துகிறாரா? என்ற நெருடலை ஏற்படுத்துகிறது. மேலும், ஐங்குறுநூறு உரையாசிரியர் அ.தட்சிணா மூர்த்தி அவர்கள் நெய்தல் என்பது 'நெய்தல் நிலத்திற் குரிய சிறப்பான நீர்ப்பூ' என்று குறிப்பிடுவதிலிருந்து நெய்தல் வேறு, கருங்குவளை வேறா? என்ற ஐயப்பாட்டையும் நமக்குள் ஏற்படுத்துகிறது. அதோடு, அகராதிகள் தரும் பொருள்: ஆம்பல், கருங்குவளை, இதில் எதைப் பொருத்திப் பார்ப்பது என்ற குழப்பத்தை ஏற்படுத்துகிறது. மேலும், உரையாசிரியர் 'நீள் நறு நெய்தல்' என முதலில் இருப்பதற்கு 'நீண்ட நறிய நெய்தல்' என்றும், இரண்டாவது குறிப்பட்ட 'மணிக் குலைக் கட்கமழ் நெய்தல்' என்பதற்கு நீலமணிபோலும் கொத்துக்களையுடைய தேனாறும் கருங்குவளைப்பூ' என்றும் வேறுபடுத்திக்கூறியது ஏன்? மணி என்றால் நீலமணியை மட்டுமே எப்படிக் குறிக்கும்? அழகான (அ) கருமையான கொத்துக்களையுடைய தேனாறும் நெய்தல் என ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது? இது போன்ற வினாக்களையும் நம்முள் எழுப்புவதாக அமைகிறது.

### 7. செங்கொடுவேரி

உரையாசிரியர்கள் செங்கொடு 'வேரிப்பூ' என்றே பொருளுரைக்கின்றனர். இச்சொல் குறிஞ்சிப்பாட்டுத் தவிர பிற சங்க இலக்கியங்களில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். பத்துப்பாட்டை ஆராய்ச்சி செய்த இராசமாணிக்கனார் 'செங்கொடு' என்பதைச் செங்கோடு எனத் தனியாகவும், 'வேரி' எனத் தனியாகவும் பிரித்துக் கூறியுள்ளார். (பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப:4.88). இவர் கருத்துரைப்படி, செங்கோடு என்பதற்கு தாவர இனப்பெயரே இல்லை, மலையுச்சி, 'செங்குத்தான மலை' என்று தான் பொருள். எனவே, இவர் கூறியதை அச்சாக்கம் செய்யும் பொழுது பிழை ஏற்பட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

தேமா

"நூறொடு குழீஇயன கூவை சேறுசிறந்து
உண்ணுநர்த் தடுந்தன தேமாப் புண்ணரிந்து..."

(மலைபடுகடாம் : 138)

(தம்பழத்ததின்கட் சாறுமிக்கு உண்பாரை வேறொன்றில் செல்லவொட்டாமல் தடுத்துக் கொண்டன தேமா மரங்கள்)

**கடிகமல் கலிமா**

"பருமங் களையாப் பாய்பரிக் கலிமா..."

(நெடுநல்வாடை – 179)

பாய்ந்து செல்லும் செலவினையுடைய செருக் கினையுடைய குதிரைகள்.

"பன்னூல் மாலைப் பனைபடு கலிமாப்
பூண்மணி கறங்க வேறி நாணட" (குறு. 173 .2)

பலவாகிய நூல்களையுடைய மாலைகளாலே ஒப்பனை செய்யப்பட்ட பனைமடலாலே இயற்றிய குதிரையை ஆண் கழுத்தில் பூட்டிய மணி...)

மேற்கூறியதில் கலிமா என்றாலே குதிரை என்பதைத் தெளிவாக்குகிறது. குறிஞ்சிப்பாட்டில் கலிமா எனப் பிரித்து உரையாசிரியர்கள் பொருளுரைக் கின்றனர். பிற இலக்கியங்களில் இடம்பெறும் நிலை: கானல் அம் பெருந்துறை கலிதிரை திளைக்கும்;; (ஐங்;. 199-1) இதில் கலிதிரை - ஆரவாரிக்கும் அலை என்று பொருள். மா என்பது மற்ற இலக்கியங்களில் பெரிய, குதிரை, மாமரம் என்ற பொருளில் கூறப்பட்டுள்ளது.

**சுள்ளி (அக - 149.8)**

"சுள்ளிஅம் பேரியாற்று வெண்நுரை கலங்க"

சுள்ளி என்னும் பெயர்கொண்ட பேரியாறு சேரி அரசர்க்குரியது எனப் பொருள் கூறப்பட்டுள்ளது. குறிஞ்சிப்பாட்டில் மட்டுமே சுள்ளி என்பதற்கு எனப் பொருள் சுட்டப்பெற்றுள்ளது.

**மணிப்பூங் கருவிளை**

கருவிளை என்பது ஐங்குறுநூறு (464- 1); நற்றிணை (221-1; 262-1) அகநானூறு (255-11; 294-5) ஆகிய இலக்கியங்களில் 'கருங்காக்கணம் பூ' என்று (உரையாசிரியர் முனைவர் அ.தட்சிணாமூர்த்தி) பொருள் கூறப்பட்டுள்ளது.

**பயினி**

பயினி என்பது குறிஞ்சிப்பாட்டில் மட்டுமே வருகிறது. அகநானூற்றில் (356:9) 'பயினொடு சேர்த்திய' என்பதற்கு அரக்கோடு சேர்த்துச் செய்த சாணைக்கல் போன்ற நாவினையுடைய... என்றவாறு கூறப்பட்டுள்ளது. அகராதிகள் 'மரவகை' என்று பொருள் கூறுகின்றன. ஆகவே, 'பயினி' என்பதற்கு பயின் (அரக்கு) மரத்தின் பூ 'பயினி' என்றாயிற்று எனக் கருதலாம்.

**வானி**

'வானி' என்ற சொல் குறிஞ்சிப்பாட்டு மற்றும் பதிற்றுப்பத்தில் மட்டுமே இடம்பெறுகிறது. பதிற்றுப் பத்தானது 'வானிநீரினும்' (86-12) என்பதற்கு 'ஆற்றுநீர்' என்று பொருள் கூறப்பட்டுள்ளது. குறிஞ்சிப்பாட்டின் உரையாசிரியர்கள் 'வானிப்பூ' என்றே பொருளுரைக் கின்றனர். அகராதிகள் ஓமம,; மரவகை என்று பொருள் கூறுவதால் 'ஓமமரம்' எனக் கருதலாம்.

**போங்கம்**

'போங்கம்' என்பதற்கு உரையாசிரியர்கள் மற்றும் அகராதிகள் மஞ்சாடிப்பூ , மஞ்சாடிமரம் என்று பொருள் உரைக்கின்றனர். குறிஞ்சிப்பாட்டு தவிர மற்றதில் இல்லை.

**திலகம்**

திலகம் என்பதற்கு சோம. சுந்தரனார் மஞ்சாடி மரத்தின் பூ என்று குறிப்பிட்டுள்ளார். மற்ற உரை யாசிரியர்கள் திலகப்பூ எனக் கூறுகின்றனர். இராசா மாணிக்கனார் என்னவென்றே குறிப்பிடவில்லை; சோம சுந்தரனார் மலைபடுகடாமில், திலக நறுங்காழ் ஆரம் (520) என்பதற்கு திலகப்பூ என்றே உரைக்கின்றார். சிலப்பதிகாரத்தில் 'மரவமு நாகமுந் திலகமு மருதமும்' (13.152) என்ற அடியில் வரும் திலகத்திற்கு அரும்பத உரையும் அடியார்க்கு நல்லார் உரையும் 'மஞ்சாடி மரம்' என்று பொருள் கூறப்பட்டுள்ளதன் மூலமும் திலகமும், மஞ்சாடி மரப் பூவும் ஒன்றே எனத் தெரிய வருகிறது.

மேற்கூறியதை வைத்துப் பார்க்கும் பொழுது கபிலர் 'மஞ்சாடிப்பூவை' இருமுறை பயன்படுத்தி யிருக்கிறார் என எண்ணத் தோன்றுகின்றது.

**செருந்திப்பூ**

'செருந்தி' என்பதற்கு 'நெட்டிக்கோரை' எனப் பட்டினப்பாலையில் (243) கூறப்பட்டுள்ளது.

**ஞாழல்**

ஞாழல் என்பதற்கு அகநானூறும் (708-10), ஐங்குறுநூறும் (103.2) 'புலிநகக்கொன்றை' எனப் பொருள் உரைக்கின்றது.

**மௌவல்**

குறுந்தொகை (19-4) மல்லிகை என்றும், நற்றிணை (122-4; அக. 21-1, 23-12) பரிபாடல் (12 -77) முல்லை என்றும், கல (14-3; 27-4) முல்லை மலர் என்றும் குறிப்பிடுவதன் மூலம் மௌவல் என்பது முல்லையே எனத் தெளிவாக அறியமுடிகின்றது.

**செம்மல்**

'செம்மல்' என்பது குறிஞ்சிப்பாட்டில் மட்டுமே 'சாதிப்பூ' என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. பிற இலக்கியங்களில் இல்லை.

**சிறுசெங்குரல்**

புறநானூற்றில் (283-1) செங்குரலி என்றவாறே பொருள் கூறப்பட்டுள்ளது.

**குறிஞ்சிப்பாட்டில் மட்டுமே இடம்பெறும் தாவரங்கள்**

மணிச்சிகை, கூவிரம், வடவனம், வான்பூங்குடசம், செருவிளை, குருகிலை, போங்கம், மணிக்குலைகட் கமழ்நெய்தல், அமர் ஆத்தி, பலாசம், சிந்துவாரம், காழ்வை, நள்ளிருள் நரி என்பகைவள் மற்ற சங்க இலக்கியங்களில் இடம்பெறாதவையாகும்.

**பயன்பாட்டுப்புலம்**

குறிஞ்சிப்பாட்டில் பயன்பாட்டுப் பின்புலம் என்பது தலைவி தினைப்புனம் காப்பதற்குச் செல்லும் பொழுது அங்கே இருக்கக் கூடிய மலர்கள், தழைகள் இவற்றைப் பறித்து வந்து தொடுத்துச் சூடிக்கொள் வதாகவும், தலைவன் காதிலும், கழுத்திலும் சூடியிருப் பதாகவும் கூறுவதிலிருந்து மலர்கள் சூடுதல் எனும் பயன்பாடு தெரியவருகிறது.

படைப்பாளனின் வழி பயன்பாட்டுப் பின்புலத்தை ஆய்ந்தால், இயற்கையின் மீது அவருக்கு இருக்கும் அளவுகடந்த பற்றையும், மலையழகு கண்டு இன்புற்ற நிலையையும் கண்டு அவர் எடுத்துக்கூறும் தன்மை யானது, கபிலர் மனம் ஓடிப்பறிப்பதை தலைவியின் வாயிலாகக் கூறியிருக்கிறா, தலைவி பறித்து வரவில்லை, கபிலரே பறித்திருக்கிறார்.

ஆகவே, இயற்கையை நேசிக்கும் மனம், அவற்றின் பெயர்களை அறிந்து வைத்திருக்கும் பாங்கே பின்புலமாக அமைகிறது.

### மருத்துவப் பயன்கள் (இந்திய மூலிகைகள் மருத்துவ குண அகராதி)

#### 1. மூங்கில்

வேர் - தசை இறுக்கி, குளிர்ச்சி தரும், மூட்டுவலி மற்றும் பொதுவான பல வீனத்தைத் தசை சரிவு வலியைத் தடுக்கும்; மாதவிடாய் போது ஏற்படும் வலி போக்கும், வயிற்றிலுள்ள புழுக்கள் போக்கி, வயிற்றினை வலுப்படுத்தும். இலைச்சாறு பால் உணர்வு ஊக்குவியாக கருதப்படுகிறது. இளங்கன்றுகள் மயக்கம், பித்தம் போக்கி ஜீரணத்தைத் தூண்டும், கிருமிகளினால் தாக்கப்பட்டு சீழ்பிடித்த காயங்களுக்குப் பற்றாகப் பூசப்படுகிறது. இதன் சாறு சிலிக்காவினை அதிக அளவில் கொண்டுள்ளது. குருத்து எலும்புகளுக்கு வலுவு தரும், வலுவு இழந்த எலும்புகளைக் குணப் படுத்தும். (பக் - 58)

#### 2. வில்வம்

இலைகள் ஆஸ்துமா, காய்ச்சல் மற்றும் சளி போக்கும். பட்டை இதயத்துடிப்பு, விட்டுவிட்டு வரும் காய்ச்சல், மனஉளைச்சல் ஆகியவற்றைத் தீர்க்கும். வேர் பசியின்மை மற்றும் மகப்பேறுக்குப் பின் ஏற்படும் நோய்களுக்கு சிறந்த மருந்தாகும். கனிகள் குளிர்ச்சி தரும் வைட்டமின் "சி' நிறைந்தது. காய், விதைகள் ஊட்டம் தருவது, மலமிளக்கி, தொடர்ந்த மலச்சிக்கல், தொடர்ந்த வயிற்றுப்போக்கு, அஜீரணம் ஆகிய வற்றினைத் தீர்க்கும். காய் தசை இறுக்கும் தன்மை கொண்டது.

#### 3. வகுளம்

மலர்களின் பொடி மூக்கு பொடியாக உள்ளிழுக்கப் பட்டு தலைவலி போக்க உதவுகிறது. மலர்கள் கனிகளுடன் சேர்ந்து சதை இறுக்கிப் பொருளாக புண்களைக் குணப்படுத்துகிறது. கனிகள் தொடர் வயிற்றுப்போக்கினை தடுக்கும். விதைகள் வயிற்றுப் போக்கினை தூண்டக் கூடியது. குழந்தைகளின் மலச் சிக்கலை போக்கவல்லது. பட்டை, சத்து மருந்தாகவும் காய்ச்சல் தணிக்கும் மருந்தாகவும் பயன்படுகிறது. பெண்களின் கருத்தரித்தலை ஊக்குவிக்கும். இதன் வடிநீர் பல் மற்றும் ஈறு தொடர்பான நோய்களில் கொப்பளிப்பாகப் பயன்படுகிறது.

#### 4. மருதம்

பட்டை மருந்து கிருமிகளுக்கு எதிரானது. ஜீரண கோளாறுகளைப் போக்க வல்லது. காய்ச்சல் மற்றும் இருமல் நோய்களுக்கு மருந்தாகிறது. பட்டையின் பொடி மூக்கு அடைப்பினைப் போக்கும். மூக்குப் பொடியாக பயன்படுத்தப்படுகிறது. பட்டையினை மெல்லுவதால் பல்வலி நீங்கும். கனிகளிலிருந்து கிடைக்கும் மெழுகு நாட்பட்ட புண்களை குணப் படுத்த மேல் பூச்சாக பயன்படுகிறது. (பக்: 151)

### ஆய்வு முடிவு

- செங்கோடு வேரி, வான்பூங்குடசம் (இராச மாணிக்கனார் பொருள் குறிப்பிடவில்லை), எருவை (புல்வகை), பசும்பிடி (இலை), கரந்தை (இலை) இவைகள் புல்லும், தளைகளும் என்பதால் பூக்களின் வகையுள் அடங்காதவை, மேலும் ஒரே பூ வகை இரண்டு இடங்களிலும் குறிக்கப்பட்டு உள்ளன. இவைகளை மனதில் கொள்ளும் பொழுது குறிஞ்சிப்பாட்டில் 99 வகையான மலர்கள் கூறப் பட்டுள்ளன என்பதைவிட, 99 வகையான தாவரங்கள் என்றே குறிப்பிடுவது பொருத்த மானதாகும் எனக் கூறலாம்.
- 99 வகையான மலர்களைப் பட்டியலிடும் அறிவியலாளர்கள் சொற்களைப் பிரித்துப் பொரள் கொள்ளும் வகையில் தவறாகப் பிரித்துப் பொருள் கூறியுள்ளனர். (உரிது நாறு என்பதை நறையுடன் ஒப்பிட்டுள்ளனர்)
- இராசாமாணிக்கனார் 'வாகை', 'வஞ்சி' என்ற மலர்களைக் குறிப்பிடவில்லை. 'பாங்கர்' என்பதற்கு 'ஓமைப்பூ' என்று கூறுகிறார், மேலும் இவர் 'செம் பூ' என்னும் தனியான பூ ஒன்றைக் குறிப்பிட்டு உள்ளார்.
- இதில் கூறப்பட்டிருக்கும் பெரும்பாலான மலர்கள் செம்மை நிறமுடையவை என்பதை விளங்கிக் கொள்ள முடிகின்றது, மருத்துவத் தன்மை கொண்ட தாவரங்களுள் பெரும்பாலானவற்றைத் திருத்தலங்களில் வைத்திருக்கிறார்கள். (தல விருட்சம்...)
- 'குறிஞ்சிப்பாட்டு' இன்னும் ஆராயப்படவேண்டிய நூலே என்று கூறினாலும் கபிலர் இவ்வளவு தாவரங் களை அறிந்து வைத்திருப்பது பாராட்டுக்குரிய தாகும், தாவரவியல் வல்லுநர்களுடனும், சித்த மருத்துவர்களுடனும் புலம் வாய்ந்த இலக்கிய வாதிகள் இணைந்து செயல்பட்டால் ஆய்வு இன்னும் செம்மையுறும்.


### நூற்கள்


1. சங்க இலக்கியங்கள்
2. பத்துப்பாட்டு ஆராய்ச்சி மா. இராசமாணிக்கனார்.
3. A word index for sankam literature by Thomas lehmamn and Thomas maltex institute of asian studies.
4. கபிலரின் குறிஞ்சிப்பாட்டுத் தாவரங்கள், இரா.பஞ்சவர்ணம் (தொகுப்பாசிரியர்)
5. இந்திய மூலிகைகள் மருத்துவ குண அகராதி - பேரா.தன்யக்குமார்.
6. மதுரைத் தமிழ் அகராதி இ.எம்.கோபாலகிருஷ்ணன்
7. கௌரா தமிழ் அகராதி
8. சுராவின் தமிழ்-தமிழ்-ஆங்கில அகராதி
9. லியோவின் தமிழ் அகராதி.

# விற்பனை சாதனையில்...

எஸ்.வி.ராஜதுரை - வ.கீதா எழுதிய

# பெரியார்
## சுயமரியாதை சமதர்மம்




**இந்திய மக்களின் வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் அச்சுறுத்தலை உருவாக்கிக் கொண்டிருக்கும், தமிழ் மக்களின் மொழி, பண்பாட்டு, சமூக, அரசியல் பொருளாதார நலன்களைத் துடைத்தெறிய பேயாட்டம் ஆடிக்கொண்டிருக்கும் போலி சந்நியாசிகளின் குண்டாந்தடி பாசிசத்தை எதிர்த்து நிற்க, ஊன்றி நிற்பதற்கு மட்டுமே கைத்தடிகளைப் பயன்படுத்திய அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் ஆகியோர் நமக்கான வலுவான கருத்தாயுதங்களாக இருப்பர்.**

**₹ 900/-**


## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

☎ 044-26359906, 26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

**கிளைகள்**

ஸ்பென்சர் பிளாசா: 044-28490027; திருச்சி: 0431-2700885; புதுக்கோட்டை: 04322-227773; தஞ்சாவூர்: 04362-231371; திருநெல்வேலி: 0462-4210990, 2323990; மதுரை: 0452-2344106, 4374106; திண்டுக்கல்: 0451-2432172; கோவை: 0422-2380554; ஈரோடு: 0424-2256667; சேலம்: 0427-2450817; ஓசூர்: 04344-245726; கிருஷ்ணகிரி: 04343-234387; ஊட்டி: 0423-2441743; வேலூர்: 0416-2234495; விழுப்புரம்: 04146-227800; பாண்டிச்சேரி: 0413-2280101; திருவண்ணாமலை: 04175-223449.



# மார்க்சியத் திறனாய்வும் தமிழ் இலக்கியமும்

பா.ஆனந்தகுமார்

சென்ற இதழின் தொடர்ச்சி...

**உருவமும் உள்ளடக்கமும்**

*இலக்கியம் பற்றிய மார்க்சிய விவாதமையங்களுள் உருவம், உள்ளடக்கம் குறித்த பிரச்சினையும் ஒன்றாகும். இலக்கியத்தின் உருவத்திற்கும் உள்ளடக்கத்திற்குமான உறவுநிலை குறித்தும், ஊடாட்டங்கள் குறித்தும் பெரும் விவாதங்கள் நடந்துள்ளன. உருவம் முதன்மையானதா? அல்லது உள்ளடக்கம் முதன்மையானதா? எது எதனைத் தீர்மானிக்கிறது? வடிவமைக்கிறது? என்பன போன்ற விவாதங்கள் மிக முக்கியமானவை. மார்க்சியத் திறனாய்வு மரபாகவே இலக்கியத்தின் வரலாற்று முக்கியத்துவத்தைக் குறைத்து அதனை வெறும் அழகியல் விளையாட்டாகக் கருதும் எல்லாவிதமான உருவவியல் வாதங்களையும் எதிர்க்கின்றது. ஜார்ஜ் லுக்காச், 'இலக்கியத்தில் உண்மையாக இடம்பெறும் சமுதாயக்கூறு உருவமே ஆகும்' என்கிறார் (மேற்கோள்: டெர்ரி ஈகிள்டன், ப.19).*

*உருவவியல்வாதிகள், உள்ளடக்கத்தை வெறும் உருவத்தின் ஒரு செயல்பாடாகவே பார்த்தனர். அவர்*

களைப் பொறுத்தமட்டில், கவிதையின் உள்ளடக்கம் என்பது கவிதையைக் கட்டமைக்கும் உத்திக்கூறுகளுள் ஒன்றாகும். உருவத்தை முதன்மைப்படுத்தும் இப் போக்கிற்கு நேர்மாறாக, உள்ளடக்கத்தை முதன்மைப் படுத்தும் மார்க்சியவாதிகள் உள்ளனர். அவர்களைப் பொறுத்த அளவில், கலையில் உருவம் என்பது, வெறுமனே செயற்கைத்தன்மை கொண்டது; புற நிலையில் திணிக்கப்படுவது; புகழ்வாய்ந்த பிரிட்டிஷ் மார்க்சிய விமர்சகரான 'கிறிஸ்டோபர் கால்டுவெல்' என்பவர், 'மரணிக்கும் பண்பாட்டின்மீதான ஆய்வுகள்' (Studies in Dying Culture) என்ற நூலில், 'சமுதாய இருப்பான உள்ளடக்கம் இயல்பிலேயே உருவமற்றது. உள்ளடக்கத்தின் உள்ளியல்பாகவே உருவம் என்பது தடைசெய்யப்பட்டுள்ளது' என்று விளக்கியுள்ளார். இப்பார்வையினைக் கிறிஸ்டோபர் கால்டுவெல்லைப் போல, அன்றைய பிரிட்டிஷ் மார்க்சியத் திறனாய் வாளர்கள் பலரும் கொண்டிருந்ததாகவும் இந்தப் பார்வை மலினப்படுத்தப்பட்ட மார்க்சியப்பார்வை என்றும் உருவத்திற்கும் உள்ளடக்கத்திற்குமான இயங்கியல் உறவைச் சரியாகப் புரிந்துகொள்ளாததன் விளைவே இதற்குக் காரணம் என்றும் இலக்கியப்படைப்புகளில் காணப்படும் கருத்துநிலையிலான உள்ளடக்கத்தை நேரடியாக வர்க்கப் போராட்டத்துடனும் பொருளாதாரத் துடனும் இணைத்துப்பார்ப்பதன் விளைவு என்றும் டெர்ரி ஈகிள்டன் மதிப்பிடுகின்றார் (மேலது, ப.63). மேலும் அவர், மார்க்ஸ் உருவம் மற்றும் உள்ளடக்கத்தின் ஒருமையை இலக்கியம் வெளிப்படுத்துகின்றது என நம்பியதாகவும் இது அவருடைய தொடக்ககாலத் தன்னுணர்ச்சிப்பாக்களில் தென்படுவதாகவும் குறிப்பிடு கின்றார். மேலும், உருவம் மற்றும் உள்ளடக்கத்தின் ஒருமையைக் குறித்த இயங்கியல்பார்வையை மார்க்ஸ், 'ஹெகலிய' மரபிலிருந்து பெற்றுக்கொண்டதாகவும் குறிப்பிடுகின்றார்.

தமிழ்ச்சூழலில் பேராசிரியர் நா.வானமாமலை, உருவம் மற்றும் உள்ளடக்கத்திற்கான இயங்கியல்உறவை மிகச்சரியான புரிதலுடன் உடலுக்கும் உயிருக்குமான உறவாக விளக்குகின்றார். "உள்ளடக்கம் உயிர்; உருவம் உடல். இவ்விரண்டிற்கும் உள்ள தொடர்புபோல், உள்ளடக்கமும் உருவமும் தொடர்புகொண்டவை. உள்ளடக்கம் இல்லாத உருவம் உயிரற்ற உடல் போன்றது. உருவமற்ற உள்ளடக்கம் உடலற்ற உயிர்போன்றது". எனவே உருவமும் உள்ளடக்கமும் இயங்கியலான உறவுடையன.

### எழுத்தாளனும் சார்புநிலையும்

மார்க்சியத்திறனாய்வு, எழுத்தாளன் அவனது படைப்பைப் பாட்டாளிக்குச் சார்பானதாகப் படைக்க வேண்டும் எனப்பெரிதும் வலியுறுத்தியது. குறிப்பாக, ருஷ்யப்புரட்சிக்குப் பிந்தைய சோவியத்இலக்கியத்தின் வளர்ச்சியில் - சோஷலிச யதார்த்தவாதத்தின் உருவாக்கத்தில் - எழுத்தாளனின் சமுதாயக்கடப்பாடும் கட்சிசார்புநிலையும் பெரிதும் வலியுறுத்தப்பட்டது. 1934ஆம் ஆண்டில் நடைபெற்ற, மக்சீம் கோர்க்கி போன்றோர் கலந்துகொண்ட சோவியத் எழுத்தாளர்கள் மாநாட்டில், இப் பாட்டாளி வர்க்கச்சார்பு, தத்துவமாக முன்வைக்கப்பட்டது; புரட்சிகரமான முன்னேற்றத்திற்கு யதார்த்தத்தை உண்மையாகவும் வரலாற்றுஅடிப்படை கொண்டதாகவும் படைக்கவேண்டியது எழுத்தாளனின் கடமை எனவும், இலக்கியம் கட்சி மனோபாவத் துடனும் நம்பிக்கை ஒளியுடனும் வீரப்பண்புடனும் குறிக்கோளுடையதாகவும் உருவாக்கப்படவேண்டும் எனவும் அந்த மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது. இத்தத்துவம், 'புரட்சிகரப்புனைவியலு'க்கு அடித்தள மிட்டது. லெனினும் எழுத்தாளனின் கட்சிச் சார்பு நிலையைக் 'கட்சி நிறுவனமும் கட்சி இலக்கியமும்' (1905) எனும் கட்டுரையில் வலியுறுத்தியுள்ளார். மேலும், ப்ளக்னோவ், கோர்க்கியின் படைப்புகளில் காணப்படுகின்ற அதிகமான பரப்புரைத்தன்மையை விமர்சித்ததைக் கண்டனம் செய்தார். மிக வெளிப் படையாக வர்க்க - கட்சிசார்பு இலக்கியத்திற்கு அறைகூவல் விடுத்தார். மேலும் இலக்கியம், 'சோஷலிச ஜனநாயக இயந்திரத்தின் பற்சக்கரமாகவும் திருகாணி யாகவும் திகழவேண்டுமென' அறிவித்தார்; எழுத்தின் நடுநிலைமைத்தன்மை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் கூறினார். ருஷ்யப்புரட்சியின் இரண்டாவது முதன்மைச்சிற்பியான 'லியோன் ட்ராட்ஸ்கி' இலக்கியமும் புரட்சியும் என்ற நூலில், லெனினைப்போலவே சோஷலிசப் பண்பாட்டின் தேவையை வலியுறுத்தினார். சோஷலிசக் கலையானது யதார்த்தமாக இருக்கவேண்டும்; கலைவடிவம் சமுதாய உள்ளடக்கத்தின் உற்பத்திப்பொருளாகத் திகழவேண்டும் எனக்கூறினார். அதே சமயத்தில், கலையின் உயர்நிலை யிலான தன்னாட்சித் தன்மையினையும் வலியுறுத்தினார்; ஒரு கலைப்படைப்பானது, அதன் சொந்த விதிகளின் அடிப்படையில் மதிப்பிடப்படவேண்டும் எனவும் கூறினார். மார்க்ஸும் ஏங்கல்சும் கலை, இலக்கியத்தின் சமூகச்சார்புநிலைகளைக் கடந்து, படைப்பின் மேன்மை களைப் பாராட்டியுள்ளனர். சான்றாக மார்க்ஸ், மில்டனின் 'துறக்க நீக்கத்தை'ப்பற்றிக் குறிப்பிடும் பொழுது, மில்டன் துறக்கநீக்கத்தைப் படைத்த காரணத்தைப்போலவே பட்டுப்பூச்சியும் பட்டினை உற்பத்தி செய்கின்றது. இது அதன் இயற்கைச் செயல் பாடு என விளக்குவார்.

### தமிழ்ச் சூழலில் மார்க்சியத் திறனாய்வின் உருவாக்கம்

தமிழ்ச் சூழலில் மார்க்சியம், பாரதி எனும் மாபெரும் கவிஞன்வழி அறிமுகமாகிறது. ருசியப் புரட்சி, அதனால் விளைந்த 'சோஷலிஸம்' பாரதியால் வரவேற்கப்பட்டது. சோஷலிஸத்திற்கு இணையாகப்

'பொதுவுடைமை' என்ற சொல், தமிழில் முதன் முதலில் பாரதியாரால் ஆளப்படுகிறது. லெனினின் பெயரும் கொள்கைகளும் 'இந்தியா' பத்திரிகை கட்டுரைகள் வழி பாரதியாரால் விமர்சிக்கப்பட்டன. இவ்வாறான மார்க்சிய எழுத்துக்கான சூழல் உருவாக்கத்தின் பின்னணியில் 1930களின் உலக அளவில் முற்போக்கு இலக்கிய அமைப்பு செல்வாக்குப் பெற்றது. 1935இல் பாரிஸ் நகரத்தில் உலக முற்போக்கு எழுத்தாளர் மாநாடு நிகழ்ந்தது. அதனையொட்டி, 1936இல் இந்திப் புனைகதையாளர் பிரேம்சந்தின் தலைமையில் லக்னோவில் இந்திய முற்போக்கு எழுத்தாளர் மாநாடு நடைபெற்றது. 1937இல் 'வாழ்க்கை இலக்கியப் போக்கும்' (ஜீவன்ஸாஹித்ய ப்ரஸ்தானம்) 1944இல் 'முற்போக்கு இலக்கியப் போக்கும்' (புரோகமன ஸாஹித்யம்) மலையாளத்தில் உருப்பெற்றன. 1945ஆம் ஆண்டினை ஒட்டி வங்கத்தில் நஸ்ரூல் இஸ்லாமைத் தலைமையாகக் கொண்டு டாக்காவில் 'கல்லோல்' எனும் முற்போக்கு இலக்கியம் உருப்பெற்றது. தமிழில் 1937இல் பொதுவுடைமை இயக்க இதழான 'ஜனசக்தி' மலர்ந்தது; பாரதிதாசனின் 'புதியதோர் உலகம் செய்வோம்' கவிதை அதில், வெளியிடப்பெற்றது. 1938இல் பாரதிவிழாவை ஜீவா அறிவிக்கிறார். 1948இல் 'புதுமை இலக்கியம்' இதழ், இரண்டு இதழ்கள் வந்துபோகிறது; அதில் பாரதியைப் பற்றி விமர்சனங்கள் நிகழ்ந்தன. 1949-இல் குயிலன் 'முன்னணி' பத்திரிகையைத் தொடங்கினார்; ரகுநாதனின் 'இலக்கிய விமர்சனம்' நூல் வெளிவந்தது. 1951இல் 'விடிவெள்ளி' இதழில் 'முற்போக்கு இலக்கியம் என்றால் என்ன?' என்பதை தொ.மு.சி ரகுநாதன் வரையறுத்து எழுதுகிறார். இதற்கிடையில், 1930களில் தொடங்கப்பட்ட 'இந்திய மக்கள் நாடக மன்றம்' (இப்டா) தமிழில் செல்வாக்குப் பெறுகின்றது. 1959இல் இடதுசாரி இயக்கத்தின் இலக்கிய இதழான 'தாமரை' மலர்ந்தது. அவ்விதழ், ஏராளமான கவிஞர்களுக்கும் களமானது. 1970இல் 'செம்மலர்' மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் இலக்கிய இதழாகப் பூத்தது. தாமரையும் செம்மலரும் ஏராளமான புதிய முற்போக்குக் கவிஞர்களை, சிறுகதையாளர்களை, நாவலாசிரியர்களைத் தமிழ் இலக்கியவுலகிற்கு அறிமுகப்படுத்தின. இவ்வளர்ச்சிக் கிடையில், தமிழில் மார்க்சியத் திறனாய்வு வளர்ச்சி பெற்றது.

தமிழில் மார்க்சியத் திறனாய்வு பாரதியை மையப்படுத்தியே தொடங்கியது. 1930களில் பி.ஸ்ரீயும் இராஜாஜியும் வேதாந்தச் சிமிழுக்குள் அடக்க முற்பட்ட போது - அவரை மகாகவி இல்லையென்று சொன்ன போது - அக்கருத்துக்களோடு எதிர்வினைசெய்து பாரதியை பொதுவுடைமைக் கவிஞராக - மகாகவியாக - நிறுவிய ப.ஜீவானந்தத்தின் பாரதி பற்றிய ஆய்வுகளே தமிழில் மார்க்சியத் திறனாய்வுக்குக் கட்டியம் கூறியது. ஜீவாவைத் தொடர்ந்து ஆர்.கே.கண்ணன், தொ.மு.சி. ரகுநாதன் ஆகியோர் பாரதியை மையப்படுத்தியே மார்க்சியத் திறனாய்வை வளர்த்தெடுத்தனர். தொடர்ந்து ரகுநாதன் இடைக்கால இலக்கியங்கள் (சமுதாய இலக்கியம்), காப்பிய இலக்கியங்களை (இளங்கோவடிகள் யார்) மார்க்சியக் கண்ணோட்டத்தில் ஆய்வுக்குட் படுத்தினார். பேராசிரியர் நா.வானமாமலையின் நெல்லை ஆய்வுக்குழுவும் ஆராய்ச்சி இதழும் கல்விப் புலத்திற்குள் மார்க்சியத் திறனாய்வைக் கொண்டு சென்றன. பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன் (நாட்டார் இலக்கியம்), கா.சுப்பிரமணியம் (சங்க இலக்கியம்), பேராசிரியர் தி.சு.நடராசன், தோதாத்ரி (நவீன இலக்கியம்), வெ.கிருஷ்ணமூர்த்தி (மார்க்சிய தத்துவம்) எனப் பெரும் மார்க்சிய ஆய்வாளர் படையை பேராசிரியர் நா.வானமாமலை உருவாக்கினார். நாட்டார் இலக்கியம் மட்டுமல்லாது சங்க இலக்கியம், திருக்குறள், காப்பியங்கள் எனத் தமிழின் மிக முக்கியமான இலக்கியப் பரப்புக்களில் மார்க்சியத் தடம்பதித்தவர், பேராசிரியர் நா.வானமாமலை. இதே காலப்பகுதியில் (1970களில்) ஈழத்துப் பேராசிரியர்களான க.கைலாசபதியும், கா.சிவத்தம்பியும் கல்விப்புலம் சார்ந்த மார்க்சியப்புலமை விமர்சகர்களாக உருப்பெற்று காத்திரமான ஆய்வுகளை நிகழ்த்தினார். திராவிட இயக்கம் முன்வைத்த தமிழ்ப் பெருமிதம் சார்ந்த தமிழ் மீட்டுருவாக்க அரசியலுக்கு மாறாகத் தமிழ் இலக்கியங் களை அறிவியல் அடிப்படை சார்ந்து ஆராய்வதற்கு இவர்களது ஆய்வுகள் பெரிதும் துணைபுரிந்தன. இதே கட்டத்தில் மார்க்சியத்தை ஆன்மிக ஒளியில் தரிசித்து ஹெகலியப் பார்வையில் தமிழ் இலக்கியத்தை அணுகியவர்கள் எஸ்.என்.நாகராஜனும், கோவை ஞானியும் ஆவர். இவர்களது புறவய கருத்து முதல்வாத பார்வைகளுக்கு எதிராக தணிகைச் செல்வனும் கோ.கேசவனும் கறாரான விமர்சனங்களை முன்வைத்தனர்.

1980களில் அமைப்பியல் பின்னை அமைப்பியல் பின்னை நவீனத்துவம் தமிழ்ச் சூழலில் அறிமுகமான போது அதனை மார்க்சிய கண்ணோட்டத்துடன் எதிர் கொண்டவர்களுள் அ.மார்க்ஸ், தி.சு.நடராசன், ந.முத்து மோகன் ஆகியோர் முதன்மையானவர்கள். இக்கால கட்டத்தில் அல்தூர், லுக்காச் போன்ற புதிய மார்க்சி யர்கள் தமிழுக்கு அறிமுகமானார்கள். 1990களில் மிகைல் பக்தீனும் கிராம்ஸ்கியும் வெகுவாகப் பேசப் பட்டார்கள். மார்க்சியம் புதிய திறனாய்வுக் கோட் பாடுகளுடன் உரையாடி அதனைக் கடந்துசெல்ல வேண்டியதன் அவசியத்தைக் கா.சிவத்தம்பி பின் வருமாறு வலியுறுத்தினார். "மார்க்சியம் என்பது மேலே மேலே பாயும் நதி; அது பின்னோக்கிப் பாய்வதில்லை. பின்நவீனத்தின் இயல்பைக் கண்டதன் பின்னர் நாம்


எங்கே நிற்கிறோமோ அங்கிருந்து மேலே செல்லல் வேண்டும். அதுதான் Progress முற்போக்கு. வரலாற்றில் தேவையில்லாது எதுவும் தோன்றாது. அவற்றின் உண்மைத் தன்மையைக் கண்டு, அவற்றுக்கு முகங் கொடுத்து மேலே செல்வதிலேயே முற்போக்குவாதம் தங்கியிருக்கிறது" *(2010:பக்.207-208).*


மார்க்சியம் ஓர் அணுகுமுறையே தவிர வாய்ப்பாடு அன்று என அறுதியிட்டுக் கூறும் கா.சிவத்தம்பி, "இவ் அணுகுமுறை நமக்குப் பிரச்சினையின் தன்மை, மையம், வெளிப்பாட்டு முறைமை பற்றிய ஓர் அறிக்கையைத் தரும்... இது ஒரு பிரச்சினையை அதன் சூழமைவுப் பின்புலத்தில் - உரிய இடத்தில் - இட்டு வைக்கிறது" என மார்க்சிய அணுகுமுறையின் சாராம்சத்தை விளக்குகின்றார். மார்க்சியம், இயங்கியலை அடிப் படையாகக்கொண்ட படைப்பாக்கத் தன்மைமிக்க ஓர் அறிவியல் சட்டகமாக இருப்பதால், காலத் தொடர்ச்சியில் புதிது புதிதாக உருவாகும் இலக்கியங் களையும் தத்துவங்களையும் கருத்தியல் ரீதியாக எதிர்கொள்வதற்கும் மதிப்பிடுவதற்கும் திறன்மிக்கதாகத் திகழ்கின்றது.

### துணைநூற் பட்டியல்


1. *கார்த்திகேசு சிவத்தம்பி, தமிழிலக்கியத்தில் முற்போக்கு வாதம், சென்னை புக்ஸ், 1977.*
2. *கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி..., மக்கள் வெளியீடு, சென்னை - 2, முதல் பதிப்பு, டிச. 2003*
3. *கார்த்திகேசு சிவத்தம்பி, பாரதி மறைவு முதல் மகாகவி வரை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிமிடெட், சென்னை, 1984.*
4. *கார்த்திகேசு சிவத்தம்பி, இலக்கியமும் கருத்துநிலையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிமிடெட், முதல் பதிப்பு, ஏப்ரல் 2011.*
5. *கார்த்திகேசு சிவத்தம்பி, நவீனத்துவம் - தமிழ் - பின்நவீனத்துவம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிமிடெட், சென்னை, 2010.*
6. *தோதாத்ரி, எஸ்., பிரதிபலித்தல் கோட்பாடும் அழகியலும், நாவாவின் ஆராய்ச்சி, இதழ் 38 & 39, 1991.*
7. *முத்துமோகன், ந., வரலாற்று பொருள்முதல்வாதமும் மார்க்சிய அழகியலும், நாவாவின் ஆராய்ச்சி, இதழ் 38&39, 1991.*
8. *ரகுநாதன், தொ.மு.சி., இலக்கிய விமர்சனம், ஸ்டார் பிரசுரம், சென்னை, மூன்றாம் பதிப்பு, பிப். 1964.*
9. *ரகுநாதன், தொ.மு.சி. சமுதாய இலக்கியம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, இரண்டாம் பதிப்பு, டிசம்பர். 1980.*
10. *ரகுநாதன், தொ.மு.சி., இளங்கோவடிகள் யார்? மீனாட்சி புத்தக நிலையம், முதற்பதிப்பு, டிசம்பர், 1984*
11. *ரகுநாதன், தொ.மு.சி., பாரதி காலமும் கருத்தும், மீனாட்சி புத்தக நிலையம், முதற்பதிப்பு, டிசம்பர், 1980.*
12. Dmitry Markov, Socialist Literatures Problems of Development, Progresss, Moscow, 1984.
13. Maxim Gorky, Collected Works, On literature, Vol. X, Progress, Moscow, 1982.
14. Terry Eagleton, Marxism and Literary Criticism, Routledge Classics, London, 2002.






**கோல்டன் கிங் பதிப்பகம்**

***பிளாட் எண். 37/B - 1, III A கிராஸ் வி.எம்.கார்டன்***
***சண்முகாபுரம், பாண்டிச்சேரி - 9***
***8124913157***

# இந்துமத நூல்கள் பாடிய இசுலாமியப் புலவர்கள்

முனைவர் இரா.வெங்கடேசன்

இந்திய வரலாறு என்பதே கட்டமைக்கப்பட்டதாகும். திட்டமிட்டே இங்கே வரலாறு தொகுக்கப்பட்டிருக்கிறது. ஒருநாட்டின் மேலாண்மை, சமூக அமைப்பு, பண்பாடு, பொருளியல் சார்ந்த நிகழ்வுகளின் தொகுப்பாக உள்ள வரலாறு ஒருபக்கச் சார்பு அடையாளங்களைத் தாங்கியே நிற்கின்றது. இந்திய வரலாறு என்பது வட இந்திய வரலாற்றையும் தமிழக வரலாறு என்பது உயர்நிலையில் இருப்போரின் வரலாற்றையும் மட்டுமே பேசுவதாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. தமிழ் இலக்கிய வரலாற்றை நூற்றாண்டு வாரியாக எழுதிய மு. அருணாசலம் பிள்ளை சமண நூல்களைப் பற்றிக் குறிப்பிடும்போது 'குண்டலகேசி, நீலகேசி கதைகளும் பின்னால் வந்த யசோதர காவியக் கதைகளும் கதைகள் என்ற அளவில் மட்டதரமான கதைகள். குண்டலகேசி ஒரு பெரிய பிசாசாவாள்' என்று கூறியுள்ளார். தமிழில் மறுக்கமுடியாத ஆய்வாளராக இருக்கக்கூடிய மு.அருணாசலம் பிறமத நூல்களை (சமண, பௌத்த) இழிவாகக் கூறியதனை நாம் எவ்வாறு ஒப்புக்கொள்வது. இதே போன்ற பல சிக்கல்கள் தமிழ் இலக்கிய வரலாறு முழுவதும் காணப்படுகிறது. குறிப்பாகச் சைவம், வைணவம், கிறித்துவம் சார்ந்த நூல்களைப் பேசிய அளவு இசுலாம் இலக்கியங்களைப் பற்றிப் பேசுவதை இலக்கிய வரலாற்று நூல்கள் தவிர்த்திருக்கின்றன. குறிப்பாக இசுலாம் மதத்தைச் சார்ந்த புலவர்கள் இந்து மத விடயங்கள் குறித்துப் பாடிய நூல்களைப் புறந்தள்ளியுள்ளார். தமிழ் இலக்கிய வரலாற்றைக் கட்டமைத்தவர்களால் திட்டமிட்டே இது நிகழ்ந்திருக்கிறது.

இந்திய மண்ணில் இசுலாம் குறித்த புரிதல்கள் மிகக் குறைவே. எந்தவொரு மதமும் தனிமனிதரால் உருவாக்கப்படவில்லை. திடீரென்று தோன்றிவிடுவதுமில்லை. சமூகச் சிந்தனையின் ஒட்டுமொத்த விளைபொருளாகவே மதங்கள் தோன்றியுள்ளன. இசுலாமும் அப்படியாகவே தோற்றம்பெற்றது. அராபிய தேசமெங்கும் மக்கள் தாராளச் சிந்தனை கொண்டிருந்தனர். பழமையான மதத்தை நம்பியிருந்த அவர்கள் புதிய விடியலுக்காகக் காத்திருந்தனர். முகமது நபி (ஸல்) புதிய மதத்தைத் தோற்றுவிப்பதற்கு முன்பே அராபியர்கள் இசுலாம் சாராம்சம் அரபு மக்களின் ஆன்மீக உணர்வுகளில் கலந்திருந்தது.

> "சமூகச் சிதைவு ஆன்மீக அவநம்பிக்கை ஆகிய வற்றின் கடுமையான இருளில் அவதிப்பட்டு வந்த மக்களுக்கு, அராபிய இறைத்தூதரின் நற்செய்தியானது நம்பிக்கை தரும் ஒரு விளக்காகக் காட்சியளித்தது. இம்மை, மறுமை குறித்து புதிய மதம் கூறிவந்த கருத்துக்கள் சாமான்ய மக்களின் சிந்தனையைக் கவர்ந்தன. இம்மண்ணுலக வாழ்க்கைக்கான போராட்டத்தில் தோல்வியுற்று எந்தப் பிடிப்புமின்றி கடவுளின் இருப்பு என்ற மூடநம்பிக்கையில் தங்களை ஈடுபடுத்தியிருந்த விரக்தி கொண்ட மக்களின் ஆன்மாக்களை இசுலாத்தின் வெற்றி முரசொலி விழிப்படையச் செய்தது." *(எம்.என்.ராய், 1999:40)*

விரக்தியின் விளிம்பிலிருந்த மக்களின் முன்னால் இசுலாம் புதிய நம்பிக்கைக்கான பாதையைத் திறந்து காட்டியது. கடுந்துறவறம் என்ற நிலையைக் கடந்த இசுலாம் சிந்தனை மக்களுக்கு புதிய வெளிச்சத்தைத் தந்தது.

> "கி.பி.ஏழாம் நூற்றாண்டில் அரேபியாவிலேயே ஒரு புது வித ஞான ஒளி தோன்றியது. மரம் போக்கி

அறம் புகுத்த முகமது நபிகள் (ஸல்) தோன்றினார். அவரின் அன்பாலும் திருநெறியாலும் அரேபி யர்கள் ஈர்க்கப்பட்டனர். புத்துணர்ச்சி பெற்றார்கள்." (அப்துல் ரஹீம்:1957:13).

இசுலாம் மதம் மக்களின் மனங்களில் நிரம்பியது. வாழ்க்கையைக் காட்டிய மதத்தை மக்கள் முழுமையாக ஏற்றுக்கொண்டனர். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டளவில் எகிப்தில் வாழ்ந்து வந்த சில அரேபியக் குடும்பங்கள் ஹஜ்ஜாஜ் இப்னு யூசுபின் கொடுங்கோல் ஆட்சிக்கு அஞ்சிக் கடல்வழியாகப் பாண்டிய நாட்டிற்கு வந்தனர். தமிழ்நாட்டிற்கு 1923 ஆம் ஆண்டு சுற்றுப்பயணம் மேற்கொண்ட திமிஷ்கைச் சேர்ந்த அபுல்பிதா இசுலாமியர்களும் தமிழர்களும் ஒற்றுமையோடு வாழ்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

> "கி.பி.13 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் எகிப்தை ஆண்டுவந்த கொடுங்கோல் மன்னன் முகம்மது இப்னு கலாவூனின் கொடுமை தாங்க முடியாமல் சில அரேபியக் குடும்பங்கள் வைசயித் ஜமாலுத்தின் அவர்களின் தலைமையில் காயல்பட்டினத்தில் வந்து குடியேறினர்." (அப்துல் ரஹீம்:1957)

தமிழகத்தில் வாழத் தொடங்கிய இசுலாமியர்கள் அமைச்சர்களாக, போர்வீரர்களாக, நகரப் பாதுகாப்பாளர் களாக, பொற்காசு செய்து தருவோராக, வணிகர்களாக விளங்கினர். மக்கள் இவர்களை மரக்காயர், லெப்பை, இராவுத்தர், சாகிபு என்ற பல பெயர்களால் அழைத்தனர். இசுலாமியர்களை மன்னர்கள் ஏற்றுக்கொண்டதால் மக்களும் அவர்களை ஏற்றுக்கொண்டனர். இசுலாம் மதம் இந்து மதத்தை அழிக்க வந்த மதமாக இந்துக்கள் கருதவில்லை. அதனால் சாமானியர்களான இந்துக் களுக்குள்ளும் இசுலாமியர்களுக்குள்ளும் நல்ல உறவு ஏற்பட்டது. இதைத்தாண்டிய இரு சமூகத்திற்கு மிடையிலான வணிக உறவென்பது முக்கியமானது. இயற்கையாகவே வணிக நோக்குடைய இசுலாமியர்கள் இந்துக்களோடு கலக்கும்போது புதிய வெளிகள் வணிகத்தில் உருவாக்கப்படுகிறது. இடைவெளியை இருசமூகமும் அனுமதிக்காததால் புரிந்துணர்வு என்பது முக்கிய இடம்பெறுகிறது.

> "அரேபியாவின் குதிரைகளைத் தமிழ் மன்னர்கள் பெரிதும் விரும்பினர். தமிழகத்திற்கு அரபு நாடுகளி லிருந்து குதிரைகள் கொண்டு வரப்பட்டன. இந்தக் குதிரை வணிகம் இருநாடுகளிடையே பெரும் நட்புறவை ஏற்படுத்தியது. இந்த உறவு தமிழகத்திற்கு அரபு வணிகர் வந்து தங்கும் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தது. அரேபியக் குதிரைகளைப் பராமரிக்கவும் உணவு கொடுத்துப் பேணி வளர்க்கவும் பயிற்சி பெற்றோர் அந்நாளில் தமிழகத்தில் அரிதாகவே இருந்தனர். எனவே இந்தப் பணிகளைச் செய்ய அரபு நாடுகளி லிருந்தும் ஆட்கள் வரவழைக்கப்பட்டனர். இவர்களில் பலர் இங்கேயே தங்கியிருந்து தமிழ் மக்களோடு ஒன்றிணைந்து மண உறவு கொண்டு வாழ்ந்து வரலாயினர்." (எஸ்.ஏ.முகம்மது இபுராகிம் 2009:41)

இந்துக்களோடு வாழ்ந்து வரக்கூடிய இசுலாமியர் களைத் தமிழ்ப் புலவர்கள் செய்த படைப்புக்களோடு இசுலாமியர்கள் செய்த படைப்புக்களை ஒப்பிட்டுப் பார்க்கும் முயற்சி இங்கே பெரிதாக மேற்கொள்ளப் படவில்லை. இசுலாமியப் புலவர்கள் இசுலாம் மார்க்கம் குறித்து மட்டுமே பாடியுள்ளனர் என்ற மைய நீரோட்டத்திலிருந்து விலகிப்பார்த்தால் இசுலாம் புலவர்கள் இந்து மதம் குறித்துப் பாடியுள்ளனர். இந்துக்களுக்கும் இசுலாமியர்களுக்கும் இடையே சமூக உறவு மட்டுமல்லாது இலக்கிய உறவு மேம்பட்டிருந்தது. இந்துப் புலவர்கள் இசுலாம் மதத்தை உயர்வாகப் பேசுவதும் இசுலாம் புலவர்கள் இந்துப் பண்பாட்டை உயர்வாகப் பேசுவதும் இலக்கியரீதியாகத் தமிழில் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. ஆனால் இது குறித்து ஆவணப்படுத்தல் மிகக் குறைவாக நடை பெற்றுள்ளது.

> "1868 இல் பீர்காதர் ஒலி ராவுத்தர் திருவாசகத்தைப் பதிப்பிக்கின்றார். 1835 ஆம் ஆண்டிலிருந்தே சுமார் ஆறு ஏழு பதிப்புக்கள் ராவுத்தர் பதிப்பிற்கு முன்னரே வெளிவந்திருக்கின்றன. ஆனால் திரு வாசகத்தின் தொடக்கமாக உள்ள சிவபுராணம் என்ற பகுதி முன் பதிப்புக்களில் எல்லாம் சிவபுராணத்து அகவல் என்று குறிப்பிடப் பட்டிருந்திருக்கின்றது. அப்படி அதனை அகவல் என்று குறிப்பிடுவது தமிழ் இலக்கண மரபின்படி பிழையானது என்பதையும் உண்மையில் அது கலிவெண்பா என்பதை யாப்பருங்கலம் தொல் காப்பியம் நூற்பாக்களின் வழியாக நிரூபித்து அந்தச் செய்யுள் வெண்தளையால் அமைந்த கலிவெண்பா என்று சரியாகக் குறிப்பிடுகின்றார். பின்னர் இன்று வரை வந்த பதிப்புக்கள் அனைத்தும் ராவுத்தர் பதிப்பை அடியொற்றி அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது." (பொ.வேல்சாமி, 2014:30)

இத்தகைய சிறப்புக்கள் நிறைந்த பலரைப் பற்றிய பதிவுகள் இதுவரை வெளிவந்துள்ள தமிழ் இலக்கிய வரலாறுகளிலும் இசுலாம் இலக்கிய வரலாறுகளிலும் பதிவாகவில்லை. அவ்வாறு புறக்கணிப்புக்கு உள்ளானவர்களின் சாந்தாதி அசுவகம் (மகாபாரதம்) மகாபாரத அம்மானை பாடிய சையது முகம்மது அண்ணாவியார், பாம்பன் பாலசுப்ரமணிய சுவாமிமீது கும்பாபிஷேக வழிநடைச்சிந்து பாடிய அப்துல்காதிறு

ராவுத்தர் போன்றோர் முக்கியமானோர். இவர்கள் பிறப்பால் இசுலாம் மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சமூக நல்லிணக்கத்தைக் கொண்டவர்கள். மானுட சமூகத்தின் மீதான சமத்துவத்தையும் மதிப்பையும் கொண்டவர்கள். அதனால் மதங்கள் அனைத்தும் சமமே என்ற கொள்கையோடு இவர்கள் வாழ முடிந்தது.

18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த செய்யிது முகமது அண்ணாவியார் பாண்டி நாட்டினர். பிறருக்குப் பாடம் சொல்லிக்கொடுத்து அதன்வழி மொழியையும் சமயத்தையும் வளர்க்கும் அண்ணாவியார் எனும் குடும்பத்தினர். அண்ணாவி என்பது கிராமத்து ஆசிரியர்களைக் குறிக்கும் சொல்லாகும். கவி பாடுவதிலும் பெருங்காப்பியங்கள் செய்வதிலும் இனிமையைக் கண்டவராதலால் இவரை மக்கள் அமிர்தகவி என அழைத்தனர். சமயப் பொறை கொண்ட இவர் தமிழ்ப்புராணங்கள் வடமொழிப் புராணங்கள் சிலவற்றைக் காவியமாக்கினார். இவர்தம் கவிதை முருகனைக் காட்டிய வரலாறு கொண்டது. யமகம், திரிபு, அந்தாதி, மாலைமாற்று முதலான அரிய பாடல்களை விரைந்து பாடும் ஆற்றல் கொண்டவர். நாகூரில் சில காலம் கல்வி கற்பித்தார். பிற்காலத்தில் ஜவ்வாது புலவர் என்று பாராட்டப் பெற்ற பீர்ஜவ்வாது இவரிடம் கல்வி கற்றவர்.

சையிது முகம்மது அண்ணாவியார் நாகூரில் இருந்தபோது ஷைகு வஹாபுதீன் என்ற ஆன்மீகப் பெரியோரின் நட்பு கிடைத்தது. அவரால் தீட்சை பெற்றார் அண்ணாவியார். பின்னர் அய்யம்பேட்டையில் உள்ள பள்ளியில் ஆசிரியராக இருந்தார். அதிரையில் திண்ணைப் பள்ளியில் கதிர்வேலு உபாத்தியாயர் தம்மிடம் இருந்த மந்திரக் கலையைக் காட்டி மக்களை அச்சுறுத்தி வாழ்ந்து வந்தார். அச்சம் கொண்ட மக்கள் கதிர்வேலு உபாத்தியாயரை அடக்க மாந்திரீகக் கலையில் வல்லவரான அண்ணாவியாரை லெப்பைத் தம்பிமரக்காயர் என்னும் பெருவள்ளல் ஒத்துழைப்போடு அழைத்து வந்தனர். அண்ணாவியார் அதிரைக்கு வந்தவுடன் மக்கள் அச்சமின்றி நடமாடினர். இதனைக் கண்ட கதிர்வேலு உபாத்தியாயர் நட்போடு பழகுவது போல் அண்ணாவியாரிடம் நடித்தார். ஒருமுறை காவடி எடுக்கப் பழனிக்குச் செல்கிறேன் என்று உபாத்தியாயர் கூற முருகனைக் காணப் பழனி ஏன் செல்ல வேண்டும் இங்கேயே முருகன் வருவான் எனக் கூறுகிறார் அண்ணாவியார்.

> "நாளும் இடமும் குறிக்கப்பட்டன. செழியன் குளத்தருகே பந்தல் போடப்பட்டது. மக்கள் வெள்ளம் கரைகட்டி நின்றது. அண்ணாவியாரும் உபாத்தியாயரும் எதிரும் புதிருமாய் அமர்ந்தனர். சையிது முகம்மது அண்ணாவியார் முன்னரே தாம் பாடி வைத்திருந்த ஏட்டை எடுத்தார். கதிர்வேலு கையில் கொடுத்தார். 'ஏட்டிலிருக்கும் மந்திரக் கவிகளை உரக்கப்படியும் உமது வேதம் காட்சி நல்கும் என்றார். கதிர்வேலு படித்தார். பதினான்கு கவிதைகள் (சுப்பிரமணியர் பிரசன்ன பதிகம்) வரை உரக்கப் படித்தார். என்ன விந்தை! கதிர்வேலு தம் கந்தவேலைக் கண்ணாரக் கண்டு கொண்டார். அண்ணாவியாரின் ஆற்றலை அறிந்துகொண்டார். அண்ணாவியார் இவ்விடத்தில் காட்டியது 'தொலை உணர்தல்' (டெலிபதி) எனும் தொலைக் காட்சியாகும்." (தா.கோ.பரமசிவம், 2004:சு)

அண்ணாவியார் பத்துப்புராணங்களை இயற்றியுள்ளார். நூர்நாமா, அலிநாமா, சாந்தாதி அசுவமகம், பாரத அம்மானை போன்றவை குறிப்பிடத்தக்கவை. சையது முகம்மது அண்ணாவியார் சுப்பிரமண்யரை வரவழைத்த செய்யுட்கள் அடங்கிய சிறுநூல் 'சுப்பிரமணியர் பிரசன்னப் பதிகம்' என்ற பெயருடன் மூன்று பதிப்புகள் வெளிவந்துள்ளன. அதற்குப் பல இந்தத் தலைவர்களே சாற்றுக்கவிகள் பாடியுள்ளனர். மேலும் அண்ணாவியார் பாடிய மகாபாரத அம்மானையின் பதிப்புகளால் அஷ்டாவதானம் இராமசாமிப்பிள்ளை அப்பதிகம் பத்தாவது செய்யுள் பாடிய தருணம் அங்ஙனம் சூழ்ந்த சர்வவீரர்களும் மயிர்க்கூச்சலிட்டு நின்றனர். இது ஒரு நிகழ்வேபோதும். இந்து சமயத்தின் மீதான அண்ணாவியார் கொண்டிருந்த பற்றுதலைச் சொல்வதற்கு அண்ணாவியார் அலிநாமா நூலை அரங்கேற்றியபோது லெப்பை தம்பி மரக்காயர் அவருக்குச் சரியாசனம் வழங்கிக் கனகமாரி பொழிந்தார் என்பது வரலாறாகும்.

மகாபாரதத்தின் ஒரு சிறிய பருவத்தை 4100 பாடல்களில் பாடிய இப்புலவர் பாரதக்கதை முழுவதையும் பாடியிருந்தால் அது ஒரு லட்சம் கவிதைகளையும் தாண்டியிருக்கும். அதிராம்பட்டினத்தில் பள்ளிவாசலின் அருகே அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அண்ணாவியாரின் மகனார் சையிது மீராலெப்பை தந்தை இறந்தபிறகு அவரது மீது சமரகவி பாடினார். ஜீவரத்னகவி என்ற சிறப்புப் பெயருடன் விளங்கினார். மனை அலங்காரம், மதீனக் கலம்பகம், வாள்விருத்தம், பரிவித்தம், யானை விருத்தம் போன்றவை பாடியுள்ளார்.

அண்ணாவியார் எடுத்தாண்ட உவமைகளும் உருவகங்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் அமைந்துள்ளது. சீவகசிந்தாமணி, பெரியபுராணம், கம்பராமாயணம் போன்ற காப்பியங்களில் காணப் பெறும் இலக்கிய மரபுகளை முற்றிலும் அடியொற்றிய கவிகளைப் பாடியுள்ளார்.

"காவெலாம் மலரின் கூட்டம் கனியெலாம்
தேனின் கூட்டம்
பூவெல்லாம் மிஞிறின் கூட்டம்
பொருப்பியக் கோட்டின் கூட்டம்
மாவெலாம் குயிலின் கூட்டம்
வரம்பெலாம் வாழைக்கூட்டம்
நாவெலாம் பாவின் கூட்டம்
நாடெலாம் செல்வக் கூட்டம்"

என்று குருநாட்டின் வளத்தைக் காட்டுமிடத்துக் கம்பன் அயோத்தி வளத்தை காட்டுவதைப் போல் காட்டி யுள்ளார். அண்ணாவியாரின் சமயப்பொறை வியப் புக்கும் பாராட்டுக்கும் உரிய நிலையில் காணப் படுகிறது. எடுத்துக்கொண்ட கதை பாரதக்கதை. பாரதக் கதையின் மூலவேர் கண்ணன் எனவே கண்ணனை அவர் வாழ்த்திப்பாடுகின்ற பாடல்கள் ஆழ்வார் ஒருவர் பாடும் உருக்கத்துக்கு இணையானவை எனில் அது மிகையாகாது.

"கருதரிய பெரும்சலதிச் சலசவனப்
புதுமை சொல்லக் கடவர் யாரோ?
அரவில் நடித்ததும் மருது சகடை உதைத்
ததும் சிலைபெண் ஆக்கி கங்கை
விரவ அரன் முடிதரிக்க உதவுபதத்
தின்பெருமை வினாவப் பொன்னின்
நிருதனைச் சென்று அருமறையை வெளிக்கொணர்ந்த
பெரும் பொருளை நேசிப்போமே" (சாந்தாதி. சயிந்தவ.1)

இப்பாடலில் திருமாலின் அவதாரங்கள் அடுக்கப் பெற்று வாழ்த்தப்பெறுகின்றன. நிரல் நிரையில் அவதாரங்கள் பின்னிலிருந்து முன்னர்க் கூறப்பட்டு உள்ளன.

அண்ணாவியாரின் சாந்தாதி அசுவமகம் கவனம் பெறாமல் போனது போலவே M.K.M. அப்துல் காதிறு ராவுத்தவர் அவர்கள் இயற்றிய பாம்பன் பாலசுப்பிர மணியசுவாமி கோவில் கும்பாபிஷேக வழிநடைச்சிந்து நூலும் கவனம் பெறாமல் போனது வரலாற்றுப் பிழையாகும். இந்நூல் மதுரை ஸ்ரீ மீனாம்பிகை பிரசில் பதிக்கப்பெற்று 1904 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இச்சிந்து நூல் 30 கண்ணிகள் கொண்டது. இந்நூலில்

"இது சிவகங்கை வக்கீலும், இந்திரகுல ராஜவம்ச அகம்படியார் டிஸ்டிரிக் ட்டுசலைப் பிரஸி டெண்டும் தமிழபிமானியும், சீமானும், சிவநேசச் செல்வரும் ஆகிய மகா - ஸ்ரீ எஸ். சீனமுருகு பிள்ளையவர்கள் நடாத்தும் பாம்பன் பாலசுப்பிர மணியர் கோவில் கும்பாபிஷேக தரிசனைக்குச் செல்வார் பலருள் ஒரு தலைவன் தனது ஆருயிர்க் காதலிக்கு அச்சிவகங்கையிலிருந்து பாம்பன் நகர் வரையுமுள்ள மார்க்க விஷேடங்களையும் பாலசுப்பிரமணியசுவாமி கோவில் கும்பாபிஷேகப் பெருமை பலவற்றையும் எடுத்துக் கூறுந் தன்மையில் விளங்கி நிற்பது." (M.K.M. அப்துல் காதிறு ராவுத்தர், 1904:முகவுரை)

என்று முகவுரையில் கூறியுள்ளார். காப்புச் செய்யுளில் முருகனுக்கும் சரஸ்வதிக்கும் துதி பாடியுள்ளார். தன் காதலிக்கு வழி காண்பித்துச் செல்லும் கவிகள் இன்பச் சுவைகளைத் தரக்கூடியவை

"தாலுகாக் கச்சேரி யீதே அது
தானேதெப் பக்குளம் மாதே அருள்
தங்கும் கௌரி விநாயகர் கோவில் ரா
ஜாக்கள் அரண்மனை பாராய் இனித்
தான்கடை வீதியும் நேராய் இதில்
தக்கவியாபாரம் சீராய் செயும்
சாமர்த்தியத்தைநீ தேராய் விலை
தந்தாலெது வுந்தாமத
மின்றாயுட னின்றீகுவர்
சற்புத்தியில் வெர்மிஞ்சுவர்
ஒப்பற்றவ ணிகதந்திரர்
சரசத்திலி தம்பற்பல
சொலிமிக்கத னம்பெற்றவர்
தருமத்திலும் நினைவுற்றவர்
இனிமற்றுள தெதிர்நிற்பது" (பத்மினி)

என இவ்வாறு வழியைக் காட்டிக்கொண்டு செல்லும் போதே முருகனின் பெருமைகளை விரிவாகப் பேசி யுள்ளார். இந்நூலை இசுலாமியப் புலவர் ஒருவர் பாடுவதாக நாம் நினைக்க முடியாது. அருணகிரியார் பாடுவதைப் போலப் பாடியுள்ளார்.

அண்ணாவியாரின் சாந்தாதி அசுவமகம் M.K.M. அப்துல்காதிறு ராவுத்தரின் பாலசுப்பிரமணியசுவாமி கோவில் கும்பாபிஷேக வழிநடைச்சிந்து இரண்டு நூல்களும் பதிப்பு நெறிப்படி பதிப்பிக்கப்பட்டுள்ளது. செய்யுள் முதற்குறிப்பு அகராதி, நூலைப் புரிந்து கொள் வதற்கான முன்னுரை, ஏடு கிடைத்த முறை போன்றவை தரப்பட்டுள்ளன. ஆனால் இரண்டு நூல்களிலும் உரை இல்லை. தமிழில் நல்லிணக்கண நூல்களாக உள்ள இந்நூல்கள் உரையுடன் வெளிவரவேண்டும். சமயப் பொறையை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்ல இந்நூல்களின் வழியை நாடலாம்.

### உசாத்துணை நூல்கள்


1. கோவிந்தசாமி (தமிழாக்கம்) எம்.என்.ராய் 1999இ இசுலாமின் வரலாற்றுப் பாத்திரம், விடியல் பதிப்பகம்.
2. அப்துல் ரஹீம் 195இ முஸ்லீம் தமிழ்ப் புலவர்கள், யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ் சென்னை
3. எஸ்.ஏ. முகம்மது இபுறாகிம் 2009 கடையநல்லூர் முஸ்லிம்கள் வரலாறு, சிராஜும் முனீர் நற்பணி மன்றம் கடையநல்லூர்.
4. பொ.வேல்சாமி 2014 வரலாறு என்பது கற்பிதம், முகம் வெளியீடு, கோவை - 5.
5. எம்.கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர் 1904 பாம்பன் பாலசுப்பிரமணியசுவாமி கோவில் கும்பாபிஷேக வழிநடைச்சிந்து, மீனாம்பிகை பிரஸ் மதுரை.



# பளியர் வாழ்வும் சமூகக் கட்டமைப்புகளும்

முனைவர் கோ.ஜெயக்குமார்

சமூகத்தில் மனித இனம் தோன்றிய காலம் முதலே அவர்களைச் சார்ந்த பிரச்சனைகளும் உருவெடுத்தன. வாழ்வியல் சூழலுக்கேற்ப அதிலிருந்து தன்னை காத்துக் கொள்ள மனிதன் பல்வேறு அடக்குமுறைகளையும், சமூகக் கட்டுப்பாடுகளையும் வகுத்துக்கொண்டான். நாகரிகத்தின் வளர்ச்சியினால் சமூக ஒழுக்கங்களிலும், கட்டுப்பாடுகளிலும் மாற்றங்களும் தேவைப்பட்டது. தனது சமூகத்திற்காக வகுத்து வைத்திருந்த பல்வேறு கட்டுப்பாடுகளில் இருந்து மாற்றத்தை நோக்கி அவன் பயணிக்கத் துவங்கினான்.

அவனது பயணத்தின் துவக்கமாகத்தான் தனக்கான வாழ்விடம், உணவு, உடை, தொழில் உள்ளிட்ட கட்டுப்பாடுகள். அவற்றில் இருந்து மெல்ல மெல்ல விலகத்துவங்கினான். இந்த இடைவெளி அவனது பல்வேறு பண்பாட்டு விழுமியங்களை சிதைக்க தொடங்கிவிட்டது என்று கூறலாம். இயற்கைக்கும் அவனுக்குமான தொடர்பு சிதைந்து போய்க்கொண் டிருக்கிறது. எதை நாகரிகம் என்று கருதினானோ அந்த நாகரிகம் அவனது வாழ்வியல் கட்டமைப்புகளை கொஞ்சம் கொஞ்சமாக இழக்கச் செய்து வருகிறது.

இந்தப் பின்புலத்தில் தான் பளியர் இனக்குழு மக்களின் சமூக வாழ்வியலை பார்க்கும் போது இயற்கை யோடு பின்னிப்பிணைந்த அவர்களது வாழ்வியல் சிதைக்கப்படுவதையும் அதனால் அம்மக்கள் இயற்கை சூழலை தொலைத்த வாழ்க்கையை நோக்கிப் பயணப் படுவதையும் களஆய்வின் வழியாக நேரடியாகப் பார்க்க முடிகிறது. நடைமுறை வாழ்வில் தவறுகள் என்பது எதிர்பாரமல் நிகழ்வது. சில தவறுகள் திட்ட மிட்டு அரங்கேற்றுவது. இதில் எந்த வடிவத்திலான தவறுகளாக இருந்தாலும் தண்டிக்கப்படவேண்டும் என்பதே அனைவரது எதிர்ப்பார்ப்பாகும். ஆனால் திட்டமிட்டு செய்யும் தவறுகளுக்கு தண்டனையும் அதிகப்படியாக தண்டிக்கப்படவேண்டும். அதே நேரத்தில் இயற்கை சூழலோடு வாழும் மக்களின் வாழ்வியலையும் பாதுகாக்க வேண்டும்.

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பழனி மலைத் தொடர் பகுதியில் உள்ள பாச்சலூர் அருகே உள்ள கடைசிக்காட்டிற்கு மற்றும் ஒட்டியுள்ள மலை கிராமங் களுக்குச் செல்வதற்காக ஒட்டன் சத்திரத்தில் இருந்து 14 கொண்ட ஊசி வளைவுகளை கடந்து சென்றோம்.

இந்த களஆய்வில் பல இடங்களில் பலரை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. கடைசிக்காட்டில் ஆண்டியப்பன் (வயது-60) என்பவரையும், பூதமலையில் இறந்துபோன கருப்பன் என்பவரது மனைவி முத்தம்மாளையும் (வயது-65) அவரது மகன் வெள்ளைச்சாமியையும் (வயது-20) மகள் ராணி (வயது-28) ஆகியோரையும், செம்பிரான் குளத்தில் நாகராஜன் என்வரையும் (வயது-50) இவரது மனைவி கருப்பாயியையும் (வயது-45), ராஜகாளியம்மன் கோயில் பூசாரி பாலன் (வயது-70) அம்மக்களின் தலைவர் தோப்படியான் (வயது-60) உள்ளிட் டோரையும், பட்டியக்காட்டில் தலைவர் ஜோதிமணி (வயது-55) மற்றும் கரியமாள் (வயது-57), லட்சுமி (வயது-53) ஆகியோரையும் சந்தித்து பெறப்பட்ட பல்வேறு தகவல்களின் பின்புலத்தோடு இந்த ஆய்வுக்கட்டுரை அமைகிறது.

பாய்ச்சலூர், கடைசிக்காடு, பூதமலை, செம்பிரான் குளம், பட்டியக்காடு உள்ளிட்ட பகுதிகளில் வாழும் பளியர் சமுகத்தினரை நேரடியாக பார்த்த போது தான் அவர்களின் சமூகம் சார்ந்த கட்டுப்பாடுகளை பார்க்கவும் தெரிந்து கொள்ளவும் முடிந்தது. குறிப்பாக அம்மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு எப்படி பஞ்சாயத்து மூலம் தீர்வு கண்டார்கள். ஒருவர் கூறும் தீர்ப்பை எப்படி அனைவரும் ஏற்று செயல்பட்டு வருகின்றனர் என்பது பாராட்டுதலுக்குரியதே.

தினமும் பயணம் வாகனங்களில் அல்ல தங்களது கால்களால் தான். சுமைகளை கொண்டு சேர்க்கும் காவல் தெய்வங்களாக இவர்களது பொதி குதிரைகள் விளங்கு கின்றன. மலையின் எற்றங்களை கடந்து சென்றால் தான் வாழ்க்கைக்கான தேடல்கள். இல்லை என்றால் வெறுமையே. அதிகார மையமும் அரசாங்கமும் இவர் களுக்கான முழுமையான தேவைகளை இன்னும் தொடக்க நிலையில் கூட நிறைவு செய்யவில்லை என்பதை நேரடியாக காணமுடிந்தது. காலம் காலமாக செய்துவரும் தொழிலைக்கூட தொடரமுடியாத நிலை தான் வாழ்க்கை உள்ளது. தொழிலை கைவிட்டாலும் அடுத்த ஒரு அடியை எடுத்து வைத்து வளர்ச்சிக்கான பாதையில் பயணிக்கவும் இவர்களால் முடியவில்லை.

முழுமையான வளர்ச்சி காணமுடியாத சூழ்லில் மலைத்தோட்டங்களில் தினக்கூலிகளாகவும், வாரக்கூலி களாகவும், மாதக்கூலிகளாகவும் தங்களுக்கான தற் போதைய வாழ்க்கையை கட்டமைத்துக் கொண்டு உள்ளனர். வாழ்க்கைச் சூழல் மலையின் ஏற்றத்தைப் போல கடுமையானதாக இருந்தாலும் அவர்களின் பண்பு மட்டும் மலையின் உயரத்தைப்போன்று உயரமாக இருக்கின்றது. எளிமையான அன்றாட தேடல்களை மட்டும் நிறைவு செய்துகொள்வதாக உள்ளது.

அடர்ந்த மலைப்பகுதியில் இயற்கையோடு வாழும் பளியர் சமூகத்திலும் சமூக கட்டுப்பாடுகள் ஏராளமாக உள்ளன. இதனை தலைமை வழிநடத்திச் செல்கிறது. இந்தப் பின்புலத்தோடு பளியர்களின் வாழ்க்கையையும் சமூக கட்டுப்பாடுகளையும் விரிவாக காணலாம். பளியர் சமுதாயத்தைக் கட்டுப்படுத்தும் தலைமைகளுக்கு என்ன பெயர்? மொத்த சமூகத்தில் பளியர்களை எப்படி அழைக்கிறார்கள்? அவர்களின் பங்களிப்பு என்ன? என்ற வினாக்களுக்கு முதலில் விடைகாண வேண்டியது அவசியம்.

மலை கிராமங்களில் வாழும் பளியர்கள் முழுமை யாக மண்ணாடி சமூகத்தில் தேர்வு செய்யப்படும் தலைவரான பட்டக்காரான் (அப்பச்சி) என்பவருக்கு கட்டுப்பட்டவர்களாக உள்ளனர். பட்டக்காரர் (தலைவர்), மந்திரியார் (ஆலோசகர்), செட்டுமை (பொருளாளர்), தேராடியார் (பூசாரி) ஆகியோரின் கீழ் செயல்படுபவர்களாக முன்னோடும் பிள்ளைகள் (தலைமைகளின் கட்டளைகளை ஏற்று செயல்படும் புலையர்கள்) உள்ளனர்.

கோயில் நிகழ்வுகளில் குழு நடனம், இசை நிகழ்ச்சிகள் போன்ற நிகழ்வுகளில் மட்டும் ஊர் தலை மைகள் அழைத்தால் பளியர்கள் வந்து பங்கேற்பார்கள். பட்டக்காரர்களின் காலில் விழுந்து ஆசிவாங்கும் வழக்கம் பளியர்களிடம் உண்டு. தற்போதைய தலை முறையினர் இதை மறுப்பதால் மண்ணாடியாரின் சாபத்தால் பளியர் இனம் அழிந்து வருவதாக சொல்லப் படுகிறது. பளியர் தங்களை மலசர் என்றும் தெய்வப் பளியர் என்றும் அழைக்கப்படுவதாக கூறுகிறார்கள்.

பளியர் சமூகத்தில் தலைமைகளை மூப்பன், தோப்படியான் என அழைக்கப்படுகின்றனர். தற்போது மூப்பன் என்ற பெயர் வழக்கத்தில் இல்லை. இந்த பெயர் சுமார் 15 ஆண்டு காலமாக அழைக்கப் படுவதில்லை என்று கூறுகின்றனர். இவர்களுக்குள் தலைவரை தோப்படியான் என்று அழைக்கும் வழக்கம் தற்போது உள்ளது. பொருளாளர், செயலாளர் போன்ற பொறுப்புகளும் தற்போது உள்ளது. கோயில் பணிகள் மற்றும் பூசைகள் செய்பவரை பூசாரி என்றே அழைக்கின்றனர்.

பளியர் சமூகத்தில் தோப்படியான் (தலைவர்) எப்படி தேர்வு செய்யப்படுகிறார்? அதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டும்? வாரிசு தேர்வுமுறை உண்டா? என்ற வினாக்களும் எழுகின்றன. இதனைப்பற்றி அம் மக்களிடம் கேட்ட போது தலைவர் என்று நாங்கள் அழைக்க மாட்டோம் எனவும் தோப்படியான் என்று தான் அழைப்போம் எனறும் கூறுகின்றனர். நாற்பத்தி எட்டு மலை கிராமத்தின் பிரதிநிதிகளாக சுமார் 56 பேர் சேர்ந்துதான் தலைவரை தேர்வு செய்வோம். போட்டியிடும் நபர்களில் எந்த நபரின் பெயரை அதிகமான எண்ணிக்கையில் அழைக்கப்படுபவரோ அவரே வெற்றிபெற்றதாக அறிவிக்கப்படுவார். தகுதி என்று ஒன்றும் இல்லை. நேர்மைதான் முதல் தகுதி. வாரிசுகள் நேர்மையாக இருந்தால் அவர்களே தொடந்து வருவதற்கும் வாய்ப்புள்ளது. இல்லை என்றால் பதவி பறிக்கப்படும் என்று கூறுகின்றனர்.

தோப்படியானுக்கு (தலைவர்) சமுதாயத்தில் அளிக்கப்படும் முக்கியத்துவம் என்ன அவரது அதிகாரங்கள் எப்படி உள்ளது என்று பார்த்தால் குலதெய்வமான பூதநாச்சி, பளிச்சியம்மன் இவர்களுக்கு அடுத்த நிலை தோப்படியானைப் பார்க்கின்றனர். ஏன் இவர்களை வாழும் கடவுளாக மதிக்கின்றனர். இவர்கள் கூறும் முடிவுகளே இறுதியானதாக உள்ளது. கிராமத்தில் நடைபெறும் எந்த நிகழ்வானாலும் இவர்தான் பேசும் அதிகாரம் பெற்றவராக இருந்து வருகிறார். தலைவர் தேர்வு செய்யப்பட்டபின் கொண்டாட்டங்கள் நிகழ்த்துவதில்லை. தலைமையை பார்க்கும் போது வணக்கம் செலுத்தும் வழக்கம் உண்டு.

தேர்வு செய்யப்படும் தலைவர் பிடித்தவராக தேர்வு செய்யப்பட்டால் கைகளை தட்டி இசைக்கருவிகளோடு குழு நடனம் மட்டும் நிகழ்த்தும் வழக்கம் உண்டு. இது போன்ற நிகழ்வுகள் மகிழ்ச்சியின் உச்ச வெளிப் பாடாகும். தலைமை சரியாக செயல்படவில்லை என்றால் நீக்கி விட்டு மாற்று தலைவரையும் தேர்வு செய்யும் அதிகாரம் பெற்றவர்களாக பளியர்கள் உள்ளனர். பிடிக்காத தலைமை தேர்வு செய்வது கடினம். அப்படி தேர்வானால் நீண்ட நாள் பதவியில் இருக்க விடமாட்டார்கள்.

பஞ்சாயத்து அறிவிப்பு முறை, நடைபெறும் நேரம், எந்த இடங்களில் அமர்ந்து பேசுவார்கள், தற்காலத்தில் பஞ்சாயத்து முறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறதா என்று பார்த்தால் பளியர்கள் வாழும் பகுதி பெரியதாக இருந்தால் தண்டோரா மூலம் அறிவிப்பது. இல்லை சிறிய பகுதியாக இருந்தால் வாய்வழியாக அறிவிப்பது, நிகழ்வுகளை அறிவிப்பாளர் களை இரண்டு விதமாக அழைக்கின்றனர். தண்டல் என்பவர் ஊர் பொது நிகழ்வுகளை மக்களுக்கு அறிவிப் பவர், முதல் தண்டல் இவர் இறப்பு செய்திகளை கூறுவர்.

காலை நேரங்களில் அதிகமாக பஞ்சாயத்து நடை பெறும் நேரமாகும். குறிப்பாக காலை நேரமான 7 மணி முதல் 8 மணிக்குள் நடைபெறும். ஊரில் பொது இடங்களில் பஞ்சாயத்து பேசுவர். உதாரணத்திற்கு பூதமலையில் கூட்டாம் பாறை என்ற ஒரு இடம் உள்ளது. அதே போல செம்பிரான்குளத்தில் உள்ளவர்கள் ராஜகாளியம்மன் கோயில் அருகேவும், பட்டியக்கட்டு மக்கள் பளிச்சியம்மன் கோயில் அருகே உள்ள கருமாரியம்மன் கோயில் அருகேவும் பேசுவர். பஞ்சாயத்தின் முடிவிற்கு அனைவரும் கட்டுப்பட்டு செயல்படுவர். தற்காலத்திலும் பஞ்சாயத்து கட்டுப் பாட்டோடு நடைபெறுகிறது.

பூத நாச்சிக்கு வைகாசி மாதத்தில் திருவிழா நடைபெறும். பளிச்சியம்மன் திருவிழா சித்திரை மாதத்தில் மூன்று நாட்கள் நடைபெறும். மக்கள் அனைவரும் தலைவர் தலைமையில் ஒன்று கூடுவர். ஊர் பொது இடமான கோயில் அருகே அனைவரும் சமமாக அமர்ந்து பேசுவார்கள்.

ஒரு வீட்டிற்கு எவ்வளவு பணம் தருவது என முடிவு செய்வார்கள். அதன் படி பணம் வசூலிக்கப்படும். குறிப்பாக பட்டியக்கட்டில் தலைவர் ஜோதிமணி, செயலாளர் பாண்டி, பொருளாளர் ஆறுமுகம் ஆகியோர் தலைமையில் திருவிழாக் கூட்டங்கள் தற்போது நடைபெறுகிறது. பளிச்சிக்கு அண்ணன் தம்பி நான்கு பேர் ஆகும். மண்ணாடி, ஆசாரி, பளியர், புலையர் மட்டும் (கோயிலுக்குள் வரமுடியாது என்ற கட்டுப்பாடு உள்ளது), ஆனால் புலையர் வணங்கும் கருமாரி கோயிலில் இவர்கள் மூவரும் செல்வார்கள். ஒருமுறை புலையர் ஒருவர் கோயிலுக்குள் நுழைய முயன்ற போது பளிச்சியம்மன் தூக்கி வீசியதாகவும் நம்புகிறார்கள்.

வழிபாட்டு முறையில் தெகப்பட்டி (வேப்பிலை போன்ற இலை), பொறிகடலை, வெற்றிலை பாக்கு, காதோலை, கருமணி, சூடம், பத்தி, தேங்காய், பழம் போன்ற பொருட்கள் பெண் தெய்வத்திற்கு. கருப்பண்ண சாமி போன்ற ஆண் தெய்வமாக இருந்தால் சுருட்டு, சாராயம், கஞ்சா (தற்போது இல்லை) ஆகியனவும்

வைத்து வழிபாடு செய்யப்படும். வேட்டை ஆடிய காலத்தில் மான், யானை, காட்டெருமை (தெய்வமாக கருதுவோம்) இவற்றை தவிர்த்து காட்டுப்பன்றி, ஆடு, கோழி பலியிடுவதை வழக்கமாக கொண்டிருந்தனர். தற்போது வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் நடை முறையில் உள்ளதால் ஆடு, கோழி மட்டும் பலி கொடுக்கும் வழக்கம் உள்ளது. முற்காலத்தில் சாராயம் அருந்திவிட்டு (பூதநாச்சி கென்று ஒரு இசை) மரபு சார்ந்த கொட்டு இசையோடு ஆடி மகிழ்வர். தற்காலத்தில் திரைப்பட பாடல்களுக்கு ஆடுகிறார்கள். மதுவிற்கு அனைவரும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர் இளைஞர்களை தவிர்த்து.

வழிபாட்டு முறையில் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சனை என்னப் பாதுகாப்பு அம்சங்கள் தற்போது விழாக்காலங்களில் எப்படி மேற்கொள்கிறார்கள் என்று பார்த்தால், பளியர்கள் 61 குல தெய்வங்களை வழிபடுவதாக கூறுகின்றனர். பஞ்சாயத்திற்கு செல்லும் போது தலைவர் (தோப்படியான்) குல தெய்வத்தை வணங்கிவிட்டு தான் செல்வாராம். பளியர் சமுகத்தில் செதுக்கப்பட்ட சிற்பவழிபாடு இல்லை. தற்போது தனியார் முதலாளிகள் தோட்டங்களை வாங்கி விட்டதால் அந்தப் பகுதிகளில் குலதெய்வமான பூதநாச்சி இருப்பதால் அந்த இடங்களில் சென்று வழிபாடு செய்ய முடியவில்லை. இதுபோன்ற நம்பிக்கை சார்ந்த சடங்குகளை தொடர்ந்து நடத்த நவீன விவசாயம் மேற்கொள்ளும் பெருமுதலாளிகளிடம் இருந்து மீட்டுத் தரவும் கோரிக்கை வைக்கிறார்கள்.

எதனால் பளியர் வழிபாட்டு முறை சிதைந்து வருகிறது என்று பார்த்தால் முதலாளித்துவ ஆதிக்கத்தின் உச்சம் தான். குறிப்பாக செப்பிரான்குளத்தில் (தனியார் பெரு முதலாளி இருவர் 1000 ஏக்கர் வாங்கி நவீன விவசாயம் செய்வதால்) வசிக்கும் பளியர்கள் இந்த சிக்களுக்கு ஆளாகியுள்ளனர். வேப்பிலை பயன்பாடு அவர்களின் வழிபாட்டு முறையில் இல்லை அதற்கு மாறாக தெகப்பட்டி என்ற இலையை (திருவிழா, காத்து கருப்பு,காட்டுப்பகுதியில் வேலை பார்க்கும் போது பருவம் எய்தும் பெண்கள் தலையில் வைப்பது) அனைத்திற்கும் பயன்படுத்துகின்றனர்.

முற்காலத்தில் பாதுக்காப்பு என்பது நம்பிக்கையும் மக்களும் தான். மக்கள் இயற்கையோடு பின்னிப் பிணைந்திருந்ததாலும் தங்களை தாங்களே பாதுகாத்துக் கொண்டனர். தற்காலத்தில் விழாக்காலங்களில் பாதுகாப்பிற்கு காவல்துறைக்கு அழைத்து நடத்து கின்றனர். மூன்று நாட்களும் இம்மக்களோடு தங்கி எந்த சண்டையும் இல்லாதவாறு பாதுகாப்பாக இருந்து விட்டுச் செல்வதாக கூறுகிறார்கள். காவல்துறையினர் இதுபோன்ற காலங்களில் மட்டும் வருவர். காரணம் வெளியாட்கள் வருவார்கள் என்பதால் முன் எச்சரிக்கை நடவடிக்கைக்காக என்று கூறுகிறார்கள்.

தோப்படியான் கட்டுப்பாட்டில் எந்தெந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படுகிறது. பஞ்சாயத்து முறைக்கு கட்டுப்படாத பிரச்சனைகளை எப்படி எதிர் கொள்கிறார்கள் இவர்கள் ஊர் திருவிழா நடத்துவது, பெண்களை கிண்டல் செய்தல், திருமணம் சார்ந்த பேச்சு வார்த்தைகள், பிரச்சனைகள், கொள்ளைச் செயல்கள் (திருடிச்செல்லுதல்), வெளியாட்கள் மூலம் நடைபெறும் குற்றங்கள், சிறுவர்கள் செய்யும் குற்றங்கள் இவைகள் பற்றி பஞ்சாயத்தின் மூலம் பேசி தீர்வு காணப்படும். உதாரணத்திற்கு திருவிழா காலத்தில் ராமசாமி என்பவர் சுமார் 20 லிட்டர் சாராயம் விற்பனைச் செய்வதை அறிந்த பட்டியக்காடு மக்கள் அவரை பிடித்து அடித்ததுடன் கை மற்றும் கால்களை கட்டிப்போட்ட நிலையில் மூன்று நாள் வைத்திருந்தனர். அத்துடன் ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்துள்ளனர் இது தற்போது 5 ஆயிரத்தை தாண்டுகிறது. இதனால் தான் தற்போது காவல்துறையின் பாதுகாப்போடு திருவிழாக்கள் நடைபெறுகிறது.

பஞ்சாயத்திற்கு கட்டுப்படாத பிரச்சனைகளான வெளியாட்கள் தவறுகள் செய்தல் குறிப்பாக காதல் திருமணம், கொள்ளைச்சம்பவங்களுக்கு காவல் துறை மூலம் தீர்வு காண்கின்றார்கள். உதாரணத்திற்கு பூத மலையைச் சேர்ந்த முத்தன் என்பவரது பசுமாடு ஒன்றை தட்டக்குழி இளைஞர் திருடிச்சென்றுவிட்டார். தாண்டிக்குடி காவல் நிலையத்தில் முத்தன் கொடுத்த புகாரில் காவல் துறையினர் பளியர் சமுகத்தின் பிரதிநிதி களை வைத்துக்கொண்டு மாடு வேண்டுமா இல்லை பணம் வேண்டுமா எனக் கேட்க வேறு மாடுதான் வாங்கித்தரமுடியும் அதே மாட்டை மீட்க முடியாது என்பதால் நாற்பதாயிரம் பணம் வாங்கிக்கொண்டு உள்ளனர். இது போன்று தான் தீர்வு காணப்படுகிறது.

பஞ்சாயத்து முறையில் அபராத தொகை என்பதோ தண்டனை என்பதோ தவறு செய்பவர்கள் திருந்தி வாழ்வதற்கான வாய்ப்பாக மட்டுமே பார்க்கப்பட்டது. சமூகத்தில் சிலர் தவறு செய்தவர்களை சில நாட்களோ அல்லது சில மாதங்களோதான் வேறுபாடு பார்த்து பழகுவர். பிறகு அந்த குற்றச்சாட்டு நாளடைவில் மறைந்து போகும். குறிப்பாக தவறிழைத்தவர்கள் சகமனிதர்களோடு வாழும் சூழலை ஏற்படுத்திக் கொடுத்ததோடு அவர்களின் பண்பாட்டை சிதைக்காமல் பாதுகாத்தது. மாறாக வாழ்வியலையும் சிதைக்கவில்லை.

ஆனால் தற்காலத்தில் காவல்நிலையங்களுக்கு சென்றால் காவல் துறையினர் அணுகும் முறை முற்றிலும் மாறாக உள்ளது. அவர்களின் அணுகு

முறையும் எங்களது பண்பாட்டுச் சூழலை சிதைக்கும் விதமாக உள்ளது. பளியர் சமூகத்தில் தவறு செய்த வரிடம் முழு விசாரணை மேற்கொண்ட பிறகு ஆலோசித்து பலரது கருத்துக்கள் கேட்ட பின்பு தான் தீர்ப்பு வழங்கப்படும். ஆனால் காவல் நிலையத்தில் அப்படியொரு சூழல் இல்லை. அதிகாரிகள் எந்த சட்டப்பிரிவை பயன்படுத்த நினைக்கிறார்களோ அதனை வழக்குகளாக பதிவு செய்கின்றனர். இதனால் வாழ்விடம், உறவுகள், சுதந்திரம் அனைத்தையும் இழக்க நேருகிறது.

தோப்படியான் 101 ரூபாய் முதல் 1001 ரூபாய் வரைமட்டுமே அபராத தொகை இருக்கும். அந்த குற்றச்சம்பவத்திற்கு ஏற்றாற்போல தொகையும் இருக்கும். அப்படி விதிக்கப்படும் அபராத தொகையை ஊர்காரர்கள் முன்னிலையில் கோயில் உண்டியலில் குற்றம் செய்தவர் செலுத்துவார். சில நேரங்களில் அபராத தொகையுடன் பொது மன்னிப்பு போன்று கோயில் முன்பு விழுந்து வணங்க வேண்டும். கோயில் பூசாரி கொடுக்கும் திருநீற்றை நெற்றியில் பூசிக்கொள்ள வேண்டும். வழக்கம் போல அவர் உறவுகளோடு பழகலாம். வாழ்ந்த இடத்தில் வாழலாம். எனவே இந்த அமைப்பு முறையைதான் இவர்கள் விரும்புகிறார்கள்.

நீதிமன்றங்களுக்கு செல்லும் போது அவர்களின் தீர்ப்புதான் இறுதியானது. கல்வி அறிவில்லதாவர்களாக நாங்கள் இருப்பதால் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு மட்டுமே தெரியும். பணபலம் இல்லாததால் வழக்கறிஞர் களையும் இவர்கள் நாடமுடியாது. சிறைதண்டனை என்பது எங்களின் அடிப்படை வாழ்வில் இருந்து முழுமயாக மாற்றிவிடுகிறது. குடும்பம், சமூகம், சூழல் இவற்றில் இருந்து வேறுவொரு நிலைக்கு அழைத்து செல்கிறது. தனிமையில் மனரீதியிலான மாற்றங்களுக்கு நாங்கள் ஆளாக நேரிடுகிறது. சொல்வதென்றால் எங்களின் வாழ்க்கையை தொலைத்த நிலைக்கு சென்று விடுகிறோம். நேரம் என்பது சூறையாடப்படுகிறது. முடிவு என்பது கேள்விக்குறியாகிறது. அடுத்த கட்ட வாழ்க்கை என்பது முடிவுக்கு வருராத வாழ்க்கையாக உள்ளது. தற்கால சட்டங்கள் எங்களின் வாழ்வியலை பாதுகாக்கவில்லை மாறாக சிதைக்கிறது.

தொழில் பாதுகாப்பு என்பது பழைய சமூகக் கட்டுப்பாடான வாழ்க்கை முறையில் இருந்ததா இல்லை தற்கால வனபாதுகாப்புச் சட்டம், வன விலங்கு பாது காப்புச் சட்டம் போன்றவற்றால் பாதிக்கப்படுகிறதா என்று பார்க்கின்ற போது தொழில் என்றால் எதை சொல்வதென்றே தெரியவில்லை அந்த நிலையில் தான் இம்மக்களின் தற்போதைய வாழ்க்கை உள்ளது. காரணம் வனபாதுகாப்புச் சட்டம் மற்றும் வனவிலங்கு பதுகாப்புச் சட்டம் போன்ற நவீன சட்டமுறைகள் நாங்கள் காலம் காலமாக செய்து வந்த தொழிலை சிதைத்து விட்டது. தொழில் முறையை இரண்டு வகையாக பிரித்துக் கொள்ளலாம். நவீன சட்டத்திற்கு முந்தைய தொழில், பிந்தைய தொழில் என்ற முறையில் பார்க்க முடிகிறது.

முற்கால தொழில்முறை என்பது மரபு சார்நதாகவும் அதே நேரத்தில் இவர்களின் பாதுகாப்பை சிதைக்காமலும் பாதுகாத்தது. வேட்டைத் தொழில் மட்டுமே தெரிந்த இம்மக்களுக்கு தற்போது அதனால் கிடைக்கப்பெறும் உணவும் கிடைக்கவில்லை. காட்டுப்பன்றி, மலையாடு, முள்ளம் பன்றி, முயல், உடும்பு, புறா, காடை போன்றவை விருப்பிய உணவாக கிடைக்கப்பெற்றது. துப்பாக்கி போன்ற ஆயுதங்கள் இருந்தன. வேட்டைக்கும் இவர்களின் பாதுகாப்பிற்கும் பயன்பட்டது. தற்போது இல்லை, காவல் நிலையங்களில் ஒப்படைத்து விட்டனர். இயற்கையில் கிடைக்கப்பெற்ற மரங்களான மூங்கில், கருந்துவரை, கானப்புங்கலான் போன்றவற்றின் கொம்புகளை வெட்டி கூர்மையாக்கி வேட்டைக்குப் பயன்படுத்தினோம். இந்த வேட்டைத்தொழில் சுமார் பத்தாண்டுகாலமாக இவர்கள் செய்யவில்லை. இதனால் இயற்கையில் கிடைக்கப்பெற்ற உணவினை உண்டு நோயில்லாமல் வாழ்ந்து வந்த நிலை இழந்ததாக வேதனையடைகின்றனர்.

தற்காலத்தில் வளர்ப்பு கோழி மற்றும் ஆட்டுக்கறி போன்றவற்றை உண்கிறார்கள். தோட்ட வேலை களான வாழைக்கு குழி எடுத்தல், காப்பி தோட்டம் பராமரித்தல், இளவம் பஞ்சு (வொளவங்காய்) எடுத்தல், மிளகு, ஏலக்காய், எலுமிச்சை, கடுக்காய், கொய்யா, அவரை, பீன்ஸ், நுக்கல், நெல்லிக்காய், சாம்பிராணி எடுத்தல், அவகோடை என்ற வெண்ணைப்பழம், பலாப்பழம் போன்றவற்றை பராமரிக்கவும் எடுக்கவும் செல்கின்றனர். கிரமப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் நூறு நாள் வேலை சுய தொழில் என்றால் தேன் எடுத்தல், பாசை (பாசம் அவர்களின் வழக்கு) எடுத்தல் போன்றவை சுய வருவாய்க்கான தொழிலாக உள்ளது. இந்த உணவுமுறைகளால் பல்வேறு நோய்களுக்கு ஆளாகிறோம். நவீன மருத்துவத்தை நாடும் நிலையும் உள்ளது.

பளியர் சமுகத்தின் கட்டுப்பாடுகள் முற்காலத்தில் எப்படி பாதுகாக்கப்பட்டன இன்றைய நவீன வாழ்க் கையில் அந்தக்கட்டுப்பாடு எந்தெந்த வழிகளில் சிதைக்கப் படுகிறது. அதனை எப்படி எதிர்கொள் கிறார்கள் என்று பார்த்தால் மலையில் நடைபெறும் எந்த நிகழ்வுகளும் பளியர்களைத் தவிர மற்றவர்களுக்கு தெரியாது. குறிப்பாக பெண் ஒருவர் ஆணால் பாதிக்கப்பட்டால் இவர்களுக்குள்ளே பேசித்தீர்வுகண்டு திருமணத்தை முடித்து வைப்போம். அதனால் தற் கொலைகள் இன்றி உயிர்கள் பாதுகாக்கப்பட்டது. ஒரு விலங்கை வேட்டையாடினால் கிராமமே மகிழ்ச்சி யோடு உண்டு வாழ்ந்தனர். தற்போது வனத்துறைக்கு

தெரிந்தால் கைதுசெய்து பேப்பர் (நாளிதழ்), டிவியில் (தொலைக்காட்சி) போட்டு குற்றவாளியைப் போல சிறையில் அடைத்து விடுகிறார்கள். சமூகத்தோடு எங்களுக்கு இருந்த நெருக்கம் சிதைக்கப்படுவதோடு குற்றவாளி என உலகறிய செய்து விடுகிறார்கள். மலைக்கு இவர்கள் ராஜாவாக இருந்தகாலம் போய் எதைப் பேசினாலும் பயந்து பார்த்து பேசவேண்டியதாக தற்போதைய சூழல் உள்ளதாக வேதனை அடைகின்றனர்.

பளியர்கள் உழைப்பை மட்டுமே மூலதனமாகக் கொண்டவர்கள். இக்காலத்தில் உருவாக்கப் பட்டுள்ள நவீன சட்டங்கள் இம்மக்களை ஒரு பொருட்காட்சியாக மாற்றி விட்டதாகவும். மாறாக மக்களின் வாழ்வியலை பாதுகாக்கவில்லை என்று கூறும் இம்மக்கள் தங்களின் முன்னேற்றத்திற்காவோ அல்லது கல்வி வளர்ச்சிக்கோ உதவி புரியவில்லை என்பதையும் பதிவு செய்கின்றனர். சொத்துக்கள் சார்ந்து ஏற்படும் பிரச்சனைகள் பஞ்சாயத்து முறையில் உடனடித் தீர்வு காணப்பட்டதா இல்லை நீதிமன்றம் வாயிலாக உடனடித் தீர்வு கிட்டியதா என்று பார்க்கின்ற போது பெரிய அளவில் தற்போது சொத்துக்களை பளியர்கள் வைத்திருக்கவில்லை.

வாழும் வீடு மட்டும் தான் இம்மக்களிடம் உள்ளது. குறிப்பாக அந்த வீடும் மலைப்பகுதியிலேயே உள்ளது. முற்காலத்தில் நிலம் வைத்திருந்தவர்கள் அதனை பராமரிக்க முடியாமல் பெருமுதலாளிகளுக்கு கொடுத்து விட்டு தற்போது அவர்களிடம் வேலை செய்யக்கூடிய தினக்கூலிகளாகத்தான் உள்ளனர். வைத்திருக்கும் சொத்தில் பிள்ளைகளுக்கு தரும் வழக்கம் இந்தச் சமூகத்தினரிடம் இருந்ததுள்ளது. தற்போதும் அந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது. பெண்களுக்கும் சொத்தில் பங்கு கொடுக்கும் வழக்கம் உள்ளது. அவர்கள் வேண்டாம் என்றால் உடன்பிறந்த ஆண்கள் எடுத்துக்கொள்வார்கள். தற்போது தனிநபர் வனப்பகுதிகளில் 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருக்க கூடாது என்று கூறினாலும் தனியார் முதலாளிகள் மட்டும் 500 ஏக்கர், 1000 ஏக்கர் என எப்படி வாங்கி நவீன விவசாயம் செய்கின்றனர் என்ற கேள்வியும் எழத்தான் செய்கிறது.


பெரும்பாலும் சொத்து தொடர்பான பிரச்சனைகள் ஏற்படுவது மிகவும் அரிது என கூறுவதைப் பார்க்க முடிகிறது.

தற்காலத்தில் பளியர் சமுகம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் யாது தலைமையின் பங்களிப்பால் சமூக அமைதிக்காக மேற்கொள்ளப்படும் முக்கிய அம்சங்கள் என்ன என்று பார்த்தால் இவர்களின் வாழ்க்கைச்சூழல் இயற்கையோடு கலந்த ஒன்று. கட்டுப்பாடுகள் என்பது முக்கியத்துவம் வாய்ந்தது. உறங்கும் போதுதான் வீடுகளைப் பயன்படுத்துகின்றனர். வேற்று நபர்கள் யாரும் இவர்களின் சமூக கட்டுப்பாட்டில் தலையிடுவதை விருப்புவதில்லை. தற்போது சில அரசியல் ஊடாட்டம் சமூகத்தில் இடம்பெற்றுவிட்டது. இதனால் சில குழுக்களாக செயல்பட்டாலும் கூட இம்மக்களின் உன்னத உறவுமுறையை யாராலும் சிதைக்க முடியவில்லை.

அந்நிய நபர்களின் தலையீடு போன்றவற்றில் இருந்து இவர்களைப் பாதுகாக்கும் பொருப்பை அவர்களின் தலைமை ஏற்றுக்கொள்கிறது. உறங்குப் போது கூட சிறிய வீட்டிற்குள்ளே 5,6 பேர் படுத்து உறங்குகின்றனர். இவர்கள் விரும்பும் அமைதி இதுதான். நவீன சாதனங்கள் சில வாழ்க்கை முறையில் புகுந்து விட்டது இருப்பினும் எல்லா நேரங்களிலும் இவர்களால் அவற்றைப் பயன்படுத்த முடியாது. காரணம் மின்சாரம் எப்போது வரும் போகும் என்பது தெரியாது.

இன்றைய சூழலில் அண்டை மாநிலத்திற்கோ அல்லது வெளியூர்களுக்கோ வேலைக்காக செல்லும் போது இம்மக்கள் சில பிரச்சனைகளுக்கு தற்காலத்தில் ஆளாக நேரிடுகிறது. உதாரணத்திற்கு கர்நாடக மாநிலத்திற்கு கடைசிக்காட்டைச் சேர்ந்த மாரிமுத்து என்பவர் வேலைக்கு சென்று திருப்பிய போது சேலத்தில் காவல் துறையினர் பிடித்து விசாரித்துள்ளனர். பிறகு தோப்படியான் பெயரைச்சொல்லியும் அவரது கைப்பேசியில் பேசி உறுதிப் படுத்திய பிறகுதான் அந்த நபரை விடுவித்துள்ளனர், வெளிமாநில போலிசார் பிடித்தால் குடும்பத்தாரிடம் கூடச் சொல்லாமல் சிறையில் அடைக்கப்படுவதால் அவர் வேலையில் உள்ளாரா இல்லை சிறையில் உள்ளாரா என்று கூட உறவினர்கள் தெரிந்துகொள்ள முடியாத சூழலும் தற்காலத்தில் உள்ளது. உதராணத்திற்கு ஆந்திரமாநில காவல்துறை செம்மரம் வெட்டுவதாக பலரை கொன்றும் சிறையில் அடைத்தும் துன்புறுத்தி வருவதாக வேதனை தெரிவிக்கின்றனர்.

உறவுகளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் கூட்டு நிகழ்வுகளிலும் பாதுகாக்கப்படுகிறது. குடும்ப விழாக்களானாலும் சரி ஊர் பொது விழாக்களானாலும் சரி உறவுகளோடும் ஒற்றுமையை பேனும் விதத்திலும் கொண்டாடுவதில் பளியர்களின் கூட்டு வாழ்க்கை முறையை புரிந்து கொள்ள முடிகிறது. தற்போது அரசு பளியர் இனமக்களுக்கான மானிடவியல் காட்சியகத்தை உருவாக்க வேண்டும். அதில் அவர்கள் இழந்த வாழ்க்கையில் பயன்படுத்திய வேட்டைக் கருவிகள், ஆடைகள், அணிகலன்கள், சடங்குசார்ந்த பொருட்கள் ஆகியவற்றை பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் எதிர்வரும் ஆய்வாளர்களுக்கும், சமூகத்திற்கும் அவர்களைப்பற்றி புரிந்துகொள்ளவும் ஆய்வுக்கும் பயனளிக்கும். எனவே பளியர் இனமக்களின் வாழ்வியலை சிதைப்பதை நிறுத்திக் கொள்வதே நாம் அவர்களுக்கு செய்யும் உதவியாகும். ●



# பழந்தமிழ் மக்களின் மனைகளும் வடிவமைப்பும்

பழனிக்குமார்

'மனை' என்று இலக்கியங்களில் குறிப்பிடப்படும் குடியிருப்புகள் திண்ணை, தூண், அட்டில், முற்றம், படிக்கட்டு, சாளரம், வாயில், மாடம் என்ற அமைப்பு களுடன் வடிவமைக்கப்பட்டிருந்தன. இவ்வமைப்புகள் குடியிருப்புக் கட்டமைப்பின் வளர்ச்சிக் காலங்களில் இடம் பெற்றிருந்தன. இவை பொருளாதாரத்தில் சற்று உயர்ந்த நிலையில் உள்ளவர்களின் குடியிருப்புக் கட்டமைப்புகளாக இருந்திருக்கக்கூடும் எனக் கருத முடிகிறது.

### மனை விளக்கம்

'மனை' என்ற சொல்லிற்குக் குடியிருப்புடைய வீடு, குடும்பம், இல், சிற்றில், பேரில், நற்றாய், பசுதொழுவம், சூதாடு பலகையின் அறை, நிலஅளவு வகை, மனைவி, வாழ்க்கை, வெற்றிடம், 2400 சதுரடி அல்லது குழி, நிலப்பகுதிகள் எனப் பல பொருள்கள் காணப்படு கின்றன. 'மனை' என்ற சொல் பதினைந்து பொருள்களை குறிப்பிடுகின்றது." பொதுவாக மனை என்பதற்கு வீடு

என்னும் பொருள்தான் மிகுதியாகக் கூறப்படுகின்றது. மனைவியின் மாட்சி, மனை அமைவிடச் சிறப்புப் பற்றி இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. இப்பதிவுகள் மூலம் மனைகள் கட்டப்பட்டிருந்த முறைகள், சுற்றுப்புறச் சூழல் போன்றவற்றை அறியமுடிகின்றன. முறைப் படுத்தப்பட்ட ஒழுங்கான கட்டமைப்பில் அமைந்த குடியிருப்புகளை மனை என்று இலக்கியங்களில் சுட்டப் படுகின்றன. இதனை,

"கூரை நல்மனைக் குறுந்தொடி மகளிர்" (நற்79:2)

"............நளிமனை நெடுநகர்" (ஐங்குறு.324:3)

"மனைக் கொண்டு புக்கனன் நெடுந்தகை" (அகம்.384:13)

"நெடு நா ஒள; மணி கடிமனை இரட்ட" (நற்.40:1)

"திருவுடைத் திருமனை ஐது தோன்று கமழ் புகை
வருமழை மங்குலின் மறுகுடன் மறைக்கும்
குறும்பு அடு குண்டு அகழ் நீள் மதில் ஊரே"
(புறம்.379:16-18)

"துஞ்சு மனை நெடுநகர் வருதி" (ஐங்குறு.60)

என்ற பாடலடிகள் மூலம் அறியமுடிகிறது.

### சிற்றில்

'சிற்றில்' என்பதற்கு சிறுகுடில், சிறுவீடு, சிறுமியர் கட்டி விளையாடும் மணல்வீடு, சிற்றில் பருவம் எனத் தமிழ் அகராதி பொருள் கூறுகின்றது. சிறுவடிவமைப்பை யுடைய வீடுகளைச் சிற்றில் என இலக்கியங்கள் கூறுகின்றன. சிறுமிகள் மணலில் கட்டி விளையாடும் சிறுமணல் வீடும் என்று அழைக்கப்படுகிறது. இதனை,

"சிற்றில் நல் தூண்......................" (புறம்.56:1)

"வரிபுனை பரி சிறந்து ஓடி" (நற்.123:8)

ஏன்ற பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன. இத்தகைய வீடுகள் தூண்களுடன் கூடிய அமைப்புடன் இருந் துள்ளன. வளைந்த கால்களைத் தூண்களாகக் கொண்டு கட்டப்பட்டிருந்தன. இதனை,

"இடுமுள்வேலி முடக்கால் பந்தர்
புதுக்கலத்து அன்ன செவ்வாய் சிற்றில்"
(அகம்.394:9-10)

வீட்டின் முன் பந்தல் அமைப்புடன் கூடிய காய்ந்த முள் குச்சிகளைக் வேலியாகக் கொண்டு அமைக்கப் பட்ட வீட்டின் கட்டமைப்பைத் தெளிவாக அறிய முடிகிறது. பாடலடிகளில் செவ்வாய் சிற்றில் என்று கூறப்பட்டுள்ளதால் செம்மண் பூசப்பட்ட சிறிய மனைகளாகத் தெரிகிறது.

### பேரில்

பெரிய அளவில் கட்டமைக்கப்பட்டிருந்த வீடு களைப் பேரில் என இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. குடியிருப்பதற்குரிய வீட்டின் உறுப்புகள் குலைந்து செல்களால் சிதைக்கப்பட்டிருந்தாலும் ஒழுகாத நிலையில் பெரிய அளவிலான வீடுகள் இருந்துள்ளன. இதனை,

"அந்தோ! எந்தை அடையாப் பேரில்" (புறம்.261:1)

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம்.

### முன்றில் அமைப்பும் பயன்பாடும்

முன்றில் என்பது வீட்டின் முன்பகுதியாகும். வீட்டின் முன்நில அமைப்பு இன்றைய நாளில் நாகரிக வாழ்விடத்தின் உயர்நிலையாக விளங்குகிறது. பழந்தமிழ் மக்கள் பண்பாட்டினை அறியும் போது முன்றில் பயன்பாடு மிகுதியாக இருந்திருக்கிறது எனலாம். ஏனெனில் முன்றில் பயன்பாடு பற்றிச் சிறப்பாக வாழ்விடச் சூழலுடன் இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. குரம்பை, குடில், மனை, வீடு, அரண்மனை போன்ற குடியிருப்புகளின் கட்ட மைப்பில் முன்றில் அமைப்பையும் அதன் பயன் பாட்டையும் இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. இப்பதிவுகள் வீட்டின் முன் அமைப்பில் பயனுள்ள திறந்தவெளி இடமாக இருந்ததைச் சுட்டுகின்றன. நில பாகுபாட்டிற்கேற்ப வாழ்ந்த மக்களுக்கு பயன்படுமாறு குடியிருப்பின் ஒரு பகுதியாகவும் இருந்ததை அறிய முடிகிறது. வளர்ச்சிக் காலங்களில் உள்ள வீட்டின் கட்டமைப்புகளின் இடம் பெறுகின்ற இப்பகுதி முற்றம் என்று அழைக்கப்படுகிறது.

குறிஞ்சி நிலக்குடியிருப்பு கட்டமைப்பில் முன்றில் அமைப்புகள் திறந்தவெளி இடமாகக் காணப்படு கின்றன. இவ்வமைப்பில் செடி கொடிகள் வளர்ந்து பந்தல் போல இருப்பதால் உறங்கி ஓய்வெடுப்பதற்குரிய இடமாக இருந்துள்ளது. முன்றிலின் முன் பலா, வேங்கை, மல்லிகை போன்ற தாவரங்கள் இடம் பெறுகின்ற செய்தியால் இக்கட்டமைப்புகள் இயற்கைச் சூழலுடன் அமைந்திருந்ததை அறிய முடிகிறது. இதனை,

முன்றில் முஞ்ஞையொடு முசுண்டை பம்பி
பந்தர் வேண்டா பலர் தூங்கு நீழல் (புறம்.320:1-2)

"..................................செவ்வேர்ச்
சினைதொறும் தூங்கும் பயம் கெழு பலவின்
களையுடைய முன்றில்" (நற்.77:4-6)

"கூதளம் கவினிய குளவி முன்றில்
செழுங்கோள் வாழை அகல் இலைப் பகுக்கும்"
(புறம்.168:12-13)

என்ற பாடலடிகள் மூலம் அறிய முடிகின்றது. குறிஞ்சி நிலமுன்றில் கட்டமைப்பின் பயன்பாட்டினை,

"குறியிறைக் குரம்பைக் குறவர் மாக்கள்
வாங்கமைப் பழுவினிய தேறல் மகிழ்ந்து
வேங்கை முன்றில் குரவை அயரும்" (புறம்.129:1-3);

"தேம் பிழி நறவின் குறவர் முன்றில்" (அகம்.78:7)

என்ற பாடல்வரிகள் விளக்குகின்றன.

### இறப்பை அமைப்பு

தாழ்வாரத்தின் இறங்கிய பகுதி இறப்பை எனப்படும். இவ்வமைப்பு இறை, இறவாணம் என்று சுட்டப்படுகின்றது. குரம்பைகளின் வடிவமைப்பில் இறப்பையின் தோற்றம் ஒரேமாதிரி அமைவதைக் காணமுடிகிறது. நிலப்பாகுபாட்டிற்கேற்ப அமைந்த குரம்பைகளின் கூரையமைப்புகள் தாழ்வான குறுகிய இறப்பையினை உடையதாக இருந்தன.

"முண்டகம் வேய்ந்த குறியிறைக் குரம்பை" (நற்.207:2)

"குறியிறைக் குரம்பை" (புறம்.129:1)

"................................................செல்வர்
வகை அமர் நல்இல் அகஇறை உறையும்
வண்ணப் புறவின் செங்காற் சேவல்" (நற்.71-6-8)

"உள் இறைக் குரிஇக் கார் அணற் சேவல்" (நற்.181:1)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. பற்பல பிரிவு களாக அமைந்த மாடக்குடியிருப்புகளின் இறவாணம் புறாக்கள் உறங்குவதற்குரிய இடமாக இருந்துள்ளன. தீக்கடைக்கோல் பயன்படுத்தப்படாதக் காலங்களில் வீட்டின் முன் அமைந்துள்ள கூரையின் அடிப்பகுதியில் செருகி வைக்கப்பட்டிருந்தது. இதனை,

"இல் இறைச் செரிஇய ஞெலிபோல்" (புறம்.315:4)

என புறநானூறு கூறுகின்றது. பயன்பாட்டிற்குரிய சில பொருட்களை செருகி வைக்கின்ற பகுதியாக இருந்தது. இப்பழக்கம் இன்றும் மரபுதொடர்ச்சியாகக் காணப் படுகிறது.

### திண்ணை அமைப்பு

தமிழரின் பண்பாட்டில் பழங்காலம் தொட்டு இன்றுவரை வீட்டமைப்பில் திண்ணை என்பது ஒரு இன்றியமையாதக் கட்டமைப்பாகக் காணப்படுகிறது. வீட்டின் முன்பகுதியில் மேடை போன்று அமைக்கப் படும் இடத்திற்குத் திண்ணை என்று பெயர். இக் கட்டமைப்புத் திணை, திண்ணை, தெற்றி, வேதிகை, பீடிகை, என்னும் சொற்களால் குறிப்பிடப்படுகின்றது. திண்ணை வீட்டின் முன்பகுதியில் இடம் பெறும் கட்டமைப்பாக உள்ளதால் முற்றத்தின் விரிவாக்கமாகக் கருதமுடிகிறது. திறந்தவெளி முற்றங்களிலிருந்து திண்ணைக் கட்டமைப்பு சற்று மாறுபட்டதாக உள்ளது. ஏனெனில் அமர்வதற்கு, உறங்குவதற்கு ஒய்வெடுப் பதற்கு, விளையாடுவதற்கு என்ற தேவைகளின் அடிப் படையில் கட்டப்பட்ட அமைப்பாகத் திகழ்கின்றது. இதனை,

"தெற்றிப் பாவை திணி மணல் அயரும் (புறம்.283:1;;2)

என புறநானூறு சுட்டுகிறது. கல்லால் நிறுத்தப்பட்ட திண்ணைக் கட்டமைப்புப் பற்றிய செய்திகளும் தாவரங் களை வளர்த்த செய்திகளும் கிடைக்கின்றன. ●

## மடல்

வணக்கம். 'உங்கள் நூலகம்' ஜனவரி 2018 இதழில் டாக்டர் சு.நரேந்திரன் அவர்கள் எழுதிய 'இலக்கியத்தில் உணவே மருந்து' என்னும் கட்டுரையைக் கவனமாக வாசித்தேன். உணவு பற்றிய அருமையான கட்டுரை அது. நெல்லிக்கனி பற்றி விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நான் கரு நெல்லிக்கனியை இதுவரை பார்த்ததில்லை. இளம்பச்சை நெல்லிக்கனிதான் பார்த்திருக்கிறேன், சாப்பிட்டும் இருக்கிறேன்.


கள்ளைப் பற்றி விரிவாகக் கட்டுரையில் சொல்லப்பட்டிருக்கிறது. செயற்கையாக போதை ஏற்படுத்தாத பனங்கள்ளும், தென்னங்கள்ளும், ஈச்சங்கள்ளும் அருமையானவை. மருந்து வகைகளோடு இணைந்து உள்ள உடல் நலம் பேணுபவை. கள்ளுக்கடை எதிர்ப்பே கள் எதிர்ப்பாக மாறிப் பனை அழிவுக்குக் காரணமாகிற்று.

'பனை வாரியம்' என்றொரு வாரியம் தமிழகத்தில்; செயல்படுவதாக அறிகிறேன். அந்த வாரியத்தைச் சார்ந்தவர்கள் இவற்றையெல்லாம் சிந்தித்து செயல்பட்டால் தமிழகத்துக்கே நன்மை தரும். கள்ளை அரசே தன் மேற்பார்வையில் தயாரித்து மருந்து கலந்து விற்பனை செய்யலாம்.

டாக்டர் சு. நரேந்திரன் அவர்களுக்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள்.

-பொன்னீலன்

# சிறப்பான விற்பனையில்...








இந்தியச் சமயங்களும்
தத்துவங்களும்
அறிமுகம்
துரை.சீனிச்சாமி


தமிழகத்தில் சாதி உருவாக்கமும்
சமூக மாற்றமும்
(பொ.ஆ.800-1500)
நொபொரு கராஷிமா, எ.சுப்பராயலு




பிராமண போஜனமும்
சட்டிச் சோறும்
இடைக்காலத் தமிழகத்தில் வைதீகமும்
சாதி உருவாக்கமும்
ஆ.சிவசுப்பிரமணியன்

சோழமண்டலக் கடற்கரையும்
அதன் உள்நாடும்
பொருளாதார, சமூக, அரசியல் அமைப்பு (கி.பி.1500-1600)
எஸ்.ஜெயசீல ஸ்டீபன்
தமிழில்: ரகு அந்தோணி




# லெனின் காலத்தில் அவர் பற்றிய படைப்புகள்

பெரணமல்லூர் சேகரன்

ரஷ்யப்புரட்சியின் தாக்கம் காலனியாதிக்கத்தின் பிடியிலிருந்த நாடுகள் விடுதலை அடைய உந்து சக்தியாக இருந்தது எனின் மிகையன்று. அதற்கு ரஷ்யப் புரட்சி குறித்தும் அப்புரட்சிக்குத் தலைமை தாங்கிய லெனின் குறித்தும் அக்காலகட்டத்தில் வெளியான படைப்புகளும் நூல்களும் பெரும் பங்காற்றின.

இந்திய விடுதலைப் போராளிகள், ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராட, லெனினது உரைகளை, எழுத்துக்களை ஆர்வமுடன் கற்றறிந்தனர். மகாத்மா காந்தி, நேரு, ரவீந்திரநாத் தாகூர், மகாகவி பாரதியார், திரு.வி.க., சிங்காரவேலர் உள்ளிட்டோர் ரஷ்யப் புரட்சி குறித்தும் லெனின் குறித்தும் ஏராளமாக எழுதினர்.

ஆனால் மாமேதை லெனின் உயிருடனிருக்கும் போது சிலரே எழுதி வந்துள்ளனர்.

மராத்தி மொழியில் லெனினுடைய முதல் வாழ்க்கை வரலாறு 1922 ஆம் ஆண்டு வெளியிடப் பட்டது. அதை எழுதியவர் ராமகிருஷ்ண கோபால் பிடே என்பவர். அவர் பால கங்காதர திலகர் நடத்திய ஏடான 'கேசரி'யின் ஆசிரியர் குழுவில் 30 ஆண்டுக் காலம் பணிபுரிந்தவர். அதன் தலைப்பானது 'நிகோலாய் லெனின்: ரஷ்ய ஜனநாயகத்தின் ஸ்தாபகருடைய வரலாறு' என்பதாகும். கையெழுத்துப் பிரதி 1920ஆம் ஆண்டில் தயார் செய்யப்பட்டது. எனவே அது 1919ஆம் ஆண்டு வரையிலான சம்பவங்களை ஆராய்ந்தது.

நூலாசிரியர் அந்நூலில் "அது, ஆங்கிலேய ஏகாதி பத்தியம் கொடி கட்டிப் பறந்த நாட்களாகும்; இந்தியர் களாகிய நாங்கள் சுதந்திரத்திற்கான எங்களுடைய போராட்டத்திற்கான ஆதர்சத்தைப் பெற தெரிந்த ஒவ்வொரு ஆதாரத்தையும் நாடினோம்; லெனின் மற்றும் அவருடைய போல்ஷ்விக் ரஷ்யாவை விட சிறந்த ஆதாரம் வேறென்ன இருக்க முடியும்? ஆனால் அந்நாட்களில் இந்த ஆதாரங்கள் பொது மக்களுக்குத் தெரியாது; எனவே புரிபடாமல் இருந்தது; அந்தக் காரணத்திற்காகவே அது எங்களுக்கு மிகவும் கவர்ச்சி கரமாக இருந்தது. லெனினுடையதானது ஓர் இணை யற்ற தத்துவத்தோடு கூடிய புரட்சியின் முற்றிலும் புதிய பரிசோதனை என்று நாங்கள் உணர்ந்தோம்; அது நம்முடைய பண்டைக்கால தத்துவம் புகுந்திருந்த எங்களுடைய சிந்தனைக்கு ஒரு பெரும் ஈர்ப்பாக இருந்தது.

ஆனால் அந்நேரத்தில் ஒரு புத்தகத்தை எழுது வதற்கான விவரங்கள் முற்றிலும் அற்பமாகவே இருந்தன; ரஷ்யாவிலிருந்து எந்தவொரு அதிகாரப்பூர்வ ஆவணமும் இந்தியாவிற்குள் நுழைய அனுமதிக்கப்பட வில்லை. கேசரி அலுவலகத்திலும் நூலகத்திலும் கிடைத்த அன்னிய செய்தித்தாட்களும், இதர வார மாத ஏடுகளும் இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவிலிருந்து வந்தவையே..." என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு லெனின் உயிரோடிருந்த காலத்திலேயே வெளிவந்த மராட்டிய வாழ்க்கை வரலாற்று நூலுக்குப் பின்னிருந்த வழிகாட்டும் சக்தி லோகமான்ய திலகரின் பிரதான தளபதிகளுள் ஒருவரும் டாடா எதிர்ப்பு முல்ஷி பேத்தா சத்யாகிரகத்தின் தலைவரும், மூன்று தலை முறைகளாக எண்ணற்ற மகாராஷ்டிர இடதுசாரிகள், சோஷலிஸ்ட் மற்றும் கம்யூனிஸ்டுகளின் வழிகாட்டி மற்றும் நண்பரும் மரியாதைக்குரியவருமான முதுபெரும் சேனாதிபதி பாபட்டே ஆவார். சேனாதிபதி பாபட்டிற்கு மற்றுமொரு சிறப்புமுண்டு; 1917 ஆம் ஆண்டில் ரஷ்யாவின் மகத்தான நவம்பர் சோஷலிஸ்ட் புரட்சி வெற்றி பெற்றது என்ற செய்தியைக் கேட்ட வுடன் அவர் அதைப் பெரி மற்றும் வறுத்த பயறை வினியோகித்துக் கொண்டாடினார். (இவைதான் ஏழை மகாராஷ்டிரர்களின் நொறுக்குத் தீனி)

இங்கிலாந்திலிருந்தபோது, ஒரு ரஷ்யப் பெண்ணிட மிருந்து எவ்வாறு வெடிகுண்டுகள் தயாரிப்பது என்ற விபரத்தைத் தான் தெரிந்து கொண்டதாக சேனாபதி பட் நினைவு கூர்ந்துள்ளார். லெனினைச் சந்திக்கக் கிடைத்த வாய்ப்பைத் தவறவிட்டது குறித்து அவர் மிகவும் வருத்தப்படுவார். அவர் லண்டனிலிருந்த பொழுது லெனினும்அவர் வசித்த அதே கட்டிடத்தில் சில நாட்கள் தங்கியிருக்க நேர்ந்ததுண்டு.


1920ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17ஆம் தேதிய 'கேசரி' வார ஏடு 'லெனினுக்கு தார்மீக வெற்றி' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை வெளியிட்டது அதில்...

"போல்ஷ்வியம் என்பது ஒரு பொருளாதாரக் கொள்கை; ஆனால் சந்தர்ப்பசூழ்நிலைகளால் அதை உருவாக்கியவர்கள் ரஷ்யப் புரட்சியுடன் தொடர்புடை யவர்கள்; அதனால் அவர்கள் இங்கிலாந்தின் எதிரிகளாக கணக்கிடப்பட்டார்கள்; அந்தக்கோட்டை குறித்த தகவல்களைப் பெறுவது மற்றும் அதை விவாதிப்பது நீண்டகாலமாகவே ஒரு துணிச்சல்மிக்க மற்றும் ஆபத்தான கடமையாகக் கருதப்பட்டது" என்று கூறப் பட்டிருந்தது.

லெனினுடைய வாழ்க்கை வரலாறு இந்தி மொழியில் 1921ஆம் ஆண்டில் வெளிவந்தது. "போல்ஷ்விக் ஜாதுகர்" (போல்ஷ்விக் மந்திரவாதி) என்ற தலைப்பில் கல்கத்தாவிலிருந்து வெளிவந்தது. அதை எழுதியவர் ராம்சங்கர் அவஸ்தி என்பவர். அவர் கான்பூரிலிருந்து வெளிவந்த 'வர்த்மான்' என்ற இந்தி நாளிதழின் ஆசிரியர் ஆவார். அதன் முன்பக்கத்தில் லெனின் படம் அச்சிடப்பட்டு அதன் கீழே பின்வரும் வரிகள் இருந்தன.

"இவர்தான் லெனின். அசமத்துவத்தை அழிப்பவர். சோஷலிசத்திற்காக சிங்கம்போல் கர்ஜிப்பவர்." ●

NCBH **அமோகமான விற்பனையில்...**




பசு. கவுதமன்
தொகுத்தளிக்கும்
பெரியாரின்
எழுத்துகளுக்கான
செம்பதிப்பு

**A4** அளவு, தரமான தாள்,
அழகிய வடிவமைப்பு,
கெட்டி அட்டை கட்டு

"நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வர வேண்டும்?"

# பெரியார் ஈ.வெ.ராமசாமி

**மொழி, கலை, பண்பாடு, இலக்கியம், தத்துவம் பற்றிய தொகுப்பு**

**தொகுதி 1: மொழி**
**தொகுதி 2: கலையும் பண்பாடும்**
**தொகுதி 3: இலக்கியம்**
**தொகுதி 4: தத்துவமும் சொற்சித்திரமும்**
**தொகுதி 5: சித்திரபுத்திரன் கட்டுரைகளும் உரையாடல்களும்**

**3770 பக்கங்கள் அடங்கிய ஐந்து தொகுதிகளும் ₹ 4800/-**



# சிலப்பதிகாரம் வழக்குரை காதை பண்டைத் தமிழர் நீதிமுறை

அத்திவெட்டி வே. சிதம்பரம்

பண்டைத் தமிழரின் நீதிமுறை தமிழர்கள் உருவாக்கிய நீதி முறை (Jurisprudence) ஆகும். தமிழர்களுக்கென்று தனித்த நீதிமுறை இருந்து வந்துள்ளது என்பது சங்க இலக்கியங்கள், சிலப்பதி காரம் முதலியவற்றால் அறிந்து கொள்ள முடிகிறது. பழமையான இந்திய நீதிமுறை பற்றி ஆய்வு செய்தவர்கள் தமிழர்களின் நீதிமுறை பற்றி கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. சிலப்பதி காரம் வழக்குரை காதையில் விவரிக்கப்பட்டுள்ள தமிழரின் பழமையான நீதிமுறை பற்றிய ஒரு சுருக்கமான ஆய்வு இக்கட்டுரை.

**சிலம்பு பற்றிய ஆய்வுகள்**

பல்வேறு கோணங்களில் சிலப்பதிகாரம் பற்றிய ஆய்வுகள் வெளிவந்துள்ளன. 1892ம் ஆண்டு உ.வே.சாமிநாதையர் உரையுடன் சிலப்பதி காரத்தை முழுமையாக பதிப்பித்த பிறகு 1904ம் ஆண்டு வி.கனகசபை பிள்ளை The Tamils Eighteen

Hundreed Years Age என்ற நூலை வெளியிட்டது முதல் சிலப்பதிகாரம் பற்றிய ஆய்வுகள் முனைப்பு பெற்றன. பின் அரசியல் இயக்கமாகவே வளர்ச்சி பெற்றது.

**சிலம்பு மொழிபெயர்ப்பு**

சிலப்பதிகாரம் பற்றி 1900ம் ஆண்டு பிரஞ்சு மொழியில் பேராசியர் Julien Vinsion என்பவர் எழுதியும் 16, 17, 18 காண்டங்களை மொழி பெயர்த்தும் உள்ளார். 1939ல் வரலாற்று பேராசிரியர் வி.ஆர். ராமச்சந்திர தீட்சிதர் ஆங்கிலத்தில் உரை நடையில் சிலப்பதிகாரத்தை முழுமையாக மொழி பெயர்த்து ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ் வெளியீடாக வந்துள்ளது. சிலப்பதிகாரம் பற்றி வெளி உலகம் அறிந்து கொண்டது.

**இந்திய சட்டம் நீதிமுறை பற்றிய ஆய்வு**

20ம் நூற்றாண்டு தொடக்கத்தில் இந்தியர் களுக்கு தனித்த சட்ட நீதி வரலாறு உண்டு என்பதை நிறுவும் முயற்சியாக பல ஆய்வு நூல்கள் வெளிவந்தன. எஸ்.வி. விஸ்வநாதாவின் International law in Ancient India (1925) Julius JollyÆ‹ The Hindu las and custom (1928) S. வரதாச்சாரியின் The Hindu Judicia Sysyte (1945) ஆகியவை குறிப்பிடத்தக்கன. இவைகளில் தமிழர்களின் சட்ட நீதிமுறை பற்றிய செய்திகள் இடம் பெறவில்லை. பண்டைத் தமிழரின் நீதிமுறை பற்றி தமிழக வரலாறு எழுதியோர் ஒரு சிலர் சிறு குறிப்பு வரைந் துள்ளனர். தனித்த முழுமையான ஆய்வு வெளி வந்ததாக தெரியவில்லை.

**சங்க காலத்தில் நீதிமன்றம்**

பண்டைத் தமிழகத்தில் நீதி வழங்குவதற்கு தனியா அவைகள் (நீதிமன்றங்கள்) இருந்ததை சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

"சிறந்த கொள்கை அறங்கூறவையம்"

என்று மதுரை காஞ்சிபுரம் (492)

"மறங்கெழு சோழ ருறந்தை யவைத்
தறம் நின்று நிலையிற்று"

என்று புறநானூறும் (39) குறிப்பிடுகின்றன.

தகுதியானவர்களை நீதிமன்றத்தில் நீதி வழங்க நியமிக்க வேண்டியது அரசன் கடமை என்பதை

"அறனிலை திரியா வன்பின் வையத்துத்
திறனிலொருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தே னாகுக"

என்று புறநானூறு (71) குறிப்பிடுகிறது.

அறங்கூறு அவையத்தில் நடுவர்களாக பார்ப் பனர்கள் இருந்தனர் என்று வரலாற்று பேராசியர் வி.ஆர். ராமச்சந்திர தீட்சிதர் தனது "Studies in Tamil Literature and History" (பக்.218) நாளில் குறிப்பிடுவதை மறுத்து பேராசியர் சு. வித்தியானந்தன் தனது தமிழர் சால்வு நூலில் (பக். 64) "இவ்வாறு கொள் வதற்கு சங்க நூல்களில் சான்று இல்லை" என்று குறிப்பிடுகிறார். சங்க காலத்தில் சிறந்த நீதி வழங்க நீதிமன்றங்கள் இருந்தன என்பது தெளிவாகிறது.

**வாழ்வுரிமை** (Right to life)

1948ம் ஆண்டில் ஐ.நா.வின் உரிமைகள் பிரகடனத்தின் அடிப்படையில் இந்திய அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள சட்டப் பிரிவுகள் 21 மற்றும் 22 உருவாக்கப்பட்டு உள்ளது. சட்ட வழிமுறை (Procedure established by Law) அல்லாமல் ஒருவரது வாழ்வுரிமை பறிக்கப்படக்கூடாது என்று கூறப் பட்டுள்ளது. கோவலன் கள்வன் என்பது அவன் மீது குற்றச்சாட்டு சுமத்தி விசாரணை செய்து குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்கப் பட்டிருக்க வேண்டும். இந்த உண்மையை வலியுறுத்தி கூறுகிறது சிலம்பு.

**இயற்கை நீதி** (Natural Justice)

இந்த கோட்பாடு குற்றம் சாட்டப்படுபவர் தன் தரப்பு கருத்தை தெரிவிக்க வாய்ப்பு கொடுக்கப் பட வேண்டும். அவரது பதிலை கேட்ட பிறகே இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டும். என்று கூறுகிறது. இதனை Audi Alteram Parterm என்று லத்தீன் மொழியில் சட்டத்துறையில் கூறுவர். இந்த இயற்கைக்கு மாறாக பொற்கொல்லன் குற்றச்சாட்டை மட்டும் வைத்துக் கொண்டு கோவலன் பதிலை கேட்காமலேயே நீதி வழங்கப் பட்டு விட்டது. இது தவறு என்று உணர்த்துவதன் மூலம் இயற்கை நீதி கோட்பாடு வலியுறுத்தப் படுகிறது.

**குற்றச்சாட்டு சாட்சியத்தின் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட வேண்டும்**

குற்றம் நிரூபிக்கப்படும் வரை குற்றம் சாட்டப் பட்டவர் நிரபராதி என்றே கருதவேண்டும். குற்றச்சாட்டு சாட்சியத்தின் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி (Beyong reasonable doubt) நிரூபிக்கப்பட வேண்டும். ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டு விடக் கூடாது என்பது இன்றைய சட்டமுறைமை. இந்த கருத்தை சிலப்பதிகாரம் வலியுறுத்துகிறது. கோவலன் கையில் சிலம்பு இருந்தது மட்டுமே சாட்சியம் ஆகாது. அது அரசியின் சிலம்பு என்பது நிரூபிக்கப் பட வேண்டும். அதன் பிறகுதான் குற்றம் நிரூபிக்கப்

பட்டதாக கொள்ள முடியும். தண்டனை வழங்கிய பிறகே கோவலன் நிரபராதி என்று நிரூபிக்கப் படுகிறது. ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டதால் அரசன் தானே கள்வன் என்று கூறி உயிர் விடுகின்றான்.

### குற்றத்தை சாட்டுபவரே நிரூபிக்க வேண்டும்

இந்த கோட்பாடு Aglo Sazon Jurisprudence அடிப்படையில் உருவாக்கப்பட்டு இன்று பெரும் பாலும் நடைமுறையில் உள்ளது. ஒரு சில வழக்குகள் விதிவிலக்கு. ஆனால் Frech Juris prudenceஇல் குற்றம் சாட்டப்பட்டவர் தான் நிரபராதி என்று நிரூபிக்க வேண்டும். சிலப்பதிகாரத்தில் பொற் கொல்லன் கோவலன் கள்வன் என்பதை நிரூபிக்க வில்லை. ஆனால் கோவலன் நிரபராதி என்று கண்ணகி நிரூபிக்கிறாள்.

### சாட்சியம் தான் வழக்கிற்கு முக்கியம்

பெரும்பாலும் குற்ற வழக்குகளில் சம்பவத்தை காண்கிறவர் அளிக்கும் சாட்சியம் முக்கியமாக எடுத்துக்கொள்ளப்படும். சாட்சியம் இல்லாமல் எந்த விஷயமும் நிரூபிக்கப்பட்டதாக ஏற்ற முடியாது. சிலப்பதிகாரத்தில் முத்தும், மாணிக்கமுமே சாட்சியம். கண்ணகி சிலம்பில் மாணிக்கம் இருந்தது. கோவலன் கள்வன் அல்லன் என்று நிரூபிக்கப்பட்டது.

### சிலம்பில் நீதிமுறை

சிலப்பதிகாரம் காட்டும் நீதிமுறை பண்டைத் தமிழரின் உயர்ந்த நீதி நிர்வாகத்திற்கு சிறந்த எடுத்துக் காட்டு ஆகும். இதனை தெளிவாக குறிப்பிடுகிறார் புகழ்பெற்ற வரலாற்று பேராசிரியர் A.L.Basham அவர் தனது The Wonder that was India நூலில் (பக்.472) சிலம்பு காட்டும் நீதிமுறை பற்றி Their (Tamils) stern respect for Justice என்று குறிப்பிடு கிறார்.

இந்திர விழவூரெடுத்த காதையில் பாவை மன்றம் பற்றி குறிப்பிடப்படுகிறது. அரசனும் அறங்கூறு அவயமும் நீதிமுறை கோடினால் பாவை கண்ணீர் விட்டு அழும் என்று குறிப்பிட்டு உள்ளது (வரிகள் 135-138) பொய்சாட்சி சொல் பவரை பூதம் புடைத்துண்ணும் என்றும் (வரி 131) குறிப்பிட்டுள்ளது.

சிலப்பதிகாரம் நூலின் 20-வது காதையாக அமைந்துள்ளது “வழக்குரை காதை” மொத்தம் 81 வரிகள் கொண்டது இந்த பகுதி. 49 வரிகளில் கண்ணகி அரசனை காண்பது வரையான விபரம் குறிப்பிடப்படுகிறது. 50-வது வரி மிக முக்கியமான ஒன்று “தேரா மன்னா!” என்று கண்ணகி அரசனை நோக்கி தன் முதல் வார்த்தைகளை கூறுவது கவனிக்கத்தக்கது. “தேரா மன்னா” என்பதன் பொருள் ஆராய்ந்து உண்மையை அறியாமல் என் கணவனை கொலை செய்துவிட்டாயே! என்று கண்ணகி குற்றம் சாட்டுகிறாள். “தேர்தல்’ என்பது சட்ட முக்கியத்துவம் வாய்ந்த வார்த்தையாகும்.

67-ம் வரியிலிருந்து 78-ம் வரையான 12 வரி களில் உச்சபட்ச காட்சி (Climax) நடந்து முடிந்து விடுகிறது.

கண்ணகி தன் கால் சிலம்பில் மாணிக்கம் உள்ளது என்கிறாள். அரசன், அரசியின் சிலம்பில் முத்து உள்ளது என்கிறான். கோவலனிடமிருந்து கைப்பற்றப்பட்ட சிலம்பு கண்ணகி முன் கொண்டு வைக்கப்படுகிறது. கண்ணகி அந்த சிலம்பை எடுத்து அடித்து உடைக்கிறாள். அதிலிருந்து மாணிக்க கற்கள் அரசன் முகத்தில் படுகிறது. அரசன் உண்மை தெரிந்தவுடன் நான் அரசன் அல்ல! நானே கள்வன் என்று கூறி மயங்கி வீழ்ந்து உயிர் விடுகிறான். இந்த காட்சியை,

> “என் காற் பொற் சிலம்பு மணியுடையரியே, எனத்
> தேம்மொழி உரைத்தது செவ்வை நன்மொழி
> யாமுடை சிலம்பு முத்துடை யரியே
> தருகென தந்து தான் முன் வைப்பக்
> கண்ணகி அணிமணிக்காற்சிலம்புடைப்ப
> மன்னவன் வாய்முதற் றெறித்தது மணியே, மணிகண்டு
> தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்
> பொன்செய் கொல்லன் தன் சொற்கேட்ட
> யானோ அரசன்! யானே கள்வன்
> மன்பதை காக்கும் தென்புலங் காவல்
> என் முதற் பிழைத்தது கெடுக என் ஆயுள் என
> மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே”

என்று இளங்கோவடிகள் சிறப்பான முறையில் காட்சிப்படுத்தியுள்ளார்.

“யானோ அரசன்! யானே கள்வன்” என்பதை “I am not the King! I am the Robber” என்று ஆங்கிலப் பேராசிரியர் கா. செல்லப்பன் தன் Ph.D., பட்ட ஆய்வு நூலான Shakespeare and Ilango as Tragedians என்பதில் மொழிபெயர்த்துள்ளார். தமிழரின் பழமையான குற்றவியல் நீதிமுறை இங்கே தெளிவாக விளக்கப்பட்டுள்ளது அறியத்தக்கது.

### முடிவுரை

பண்டைத் தமிழரின் நீதிமுறை பற்றிய விரிவாக ஆய்வு செய்யப்பட வேண்டும். தமிழர் களுக்கென்று தனித்த நீதிமுறை இருந்துள்ளது. இதனை சட்ட கல்வியின் பாடத்திட்டத்திலும் சேர்க்க வேண்டும். வரலாற்றில் உரிய முறையில் பதிவு செய்திடல் வேண்டும். ●